Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டிச.16-22, 2001

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 438

## மடவலை அநர்த்தம் பொறுப்பாளியார்?

## புதிய பிரதமர் புதிய சவால்



## உயிரைக் குடித்த இன்டர் நெட் செக்ஸ்



# ஆன்மீகம்



## இறந்தவர்கள் இப்படித்தான்

ஒரு தடாகத்தில் ஜந்துக்கள் சில வசிந்து வந்தன. தடாகத்தின் ஓரமாக உள்ள செடி மீது ஏறி உயரே போனால் மேல் உலகம் போகலாம் என்பது அவைகளின் நம்பிக்கை. எனவே அவை அந்தச் செடியின் மீது ஏறி ஏறி மேலே போகப் பார்க்கும். ஆனால் பெரும்பாலும் வழிக்கி விழுந்துவிடும். எனினும் ஒரு நாள் ஒரு ஜந்து உயரே போய்விட்டது. போனதும் திடீரென்று அதன் உருவம் மாறி இறக்கைகள் முளைத்துவிட்டன. மேலே போன அது கீழே உள்ள ஜந்துக்களை அடையவோ, அது உருமாறிய விஷயத்தை மற்ற ஜந்துக்களிடம் சொல்லவோ முடியவில்லை. அந்த ஜந்துக்கு என்ன ஆனது என்று மற்ற ஜந்துக்கள் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தன. இதுபோலத்தான் வாழ்பவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இறந்தவர்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.

ரி. குணவர்த்தன–களுவாஞ்சிக்குடி.

## ரமழானின் நற்செய்தி

அல்லாஹ் கூறுகிறான் ரமழான் முழுவதும் நோன்பு நோற்போருக்கு என்னுடைய திருப்தியையும் மன்னிப்பையும் நான் வழங்குவேன்.

என்னுடைய அடியார்களே! என்னிடம் நீங்கள் கேளுங்கள் உங்களுடைய மறுமை விஷயத்தில் எதனை நீங்கள் என்னிடம் கேட்டாலும் அதனை நான் நிச்சயம் கொடுப்பேன்.

உங்களுடைய உலக விஷயத்தில் எதையேனும் நீங்கள் கேட்டால் அதில் உங்களுக்குப் பலன் தரும் விஷயத்தில் நான் கவனம் செலுத்துவேன் என்று கூறுகின்றான்.

மேலும் இம்மாதத்தில் உங்கள் துஆக்களை ஏற்றுக் கொள்கிறான். தங்களைப் பற்றி மலக்குகளிடம் பெருமை பாராட்டிப் பேசுகிறான்.

ரமழான் மாதத்தை முடித்து ஈதுல்பித்ர் பெருநாளைக் கொண்டாடும் இந்நாளில் அல்லாஹ் அவன் அடியானுக்கு வழங்கிய வெகுமதிகளைக் கண்டு மலக்குகள் மகிழ்ச்சியடைந்து அவர்களுக்கு நற் செய்தி கூறுகின்றனர்.

ஆதாரம் தர்கீப்

எம். சி. கலீல்–கல்முனை–05.

## "ஜெயிக்க பெலன்"

பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். (1 யோவான் 4:4)

பாவம் சரீரத்தில் போராடுகிறது, உலகம் நம் ஆத்மாவிலே துக்கத்தையும், வருத்தத்தையும் கொண்டு வரப்போராடுகிறது, பிசாசு நம் ஆவியில் பயத்தையும், கலக்கத்தையும் கொண்டு வரப்போராடுகிறான். அசுத்த ஆவிகளும், மந்திரங்களும், சூனியங்களும் நிறைந்த உலகத்தில் தான் நாம் வாழ்கிறோம். இந்த ஆவிகளோடு நமக்கு போராட்டம் உண்டு என்று தான் வேதம் கூறுகிறது. (ஏ பேசியர் 6:12)

இந்த ஆவிகள் நம்மை சேதப்படுத்த முதலாவது நமக்குள் பயத்தைதான் கொண்டுவரும். ஆகவே தான் ஆண்டவர் "பயப்படாதே! பயப்படாதே!" என்று நம்மை தைரியப் படுத்துகிறார். உலகத்தில் இருக்கிற பிசாசைக் காட்டிலும், நமக்குள் இருக்கிற இயேசு பெரியவராயிருக்கிற படியால் நாம் பிசாசை ஜெயிக்க முடியும் (1 யோவான் 4:4) பிசாசை ஜெயிக்க கூடிய பெலனை அவரே உங்களுக்குத் தருகிறார். அல்லேலூயா! "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்" (யாக்கோபு 4:7) "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய (பிசாசை ஜெயிக்க) எனக்கு பெலனுண்டு" என்று நீங்களும் தைரியமாக சொல்லலாமே!

சகோ: டி. ஜேசுராஜா–ஹட்டன்.

## கவிதைப் போட்டி இல.438



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.12.2001

கவிதைப் போட்டி இல.438
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.435

**பரிசுக்குரிய கவிதை**

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### முடிவு

தோல்வியின் முடிவு கூக்குரல் அல்ல
கூக்குரலின் முடிவு மரணமும் அல்ல
துயரங்கள் இன்றி வாழ்க்கையுமல்ல
துணிந்து விட்டாலோ மரணத்தில்
கோழையும் அல்ல.

தெ. லோஜனா–கொழும்பு–06.



### இதுவா?

அங்கும் இல்லை
இங்கும் இல்லை
அந்தரத்தில் விடுபட்ட
ஆனாதை ஆத்மா.

ஏ. சேரன்–கீளியன் குடியிருப்பு.

### பாய்ச்சல்

"கடுஞ்சமர் ஓய்ந்திடச் செய்த
கருத்துப் பரிமாற்றங்கள் யாவும் முறிந்திட
கடுஞ்சினங் கொண்டிங்கே
கரும்புலி பாய்ச்சல் நடாத்துதோ"

கே. அரசேஸ்வரன்–யாழ்ப்பாணம்.

### வாழ்வதா

நிலத்தில் மனிதனாய் வாழ்வதா,
நீரில் மீனாய் வாழ்வதா,
வாழ்வில் பிணமாய் வாழ்வதா,
உறவுடன் கூடி வாழ்வதா
வேண்டாம்!
வானில் பறவையாய்.
பறந்து வாழ்வோம்!

முத்து–கதீஸ்–சித்தாண்டி.

### எவ்வகை..?

ஆப்கானுக்கெதிரான
யுத்த விமானங்களில்
நீ! எந்த வகையோ..?

எம். ஆர். எம். மபாஸ்–காத்தான் குடி–04.

### B2

ஆகாயத்தில் தோன்றும்
ஆடவர் யார்?
ஆப்கானை அழிக்க
அமெரிக்காவில் இருந்து
புறப்பட்ட B2 வோ..?

த. ஆனந்தன்–மன்னார்.

### வீண் முயற்சி

இத்தனை பேர்
சேர்ந்து தொலைத்த
சமாதானத்தை
உன் ஒருவனால்
எப்படியப்பா
எடுக்க முடியும்.

எஸ். பி. கணேஷ்–தாண்டியடி.

### தேடுகின்றேன்

உரிமையைத் தேடுகின்றேன்
உடல்களைத் தேடுகின்றேன்
மண்ணில் காணாச் சமாதானத்தை
நீரினுள் தேடுகின்றேன்.

சீதங்கவடிவேல்–மட்டக்களப்பு.

### ஏன் பறக்கிறாய்

சாதனை படைக்க
எண்ணுகின்றாயா!
இல்லை
சந்தர்ப்பவாதிகளின்
சதியை கண்டு
பயந்து பறக்கிறாயா!

வி. யோகா–பூண்டுலோயா.

### பறக்கலாம்!

இனவாதச் சேறும்
ஏமாற்று அரசியலும்
அதிகார வெறியும்
இந்நாட்டில் தொலைந்தால்
நாமெல்லோருமே
இன்பவானில்
இறக்கைகளின்றியே
பறக்கலாம்!

அ. சந்தியாகோ–கண்டி.

### தேடுதல்!

ஈரேழு உலகிலும்
போரில்லாத
உலகைத்தேடி
ஆராய்ச்சி நடத்த
பறந்து கொண்டிருக்கிறான்
ஒரு தமிழன்!

ஆர். பாலகிருஷ்ணன்–மாத்தளை.

### போலி அரசியலால்?

வாக்கு போட்டு
வெறுத்து போன
வாக்கொன்று
வாழ்வை முடிக்கிறது...

எஸ். பி. பாலமுருகன்–பதுளை.

### செல்வதேனோ?

மனிதா!
"விஞ்ஞான உலகம் இது
விண்ணை நோக்கிச் செல்லும்
வேளையில்-நீ
மண்ணை நோக்கிச்
செல்வதேனோ?

செ. விஜயதர்சினி–சீனக்குடா (திருமலை)

### சாக்கடை

பாதகமாயிலும் பெரிதல்ல
சாக்கடையில் குதித்தாவது
சாதகமாய் வாக்கு சேர்க்கும்
மேதகு பிரயத்தனம்

நிஸ்ருல் சுஹைனா–கும்புக்கத்துறை.

# வாசக[ர்] சாலை

முழுமையான முரசே!
தமிழுக்கு நீ
தனித்துவத்திற்கு நீ
தன் மானத்துக்கு நீ
சொற் சுவைக்கு நீ
பொருட் சுவைக்கு நீ
பொதுவாக வாசக நெஞ்சங்களின்
இதயங்களில் என்றென்றும் குடியிருக்கும்
அனையா தீபமான பத்திரிகையும் நீ
வாழ்க உன் பணி
வளர்க உன் சேவை!

எல். வீரதுரை, டிக்கோயா.

வாரத்துக்கு வாரம் நகரெல்லாம்
பூக்கும் வாசகர் முரசே!
நீர் பூவாக மட்டும் இருப்பின்
பூஜையில் உன்னை பூஜிப்பர்!
நீர் ஒரு தினமுரசாக இருப்பதால்
அனைத்து வாசகர் நெஞ்சங்களிலும்
நிலைத்து விட்டீர்!
வாழ்க முரசே!
வளர்க தின(ம்) முரசே!

ஆர். டீன், நேகம்பஹ.

என் உயிர் முரசே! நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். அதிலும் படிப்பினை ஊட்டும் 'பாப்பா முரசு', சிந்திக்க சிரிக்கவைக்கும் 'சிந்தியா பதில்கள்', கற்பனையை வளர்க்கும் 'கவிதைப்போட்டி', எழுத்தாற்றலை வளர்க்கும் 'சிறுகதை'ப்பக்கம், அதிரவைக்கும் அரசியல் பக்கம். இத்தனையும் என் மனதில் நிறைந்தவை. முரசே நீ வாழ்க வளர்க!

கலைப்பிரியன் வேணு,
பெரிய நீலாவணை–01.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

இனிய முரசே, நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் அருமையானவை. அற்புதமானவையாகும். 'நல்ல உரையாடல்' முகத்தோற்றமும் எதிர்காலமும் ஆகிய இரு அம்சங்களும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. மேலும் 'நிழலும் நிஜமும்' சிறுகதை வித்தியாசமானதாக அமைந்திருந்தது. காந்தி அருணாசலம் அவர்களின் கற்பனை திறனுக்கு எமது பாராட்டுக்கள்.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

முரசே!

உன் அழகுபார்த்து ஒவ்வொரு வியாழனும் மகிழ்ந்து கொள்வேன். உன்னை ரசிக்கும் ரசிகர்கள் பல்லாயிரம் பேர். நீ சுமந்து வரும் அமுதில் சுவைப்பது, 'தேன் கிண்ணம்', 'சிறுகதை', 'பாப்பாமுரசு', 'சிந்தியா பதில்கள்' இவைகளே. முரசே, உன் பணிமேலும் மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

ஜெ. லக்கி, பெரியகல்லாறு.

தினமுரசின் நீண்டகால வாசகன் நான். ஆரம்பகால முரசு. முரல் அனைத்தையும் சேர்த்தும் வைத்திருக்கிறேன். அன்று முதல் இன்றுவரை முரசின் வழி தனிவழிதான். 'அரசியல் கட்டுரைகள்', 'கவிதைகள்', 'பாப்பா முரசு', 'சினிமா' என்று முரசின் சகல அம்சங்களும் என்னை மிகவும் ஈர்த்துள்ளது. உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

ஆர். ராஜினி, பூண்டுலோயா.

என் அபிமான முரசே! உனக்கு நான் பல கவிதைகள் அனுப்பியும் ஒன்றுகூட பிரசுரமாகவில்லை. தரமானவற்றை நிராகரிக்கமாட்டாய் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து பல ஆக்கங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறேன். வாசகர்களின் படைப்புக்களுக்கு அதிக இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்று அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

எஸ். பிரதீப், ஹட்டன்.



அன்பு முரசுக்கு!

முன்னும் பின்னனும் வர்கணங்களினால் அச்சிடப்பட்டு இருபது பக்கங்களை சுமந்துத வரும் முரசே!

உனது முதல்பக்கத்தில் உள்ளடக்கத்தின் தலைப்புக்கள் சிலவற்றையும், இரண்டாம்பக்கம் 'ஆன்மீக' கருத்துக்களும், பக்கம் மூன்றின் செய்திகளும் நான்காம் பக்கத்தில் முரசு ஆசிரியரின் 'முரசம்'. ஐந்தாம் பக்கத்தில் அரசியல் பகுதி, ஆறாம் பக்கம் முரசின் விளம்பரங்கள். பக்கம் ஏழில் 'அதிரடி அய்யாத்துரை'. எட்டாம் பக்கம் 'ஹிட்ல'ரின் உண்மைத்தொடர். ஒன்பதாம் பக்கம் 'தகவல் பெட்டி'. நடுப்பகுதியாகிய வர்ண அச்சீட்டுப் பகுதியில் 'சினிமா' துணுக்குகள். முரசின் பன்னிரெண்டாம் பக்கம் 'தேன் கிண்ணம்'. பதின் மூன்றாம் பக்கம் பட்டுச்சேலை என்று தொடரும் சகல அம்சங்களும் பிரமாதம்.

ஏகாம்பரம் இளங்கோ, சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## மடவலை அநர்த்தம் பொறுப்பாளி யார்?

மடவளையில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் மீது அதிகார வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மாவனெல்லையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான உடமைகள் கொழுத்தப்பட்டு பலரின் உயிர் பறிக்கப்பட்ட சம்பவத்திற்குப் பின்னர் இம்முறை தேர்தல் வன்முறை என்ற பெயரில் பத்து வாலிபர்கள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

வழமைபோலவே அரசியல் வாதிகள் இந்த சம்பவத்தையும் 'வன்மையாக கண்டித்திருக்கிறார்கள்' அத்தோடு அநேகமாக அவர்களது கடமை முடிந்து விட்டது! ஆனால் இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அந்த 'வன்மையான கண்டிப்பு' மாத்திரம் போதுமான ஆறுதல் அல்ல. இந்த இளைஞர்களில் எவருக்கும், தாம் எதற்காக கொலை செய்யப்படுகிறோம் என்பது தெரிந்திருக்காது. இவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அல்லது ரவூப் ஹகீமின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகின்றது.

ஒரு சாதாரண நபர் தேர்தல் காலத்தில் அரசியல் வாதிகளின் பின்னால் திரிவதும், அவர்களுக்கு போஸ்டர் ஒட்டுவதும் நாட்டின் மீது கொண்ட பேரன்பினால் அல்ல. குறிப்பிட்ட கட்சி, அல்லது தாம் ஆதரவ தெரிவிக்கும் வேற்பாளர் வெற்றி பெற்றால் ஏதாவது ஒரு தொழில் அல்லது வெளிநாடு செல்ல ஏதேனும் உதவி என்ற பொருளாதாய எதிர்பார்ப்பில் தான். அரசியல்வாதிகளின் பின்னால் திரியும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒளிந்து கிடக்கும் யதார்த்தமான உண்மை இதுதான். மடவளையில் கொலை செய்யப்பட்ட இளைஞர்கள் அன்றைய தினம் வீட்டை விட்டு வெளிக்கிளம்பிய நோக்கமும் இவற்றோடு ஒத்திசைவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக அவர்களது அந்த முயற்சிக்கு உயிரை விலையாக செலுத்த வேண்டி ஏற்பட்டது.

மடவளை சம்பவத்தில் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அவரை கைது செய்யுமாறு ஐ.தே.க. கோரியுள்ளது. ரவூப் ஹகீம் நேரடியாகவே ஜெனரல் ரத்வத்தையை பொறுப்பாளியாகக் காண்கிறார். ரத்வத்தையின் மகன் லொஹான் இந்த கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர் என்றும் அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகவும் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த கொலைகளுடன் தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று மறுத்திருக்கும் ஜெனரல் ரத்வத்த. நீதியான விசாரணைகளை மேற்கொள்ள தான் ஒத்துழைப்பதாக அறிவித்திருக்கிறார்.

எது எவ்வாறு இருந்தாலும் இந்த கொடூரச் செயலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்கவிடக்கூடாது என்பதில் பொறுப்புள்ள சகலரும் கவனமாக இருக்க வேண்டும். அதிகார பலமும் அரசியல் செல்வாக்குமுள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அடாவடித்தனத்திற்கும் தண்டனை கிடையாது என்ற மனப்பான்மை எமது நாட்டில் பல அரசியல் வாதிகளிடம் ஆழப் பதிந்து போயுள்ளது. இதனை தொடர விட்டால் தனிமனித சுதந்திரம் பற்றியோ அரசியல் ஜனநாயகம் குறித்தோ கதைப்பதில் பயனற்றுப் போகும்.

மாவனெல்லை சம்பவத்துடன் முன்னாள் அமைச்சர் மஹீபால ஹேரத்துக்கு தொடர்பிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றும் கொண்டு வரப்பட்டது. ஆனால் அவை இப்போது பழைய கதைகளாக விட்டன. மீண்டும் அவர் புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கிறார்.

மாவனெல்லையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதாக ஆரம்பத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அறிவித்தது. பின்னர் அது மறக்கப்பட்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் அரசாங்கத்துக்கு மீண்டும் நஷ்ட ஈட்டு விஷயம் ஞாபகம் வந்தது.

மடவளை சம்பவத்திலும் இதே நிலை தொடரக்கூடாது. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கொல்லப்பட்ட இளைஞர்களுள் சிலர் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்தவர்கள் என்றும் அவர்களது மனைவிமார் கர்ப்பணிகளாக இருப்பதாகவும் அவ்வூர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த இளம் யுவதிகள், அவர்களது பிள்ளைகள் அரசியல் வக்கிரங்களை அறியாதவர்கள் எனவே அவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

இவற்றுக்கு அப்பால் இன்னொரு விடயத்தையும் நாம் சிந்திக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகமும் இப்போது ஒரு போராடும் சமுதாயமாக மாற்றம் பெற்று வருகின்றது. இதற்கு யார் காரணம்? தவறு எங்கே நிகழ்கிறது..?

ஊற்று.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த. பெ. இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):–074-513266

## பிரதமர் தயாரித்த பட்டியலுக்கு ஜனாதிபதி முழு அங்கீகாரம்

# ஐ.தே.க. அரசாங்கத்தின் அமைச்சரவை பதவி ஏற்பு

டிசம்பர் 5ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கியதேசியக் கட்சியின் அரசாங்கத்தின் புதிய அமைச்சர்கள் புதன்கிழமை மாலை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணியிலும் அரசாங்கமும் பிரதமரும் மாற்றுக் கட்சியைச் சேர்ந்ததாக அமைந்துவிட்ட நிலையில் புதிய அமைச்சரவை நியமனம் பலத்த முரண்பாடுகளுக்கும் அரசியல் அமைப்பு சர்ச்சைகளுக்கும் வழிவகுக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறு எந்தவித இடையூறுமின்றி புதிய அமைச்சரவை பதவியேற்றது.

அரசியல் அமைப்பின்படி பிரதமரின் ஆலோசனையுடன் ஜனாபதியே அமைச்சர்களை நியமிக்கவேண்டுமென்பதால் திருமதி குமாரதுங்கவுக்கும், ரணில் விக்கிமசிங்கவுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் தோன்றலாம் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் தம்வசம் வைத்துக்கொள்ளாது அமைச்சர்களை நியமிக்கும் முழு அளவிலான அதிகாரத்தையும் ஜனாதிபதி குமாரதுங்க பிரதமரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்ததையடுத்து அமைச்சர்கள் குறித்த தீர்மானம் சுமுகமாக மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஐ.தே.க. புதிய அமைச்சரவையில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து கட்சிமாறிய எஸ்.பி.திஸாநாயக்க, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மகிந்த விஜேசேகர, பந்துல குணவர்த்தன உட்பட பல முன்னாள் பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

தேசிய நல்லிணக்க அரசாங்கமொன்றின்கீழ் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பலருக்கும் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்க தாம் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தபோதும் அந்த அழைப்பை பொதுஜன ஐக்கிய முன்னணி நிராகரித்தது.

எனினும் அந்தக் கட்சிக்குள் இருந்து ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு பல சாதகமான சமிஞ்ஞைகளும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, அனுர பிரியதர்சன யாப்பா, ஜெயராஜ் பெனாண்டோ புள்ளே ஆகியோர் தேசிய நல்லிணக்க அரசுகுறித்து தமது விருப்பத்தை வெளியிட்டிருந்தனர். எவ்வாறெனினும் மேற்சொன்ன எவரும் ரணிலின் அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

## 'புதிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பூரண ஆதரவு' -டக்ளஸ்-

வடக்கு கிழக்கை புனரமைப்பு செய்யவும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐ.தே.க. எடுக்கும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவதாக முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் "இந்நாட்டின் இனப்பிரச்சனைக்கு கௌரவமானதும் நிரந்தரமானதுமான தீர்வொன்றைக் காண்பதற்கும், யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், மற்றும் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தைப் புனரமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலுள்ள அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஈ.பி.டி.பி. முழு ஒத்துழைப்பை நல்கும்.

முன்னைய அரசாங்கத்தில் நான் பொறுப்பு வகித்த அமைச்சைப் புதிய அரசாங்கத்தில் கையேற்கும் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன அப்பொறுப்புக்கு மிகுந்த தகமையுடையவர். அவர் ஈ.பி.டி.பி.யின் நெடுங்கால நண்பர். அவருக்கு எமது நல்வாழ்த்துக்கள். ஏற்கனவே நாம் தொடக்கி வைத்த பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் மற்றும் வடபகுதி மக்களுக்கான புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் புதிய அமைச்சருக்கு எப்பொழுதும் எமது ஒத்துழைப்பு இருக்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## மடவளை முஸ்லிம் இளைஞர்களின் கொலை தொடர்பான

## விசாரணைகள் திசைதிருப்பப்படுவதாக பொலிஸார்மீது குற்றச்சாட்டு

கடந்த 5ம் திகதி தேர்தல் தினத்தன்று கண்டி மடவளையில் இடம்பெற்ற முஸ்லீம் இளைஞர்கள் 10 பேரின் கொலை தொடர்பாக பொலிஸாரினால் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எதிவும் எடுக்கப்படவில்லை என்று குற்றத் தடுப்புப் பிரிவின் திரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எச்.எம்.பி.வி கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

அரசியல் அழுத்தங் காரணமாக இந்த கொலைகள் குறித்து விசாரணை செயலிழந்து போயுள்ளதாகவும் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படுபவர்களிடமிருந்து ஒரு வாக்குமூலத்தைக்கூட பொலிஸார் இதுவரை பதிவு செய்யவில்லை என்றும் கொட்டகதெனிய தெரிவித்தார்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இந்த சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அந்த பாதுகாப்புப் பிரிவின் தலைவரிடம்கூட இன்னும் வாக்குமூலம் பெறப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகக் கூறுவது விசாரணைகளை திசைதிருப்புபவையேயாகும் என்றும் கொட்டகதெனிய தெரிவித்திருக்கிறார்.

## இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பங்கம் விளையாத தீர்வுக்கு ஜே.வி.பி ஆதரவு வழங்குமாம்!

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பங்கம் விளையாத தீர்வுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்குமாம்!

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் போது அந்த இயக்கம்மீதான தடை நீக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்கிழமை மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் பிரதமரை சந்தித்து உரையாடியபோதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய பிரச்சனைகளை தீர்க்கும்போது இலங்கையில் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்களுக்கு ஜே.வி.பி. தமது ஆதரவை வழங்கும் என்று இதன்போது ஜே.வி.பி. தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளனர். அத்துடன் கடந்த பாராளுமன்றத்தில் சட்ட மூலமாக நிறைவேற்றப்பட்டு இடைநடுவில் நின்றுபோன 17 வது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் குறித்தும் அதன் மூலம் அமைக்கப் படவிருக்கும் ஆணைக்குழுக்கள் தொடர்பாகவும் இவ்விரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். ■

## பிரபாகரனின் செய்திக்கு தமிழ் சிங்கள மக்கள் ஆதரவளித்துள்ளனர் – தமிழ்ச்செல்வன்

பேரினவாத அரசாங்கத்தின் ஊடகங்கள் மேற்கொண்ட தீவிர தேர்தல் பிரசாரங்களை நம்பி அதில் மயங்காது இராணுவ ஆதிக்கத்துக்குள் வாழும் மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து, நடந்து முடிந்த தேர்தலில் தகுந்த பாடத்தை புகட்டியுள்ளார்கள் என்று புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியின் 11வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த ஞாயிறன்று நடைபெற்ற வைபவமொன்றில் உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய தமிழ்ச்செல்வன் எமது விடுதலைப் போராட்டத்துக்கு களங்கமேற்படுத்துகிற விதத்திலும் தமிழ் மக்களை குழப்பத்துக்குள்ளாக்கும் விதத்திலும் தேர்தலுக்கு முந்திய தினங்களில் அரசாங்க வானொலியில் வெளியிடப்பட்ட செய்திகளை சுட்டிக் காட்டினார்.

"தமிழ் மக்களுக்கு அவர்களுடைய அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடியவாறு அவர்கள் தங்களுடைய தாயகப் பிரதேசத்திலே சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழக் கூடியவகையில் நீதியான நியாயமான தீர்ப்பை வழங்கினால் தான் சிங்கள தேசமும் சிங்கள மக்களும் மகிழ்வாக நிம்மதியாக பொருளாதார மேம்பாட்டுடனும் வாழக்கூடிய சூழல் உருவாகும். சிங்கள மக்கள் இதற்கு ஏற்றாற்போல செயற்பட வேண்டும் என எமது தலைவர் தனது மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டிருந்தார் இதனையே செய்தி ஊடகங்கள் முக்கியத்துவப்படுத்தி இருந்தன.

எமது தலைவரின் செய்திக்கு ஆதரவளிக்கும் வகையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இம்முறை தேர்தலில் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளனர்" என்றும் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார். ■

புனித றமழான் மாதம்
முழுவதும் நோன்பு
நோற்று ஈதுல் பித்ர்
நோன்புப் பெருநாளைக்
கொண்டாடும்
அனைவருக்கும் முரசின்
நல்வாழ்த்துக்கள்

## தொடுகைச் சிகிச்சை நிபுணர்

பம்பாயைச் சேர்ந்த பிரபல தொடுகைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சஷிகாந்த் சேத் தற்போது கொழும்பு வந்துள்ளார். தொடுகைச் சிகிச்சை மூலம் தீராத நோய்கள் பலவற்றுக்கு அவர் சிகிச்சையளிக்கிறார். தற்போது கொழும்பு பலம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலில் தங்கியிருக்கும் டாக்டர் சஷிகாந்த் சேத் தினமும் தமது தொடுகைச்சிகிச்சையை வழங்கி வருவதோடு, அதற்குரிய பயிற்சிகளையும் போதித்து வருகிறார். ■

## ஜீவனின் கொலைக்கு பழி தீர்க்கும் நடவடிக்கையாக

## வாழைச்சேனை பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கி அழிப்பு!

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின்மீது செவ்வாய்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 பொலிஸாரும் ஒரு பொதுமகனும் அடங்கலாக 6 பேர் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்தனர்.

புதன்கிழமை அதிகாலைவரை நீடித்த இந்தத் தாக்குதலின் பொலிஸ்நிலையம் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டதுடன் அங்கிருந்த பொருந்தொகை ஆயுதங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பெண் புலிகள் உட்பட 50க்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்கள் பொலிஸ் நிலையத்திற்குள் ஊடுருவி முதலில் அங்கிருந்த காவல் கோபுரத்தை தாக்கி அழித்ததுடன் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த அறையையும் தொலை தொடர்பு உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர். பின்னர் பெறுமதிமிக்க ஆயுதங்கள் சிலவற்றையும் தொலைத் தொடர்பு சாதனங்களையும் எடுத்துக்கொண்டு ஏனையவற்றை தீவைத்து எரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் கடந்த வாரம் கிழக்கில் மீயன்குளம் என்ற இடத்தில் படையினர் மறைந்திருந்து தாக்கியதில் மட்டக்களப்பு, அம்பாறை விசேட தளபதி ஜீவன் பலியானார்.

மட்டக்களப்பு கொழும்பு வீதியில் அமைந்துள்ள மீயன்குளம் பகுதியூடாக இரவில் புலிகளின் நடமாட்டம் இருப்பதாக படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதிலேயே ஜீவன் உட்பட 7 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் புலிகளின் சடலங்கள் கைப்பற்றப்பட்டு ஐ.சி.ஆர்.சி ஊடாக புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்களது இறுதிக் கிரிகைகள் தரைவைய்யில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றதாகவும் இந்நிகழ்வில் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் நிஸாம், படைத்துறைப் பொறுப்பாளர் றெஜி, மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் சுமதி, மற்றும் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் கருணாவுக்குப் பின்னர் முக்கிய தளபதியாக கருதப்பட்டுவந்த ஜீவன் கிழக்கிலும் வன்னியிலும் பல முக்கியத் தாக்குதல்களில் பங்கெடுத்தவர் என்று புலிகள் இவரை பாராட்டியுள்ளனர்.

## கிழக்கில் ஐ.தே.க. முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களிடையே மோதல் அதிகரிப்பு!

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடன்படிக்கை செய்து கொண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. நாட்டின் சில இடங்களில் ஐ.தே.க.வுடன் இணைந்தும் சில இடங்களில் தனித்தும் போட்டியிட்டது. மு.க. தனித்துப் போட்டியிட்ட கிழக்குமாகாணத்தில் ஐ.தே.க. மற்றும் மு.கா. ஆதரவாளர்களுக்கிடையிலான வன்முறைகள் அதிகளவில் இடம் பெற்றிருந்தன. தேர்தலுக்கு முன்னர் தொடங்கிய வன்முறைகள் இன்னமும் ஓயாமல் தொடர்கின்றன. குறிப்பாக ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் பகுதிகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும், வேட்பாளர்களுக்கும் எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் மிக அதிகளவான வன்முறைகள் புரியப்பட்டுள்ளன. ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை போன்ற பகுதிகளிலும் இன்னமும் தாக்குதல்கள் ஓய்ந்த பாடில்லை. பலர் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள். வீடுகள், வாகனங்கள், கடைகள், மற்றும் உடமைகள் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

புனித றமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் பகுதிகளில் இடம்பெறும் இவ்வாறான வன்முறைகள் குறித்து பலரும் கவலை கொண்டுள்ளனர்.

பாதுகாப்புத் தரப்போ, முஸ்லிம் பெரியார்களோ வன்முறைகளை நிறுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்காதது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. ■

## ஐ.தே.க. தேசியப்பட்டியலில் 6 முஸ்லிம்கள்

## பொ.ஐ.மு. பட்டியலில் இருந்து அலவி நீக்கம்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பி.க்கள் நியமனத்தில் முன்னாள் அமைச்சர்கள் அலவி மௌலானா, பட்டி வீரக்கோன் ஆகியோர் இடம்பெறவில்லை.

தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பாக இலங்கைத். தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேறிய இருவருக்கும் இடம் வழங்குவதற்காக அலவி, பட்டி வீரக்கோன் ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் ,அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் தேசியப் பட்டியலில் ஒரு இடம் வழங்கப்பட்டுள்ளது.

இதர கட்சிகளான மக்கள் ஐக்கிய முன்னணிக்கோ, இலங்கை மக்கள் கட்சிக்கோ ஒரு இடமும் வழங்கப்படவில்லை.

டி.எம்.ஜயரட்ண, லக்ஷ்மன் கதிர்காமர், ரொனி டிமெல், சேகு இஸதீன், எஸ்.சதாசிவம், ராஜா கொலூரே, டிலான் பெரேரா, வி.புத்திரசிகாமணி, அதுல நிமலசிறி ஜயசிங்க, மகிந்த அமரவீர, அஜந்த டி சொய்சா ஆகியோரே பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம்பெறும் 11 எம்.பி.க்களுமாவர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் ஆறு முஸ்லிம்களுக்கும், இரண்டு தமிழர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க. செயலாளர் சென்ரத் கப்புகொட்டுவ திங்கட்கிழமை இரவு ஒப்படைத்த தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் முஸ்லிம் காங்கிரஸுக்காக மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும், மலையக மக்கள் முன்னணிக்கும் தலா ஒரு இடம் வழங்கப்பட்டுள்ளது. ■

## சித்தார்த்தன் ஆதரவு

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) பாராளுமன்றத்தில் எதிரணியில் இருந்து கொண்டே அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் என்று அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு ஆதரவளிக்க தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்த சித்தார்த்தன், அதனை எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டே செய்யப் போவதாகக் கூறியுள்ளார். இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் போது அதற்கு முழு அளவில் ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குவதாக சித்தார்த்தன் உறுதியளித்துள்ளார். ■

## எதிர்க்கட்சித் தலைவராக விக்கிரமநாயக்க

புதிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செவ்வாய்கிழமை நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழு கூட்டத்தின் நீண்ட விவாதத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயரை ஜனாதிபதி அறிவித்தார்.

முன்னதாக இந்தப் பதவிக்கு தாம் போட்டியிடப்போவதாக முன்னாள் அமைச்சர் மகிந்தராஜபக்ஷ அறிவித்திருந்தார். எவ்வாறெனினும் இந்தத் தெரிவு குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

## நான்குபேர் கைது

கண்டி, மடவளையில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சில சந்தேக நபர்களை கந்தளாய்ப் பொலிஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

கந்தளாய் கீர்த்தி மாவத்தையில் உள்ள வீடு ஒன்றில் இவர்கள் தங்கியிருந்த போது பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பிவந்த ஒருவரும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் ஒருவரும் உட்பட நான்கு பேருமே கைதாகியுள்ளனர்.

இவர்கள் மீதான விசாரணைகளையடுத்து வாகனம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவருக்குச் சொந்தமான வாகனம் ஒன்றின் மூலமே இவர்கள் திரும்பி வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகள் மூலம் இவர்களுக்கும் மேற்படி கொலைக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் தங்கியிருந்த வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார். ■

# முரசம்

## மக்களின் நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கமும் அமைந்தாகிவிட்டது. மக்களின் அமோக ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியிருக்கிறார்.

இந்த நாடு சகல திசைகளிலும் நெருக்கடிகளை சந்தித்துள்ள ஒரு தருணத்தில் புதிய அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

1994ம் ஆண்டும் கடந்த வருடமும் பெருவெள்ளமாகத் திரண்டு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்த அதே மக்கள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் தமது எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றத் தவறி விட்டது என்ற ஆதங்கத்தை இம்முறை பொதுத் தேர்தலில் தெளிவாக புலப்படுத்தியிருக்கிறார்கள்.

புதிய பிரதமரும், புதிய அரசாங்கமும் நாட்டுக்கு ஒரு புத்துணர்ச்சியை வழங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்தப் புத்துணர்ச்சி தொடர்வதும் ஐ.தே.க. மீதான மக்கள் ஆதரவ நீடிப்பதும் இனிமேல் இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைப் பொறுத்தது தான்.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபோது 17 வருடகால ஐ.தே.க. இருண்ட யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து விட்டதாக நாட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். மக்களின் அந்த நிம்மதியை அர்த்தமுடையதாக தொடரச்செய்வதில் திருமதி குமாரதுங்கவின் அரசாங்கம் போதிய வெற்றியைப் பெறவில்லை.

பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு படிப்படியாக குறைந்து வந்த மக்கள் ஆதரவ இந்தத் தேர்தலுடன் அந்தக் கட்சியினரை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியும் அளவ வலுப்பெற்றிருந்தது.

இப்போது மீண்டும் ஒரு சுற்று ஆரம்பித்திருக்கிறது.

தமது அபிலாஷைகளை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றுவார் என்று பெரும்பாலான மக்கள் நம்பிக்கை கொண்டு அதனை புள்ளடிகளாக வெளியிட்டுள்ளனர்.

அதனால் அவற்றை முழுமையாக நிறைவேற்றும் கடப்பாடு ஐ.தே.க. அரசாங்கத்துக்கு இருக்கிறது.

இம்முறை தேர்தலில் சகல அரசியல் கட்சிகளாலும் மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனங்களின் கருப்பொருள் இனப்பிரச்சனையும் அதனோடிணைந்த நெருக்கடிகளுக்கான தீர்வு பற்றியதுதான்.

எனவே இனநெருக்கடியை ஐ.தே.க. தீர்த்து வைக்கும் என்ற மக்கள் அபிப்பிராயம் இம்முறை தேர்தலில் வெளியிடப்பட்டுள்ளது என கருதமுடியும்.

கடந்த காலத் தவறுகளை திருத்திக் கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குவதே ஆட்சியாளர்களின் முதற் பணியாக இருக்கவேண்டும்.

இதனை இழுத்தடிப்பதற்கு காரணங்களை தேடுவதை விடுத்து சாத்தியமான சகல வழிகளிலும் முயற்சி செய்து இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாடுபடுவார் என்று நம்புகிறோம்.

மக்களின் நம்பிக்கை மீண்டும் ஒரு தடவை வீண் போகக் கூடாது!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புதிய பிரதமர் புதிய சவால்



திருமதி குமாரதுங்க இந்தளவு விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வார் என்று ரணில் விக்கிரமசிங்ககூட எதிர்பார்த்திருக்கமாட்டார். புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நியமனத்தின்போது நிதி, மற்றும் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி தன் வசம் வைத்துக்கொள்வார் என்றே பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தக் குறையுமில்லாத பூரணமான அரசாங்கம் ஒன்றை அமைக்க வழி செய்து கொடுத்து சந்திரிகா ஒதுங்கிக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்கவினால் உடனடியாக தீர்க்கப் படவேண்டிய பிரச்சனைகளின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது இனப்பிரச்சனைதான் என்பதில் சந்தேகமில்லை. பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பும் புதிய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு சவால்களுக்கும் முகங்கொடுப்பதைப் பொறுத்துதான் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படப் போகின்றது.

1994ம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரிய வீழ்ச்சிக்கு மத்தியிலும், தொடர்ச்சியான தோல்விகளுக்கு இடையிலும் அரச எதிர்ப்பு இயக்கம் ஒன்றை சிறப்பாக வழிநடத்தி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை கவிழ்த்ததோடு மக்களின் அமோக ஆதரவை பெற்று புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்ததில் ரணிலைப் போலவே ஐ.தே.க.வில் உள்ள ஏனைய முன்னணித் தலைவர்களுக்கும் பெரும்பங்குண்டு.

ரணில் பிரதமர் பதவியை ஏற்றதும் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அவசரம் காட்டுவதாக தெரிகிறது. புதிய பிரதமரின் முதல் வெளிநாட்டு விஜயமாக இந்தியா சென்று சமாதான முயற்சிகளுக்கான பூர்வாங்கப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமாதான முயற்சிகளில் ரணில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெறுவாராயின் அவர் எதிர்கொள்ளும் அடுத்த சவாலான பொருளாதார நெருக்கடியை மிக இலகுவாகக் கையாளும் சந்தர்ப்பம் கிடைக்கும். புதிய அரசாங்கத்துடன் புலிகள் எந்தளவு தூரம் ஒத்துழைப்பார்கள் என்பதில்தான் சமாதான ஏற்பாடுகள் எவ்வளவு தூரம் முன்னோக்கிச் செல்லும் என்ற கேள்விக்கான பதில் தங்கியுள்ளது.

புலிகளை பொறுத்தவரையில் அவர்கள் சந்திரிகா அரசுடன் கடைபிடித்த கடும்போக்கை ரணில் விஷயத்தில் ஓரளவு தளர்த்தலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. சந்திரிகா அரசாங்கத்தை கவிழ்த்து ஐ.தே.க. அரசாங்கமொன்றை ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்ற விருப்பம் புலிகளுக்குள் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. இது பொதுஜன ஐக்கிய முன்னணி கூறிய ரணில்-பிரபாகரன் இரகசிய ஒப்பந்தத்தின்படியல்ல. புலிகளுக்கு தங்களது நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த சந்திரிகா அரசாங்கம் பல வழிகளிலும் தடையாக இருந்தது உண்மைதான். அத்தோடு பொதுஜன ஐக்கிய முன்னணி நூறு சதவீதம் யுத்தத்தின் மீது நம்பிக்கை கொண்ட ஒரு அரசியல் சக்தியாக தன்னை அடையாளப்படுத்தியிருந்தது. லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாடுகளில் போய் என்னதான் விளக்கமளித்தாலும் புலிகள் விடுத்த ஓரிரு சமாதான சமிக்ஞைகளைக்கூட பொதுஜன ஐக்கிய முன்னணி நிராகரித்தே வந்திருக்கிறது.

அதனால் அவர்கள் மேல் புலிகள் உச்சகட்ட வெறுப்பில் இருப்பார்கள் என்பதை எதிர்பார்த்தேயாக வேண்டும். இதன்காரணமாகவே தனது மாவீரர் தின உரையில் பிரபாகரன் 'இனவாத சக்திகளை நிராகரிக்குமாறு' பகிரங்கமாக சிங்கள மக்களிடம் கோரினார். அரசியல் கட்சி ஒன்றின் பெயரை நேரடியாக தனது உரையில் பயன்படுத்துவது நாகரிகமல்ல என்பதை கருத்தில் கொண்டு கட்சிப் பெயர்களை தவிர்த்திருந்தாலும் ஐ.தே.க.வுக்காக செய்யக்கூடிய உச்ச கட்ட உதவியையும் பிரபாகரன் செய்தார். இது புலிகளின் போரியல் வியூகத்தின் மற்றொரு புத்திசாலித்தனமான காய் நகர்த்தலா அல்லது மெய்யாகவே சமாதானத்தின் மீதான ஆர்வமா என்ற பிரச்சனை இருந்தாலும்கூட தற்போதைய சர்வதேச நிலவரங்களை வைத்து நோக்குமிடத்து நியாயமான தீர்வொன்றுக்கு புலிகள் இணங்கலாம் என்று கருத முடியும்!

அவ்வாறாயின் ரணில் விக்கிரம சிங்கவின் ஆரம்ப கட்டப்பணி இலகுவானதாக அமையும். ஏனெனில் முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் சரி, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் சரி, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய அனைத்து சந்தர்ப்பங்களிலும் 'பிரபாகரன் ஏமாற்றி விடுவார்' என்ற பயத்துடனேயே அதை செய்தன. புலிகளின் நிலையும் அவ்வாறுதான் சிங்கள அரசாங்கங்களுக்கு பிரச்சனையைத் தீர்க்கும் உண்மையான நோக்கம் கிடையாது அரசியல் நோக்கங்களுக்காகவே எங்களை பயன்படுத்துகிறார்கள் என்பது புலிகள் தரப்பினரால் அடிக்கடி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு. இந்த இரு தரப்பினரது சந்தேகத்திலும் நியாயமிருக்கிறது. இலங்கை அரசாங்கங்கள் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற சொல்லை தமது உள்ளூர், சர்வதேச அரசியல், பொருளாதார தேவைகளுக்காக பல முறை பயன்படுத்தியுள்ளன. அதே போல் 'சமாதான ஆர்வம்' காட்டிவிட்டு ஆயுதக்கப்பல் வரவழைக்கும் வேலையை பிரபாகரனும் பலமுறை செய்திருக்கிறார். இதனால் இவ்விரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் நம்ப மாட்டார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியது தான்.

இப்போது மீண்டும் ஒரு முறை ரணில் விக்கிரமசிங்கவும், வேலுப்பிள்ளை பிரபாகரனும் சமாதானத்தின் மீது நாட்டம் கொண்டுள்ளனர். ஜே.ஆர்.ஜயவர்தன முதல் சந்திரிகா குமாரதுங்க வரை இலங்கை அரசாங்கத்தின் பலதரப்பட்ட தலைவர்களுடன் சமாதான கொடுக்கல் வாங்கல் செய்த அனுபவம் பிரபாகரனுக்கு இருக்கிறது. இதற்கு முன்னைய அரச தலைமைகள் செய்த அதே தவறுகளை ரணில் செய்வாரானால் அல்லது இதற்கு முன்னைய அரச தலைமைகளுக்கு கொடுத்த அதே பதிலை பிரபாகரன் ரணிலுக்கும் கொடுக்க நினைத்திருக்கிறாரேயானால் ஐந்தாவது ஈழப் போருக்கான நாட்களை கணக்கிடுவதாகத் தான் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியும் அமையும்.

எனவே தமது 'வழிகாட்டிகள்' விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு புலிகளுக்கு புதிய நம்பிக்கைகளை வழங்கக்கூடிய விதத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் மாபெரும் சவால் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் காணப்படுகின்றது.

இதில் அவர் வெற்றி பெற்று புலிகளுடன் ஒரு கருத்தொருமிப்புக்கு வருவாரானால் பொருளாதாரத்தை மீளமைக்க கஷ்டப்படவேண்டியிருக்காது. போர் குறித்து அச்சம் நீங்குமாயின் வெளிநாட்டு முதலீடுகள்,சுற்றுலாத்துறை என்று பல வழிகளில் பொருளாதார பிரச்சனையை தீர்க்கலாம்.

இனிமேல் இனப்பிரச்சனைத்தீர்வு தொடர்பான விடயத்தில் திருமதி குமாரதுங்கவின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கப்போகின்றது. பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பையும் விட்டுக் கொடுக்க முன்வந்ததன் மூலம் அவர் வெறுமனே 'ஜனாதிபதியாக' தன்னை சுருக்கிக் கொண்டுள்ளார். ஏன் அவ்வாறானதொரு முடிவுக்கு வந்தார் என்று தெளிவில்லாத போதும் 'ஒரு சமாதான சுழற்சியின் பின்னர் மீண்டும் யுத்தம் வெடிக்கும் அதன் பிறகு ரணிலின் செல்வாக்கு வீழ்ச்சியடையும்' என்ற எதிர்பார்ப்புடன் அவ்வாறு செய்திருக்கலாம். அல்லது பேச்சுவார்த்தைக்கு முன்னதாக போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அதற்கு பாதுகாப்பு அமைச்சரின் அனுமதி தேவை. இது விடயத்தில் முட்டுக்கட்டைகளைப் போடாமல் ரணிலுக்கு தீர்மானம் எடுக்க வசதியாக சகல பொறுப்புகளையும் அவர் வசம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்திருக்கலாம். இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு அம்சம் யாதெனில் 'இதன் பின்னர் ஏதேனும் தவறு நடந்தால் அதனை தன்மீது சுமத்த இடம் வைக்கக்கூடாது என்பதில் ஜனாதிபதி எச்சரிக்கையாக நடந்து கொள்வதுதான். அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சி தோல்வியில் முடிந்து போர் வெடிக்கும், மீண்டும் விலைவாசிகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்குள் இருப்பதைத் தான் இது உணர்த்துகின்றது.

என்னதான் ஒப்புக்காக ரணிலும் சந்திரிக்காவும் சிரித்து கைகுலுக்கிக் கொண்டாலும் ஒருவரை ஒருவர் வீழ்த்த வேண்டும் என்பதில் இருவரும் அக்கறையாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அரசியலமைப்பின்படி தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதாயின் அவருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற வேண்டும். 225 பேர் கொண்ட இலங்கையின் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு என்பது 150 ஆசனங்கள். இப்போது முஸ்லிம் காங்கிரஸையும் சேர்த்து ஐ.தே.க.விடம் 114 ஆசனங்கள் உள்ளன. இந்நிலையில் 150 பேரை திரட்டுவது இலேசான காரியமல்ல. ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை என்று வரும்போது எதிரணியில் உள்ள ஜே.வி.பி. தமிழ்க்கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. என்பன ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இதனை புரிந்து கொண்டுள்ள ரணில் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய புதிய வலை ஒன்றை விரிப்பதாகத் தெரிகிறது. அதன் பெயர் தேசிய நல்லிணக்க அரசாங்கம்! நல்லிணக்க அரசாங்கம் என்று கூறி தம்பக்கத்துக்கு ஆட்களை இழுத்துக் கொண்டு அடுத்து இரண்டாவது கட்டத்தை நிறைவேற்றுவார். அதாவது நேரடியாக ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்காது ஜனநாயக சீர்திருத்தம் என்ற போர்வையில் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் திட்டத்தை ஐ.தே.க. முன்வைக்கலாம்.

அவ்வாறு செய்து சந்திரிக்காவின் அதிகாரங்களை குறைத்துவிட்டால் அதன் பின்னர் அவர் தானாக பதவி விலகிப் போய்விடுவார்! உண்மையில் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் முயற்சியில் ஐ.தே.க. இறங்கினால் ஜே.வி.பி. பலத்த சங்கடத்துக்கு உள்ளாக வேண்டி நேரிடும். ஏனெனில் அந்தக் கட்சி ஆரம்பம் முதலே நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறிவருகிறது. அதனால் ஐ.தே.க.வின் இத்தகைய முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருக்க முடியாது. அதேவேளை சந்திரிகா அம்மையாருக்கும்-ஜே.வி.பி. தலைவர்களுக்கும் இடையிலான நெருக்கம் கொள்கை கோட்பாடுகள் அனைத்தையும் விஞ்சும் அளவு சக்திமிக்கது. அதனால் சந்திரிகாவை பதவி நீக்கம் செய்ய 16 ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் ஜே.வி.பி. உதவுமா என்பதும் சிந்திக்கப் படவேண்டியது.

இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் தமிழ்க் கட்சிகளின் முடிவு எப்படியாக அமையும் என்பது தமிழ் அரசியல் கோதாவில் அடுத்து எழப்போகும் பிரதான கேள்வியாக இருக்கும்! தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பை.பொறுத்தவரையில் புலிகள் அந்த நேரத்தில் எதை செய்யும்படி கூறுகிறார்களோ அதுதான் அவர்களின் முடிவாக இருக்கும். எவ்வாறெனினும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுத்தரும் முழு அளவிலான அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றை கொண்டு வராது வெறுமனே நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க மாத்திரம் தனியான பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டால் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு தெரிவிக்காமல் அந்த பிரேரணையின் உள் நோக்கம் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் தமிழ்க் கட்சிகளின் உதவியுடன் சந்திரிகாவை பதவி இறக்கிவிட்டால் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை இழுத்தடிக்க ஐ.தே.க.வினால் முடியும். இந்தப் பாராளுமன்றத்தில்

**எம்.பி.எம். பர்ஸான்**

தமிழ்க் கட்சிகளின் உதவி இல்லாமலே ஐ.தே.க.வுக்கு ஆட்சி நடத்த முடியும் என்பதால் தனது காரியத்தை முடித்துக் கொண்ட பின்னர் தீர்வை தாமதப்படுத்த ரணில் துணியக்கூடும்! ஐ.தே.கவுக்குள் இருக்கும் இனவாத சக்திகளின் நெருக்குதல்களால் பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டு வந்ததை விடவும் குறைந்த தீர்வைக்கூட முன்வைக்க இந்த அரசாங்கம் முன்வரலாம். அதனால் ரணிலின் இந்த தேசிய நல்லிணக்க வலை ஆழமாக ஆராய்வது அவசியம்.

எது எப்படிப் போனாலும் தனது அரசியல் செயற்றிட்டம் முழுதையும் ஒரு வருடகாலத்துக்குள் அதாவது 2002ம் ஆண்டு டிசம்பர் 5ம் திகதிக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் ரணிலுக்கு இருக்கிறது. ஏனெனில் தேர்தல் நடைபெற்ற தினத்திலிருந்து சரியாக ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றது. இந்தக் காலப்பகுதிக்குள் புலிகளுடன் பேசி சமாதானத்தை ஏற்படுத்தி தன் மீதான நாட்டு மக்களின் நம்பிக்கையை ரணில் உறுதி செய்ய வேண்டும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். ஜனாதிபதியின் சிறகுகளை வெட்ட வேண்டும்! இது மூன்றும் நிகழ்ந்தால்தான் பிரதமராக இரண்டாவது வருடத்திலும் காலடி எடுத்து வைக்க அவரால் முடியும். செய்வாரா ரணில்..? ■

தேர்தல் பெறுபேறு

# சமாதானத் தீர்வுக்கு வழங்கப்பட்ட மக்களின் ஆணை!

இலங்கையின் 12ஆவது பாராளு மன்றத்துக்கான தேர்தல் தலைகீழான மாற்றங்களோடுநிகழ்ந்து முடிந்துள்ளது. இந்த மாற்றங்கள் சிங்கள அரசியலில் மட்டுமல்ல, தமிழ் அரசியலிலும் ஒருசேர நிழ்ந்திருக்கின்றன.

இலங்கை நாடு முற்று முழுதாக ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டும் தெளிவான வலியுறுத்தலையே இந்நாட்டு மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

புதிய அரசாங்கமும் புதிய அரசியல் தலைமைகளும் இதை எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதே அடுத்துள்ள வினாவாகும்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் வெறுமனே ஒரு ஆட்சி மாற்றம் மட்டும் தான்.

ஆனால் பிரச்சனைகள் இன்னும் பூதாகரமாகவே உள்ளன. புதிய அரசாங்கத்தைப் பொறுத்தவரை இரு முக்கிய விடயங்களை முகம் கொடுத்து சாதகமான தீர்வுகளைக் காண வேண்டிய உடனடி அவசியம் உள்ளது.

ஒன்று இலங்கையில் ஒரு பாரிய அழிவுகர உள்நாட்டு யுத்தமாக வெளிப்பட்டுள்ள இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான ஒரு சாமாதானத் தீர்வைக் காண வேண்டும்.

அடுத்து, ஆபத்துக் கட்டத்தை அடைந்துவிட்ட இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சிகாண வேண்டும். ஆனால் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட விடயங்கள்.

பெருந்தொகையான தேசிய நிதியை விழுங்கிக்கொண்டு, பெருமளவ வரிச் சுமையை சுமத்திக்கொண்டு, நாட்டில் பொருளாதார ஸ்திரமின்மையையும், வெளிநாட்டு முதலீடுகளுக்கான அச்சுறுத்தலையும், பீதியையும் ஏற்படுத்திக் கொண்டு அழிவுகளைக் குவித்துச் செல்லும் இந்த உள்நாட்டு யுத்தத்துக்கு மத்தியில் பொருளாதார மீட்சியென்பது அசாத்தியமான விடயமாகும்.

எனவே இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களாக இன்று புதிய அரசாங்கத்துக்கு முன்னால் உள்ளன.

கடந்த அரசாங்கம் விட்ட தவறும் இது விடயத்தில்தான்.

அதாவது, அரசியல் தீர்வை இழுத்தடித்ததால் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்க நேரிட்டு இறுதியில் இரண்டையுமே தீர்க்க முடியாது, திக்குமுக்காடும் நிலையில் மூன்றாவதாக அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகி இறுதியில் ஆட்சியைப் பறிகொடுத்தார்கள்.

இதே ஆபத்து இப் புதிய அரசாங்கத்துக்கும் உண்டு.

அதனை உணர்ந்து தன் செயற்பாடுகளை வகுத்துக் கொள்வதுடன் கால தாமதமின்றி இனப்பிரச்சனைக்கான தீர்வுக்குரிய வழிவகைகளில் ஈடுபடுவதே இங்கு பிரதானமானது.

## தேர்தலும் தமிழ் அரசியலும்

இந்தத் தேர்தலில் வெளிப்பட்ட ஒரு முக்கியமான விடயம், எல்லோர் கவனத்தையும் ஈர்த்திருக்கும் விடயம் தமிழ் அரசியல் குறித்து தமிழ் மக்களால் வழங்கப்பட்ட பணிப்புரையாகும்.

இதை தீர்ப்பு என்று கூறுவதைவிட மக்களின் பணிப்புரை அல்லது மக்களின் ஆணை என்று கூறுவதே பொருத்தமானது.

இத் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள், அத்துடன் கொழும்பில் வதியும் தமிழ் மக்கள் யாவரும் விடுதலைப் புலிகளின் நெறிப்படுத்தலுக்கு இணங்க அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட தமிழர் கூட்டமைப்புக்கு தமது அமோக ஆதரவை வழங்கி மொத்தம் 15 ஆசனங்களை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இவர்களைவிட ஈ.பி.டி.பிக்கு 2 ஆசனங்களும், புளொட் அமைப்பிற்கு 1 ஆசனமும் கிடைத்து மொத்தமாக இம்முறை 18 ஆசனங்கள் வடக்கு கிழக்கு தமிழ்த் தரப்பினரால் ஈட்டப்பட்டுள்ளன.

கடந்த பாராளுமன்றத்தில் ஈ.பி.டி.பி.க்கு 5, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 5, டெலோவிற்கு 3, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்கு 1 என மொத்தம் 14 ஆசனங்களே வடக்கு கிழக்குத் தமிழ்த் தரப்பினருக்குக் கிடைத்திருந்தன.

இம்முறை அது மேலும் நான்கால் அதிகரித்துள்ளது.

இதே வேளை ஈ.பி.டி.பி.ஐப் பொறுத்த வரையில் முன்னர் பாராளுமன்றத்தில் மொத்தம் 5 ஆசனங்களை வகித்த நிலையிலிருந்து தற்போது 2 ஆசனங்களாக குறைந்துள்ளனர்.

எனினும் கடந்த தேர்தலில் மொத்தமாக 50,890 வாக்குகளைப் பெற்ற அவர்கள் இம்முறை 72,783 வாக்குகளைப் பெற்று சுமார் 22 ஆயிரம் வாக்குகளை அதிகமாகப் பெற்றுள்ளனர். இது சுமார் 28.5 வீத அதிகரிப்பாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை சென்ற தேர்தலில் சுமார் 40 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்த ஈ.பி.டி.பி. இம்முறை சுமார் 56 ஆயிரம் வாக்குகளைப் பெற்று சுமார் 16 ஆயிரம் வாக்குகளை அதிகமாக்கிக் கொண்டுள்ளது. இதுவும்கூட சுமார் 28.6 வீத அதிகரிப்பாகவே உள்ளது.

எனவே ஈ.பி.டி.பி.க்கு ஆசனங்கள் குறைந்தாலும் ஆதரவு அதிகரித்துள்ளதென்பதை நோக்கக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நான்கு கட்சிகள் சேர்ந்து கூட்டமைப்பாக சுமார் ஒரு லட்சத்து 6 ஆயிரம்வாக்குகளைப் பெற்றிருக்கும் போது நிலையில் ஈ.பி.டி.பி தனித்து நின்று 56 ஆயிரம் வாக்குகளைப் பெற்றதென்பதும் ஒரு சவாலாகவே உள்ளது.

இதுதவிர கடந்த தேர்தலில் எந்தவொரு ஆசனத்தையும் பெறாத புளொட் அமைப்பு வன்னியில் ஒருஆசனத்தைப் பெற்று இம்முறை மீண்டும் பாராளுமன்றம் வருகிறது. இவ் விடயங்களும் இங்கு அவதானத்துக்குரியவையாகும்.

எனினும் இங்கு உன்னிப்பாக நோக்கப்படவேண்டிய அம்சம் தமிழ் கூட்டமைப்பிற்கு அமோக வெற்றியை ஈட்டித்தந்ததன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையே!

இது தமிழர் கூட்டமைப்புக்கோ, அல்லது அதில் உள்ளடங்கியிருக்கும் தனித்தனிக் கட்சிகளுக்கோ கிடைத்த மக்களாணை என்பதைவிட அவர்களின் பெயரில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட மக்களாணை என்பதே உண்மையானது.

ஏனெனில், முதலாவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தேர்தலுக்கு ஒருசில நாட்களுக்கு முன்னர், தேர்தல் பிரசாரங்கள் முடிந்திருந்த கட்டத்தில் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களுக்கு பகிரங்கமாகவே நெறிப்படுத்தல் வழங்கியிருந்தார்.

இந் நெறிப்படுத்தல் வழங்கப்பட்ட நேரமானது மக்கள் தேர்தலில் இறுதி முடிவை எடுக்கும் கடைசி நேரமாகும்.

இவ்வாறான இறுதிநேர நெறிப்படுத்தலை அன்ரன் பாலசிங்கம் வழங்கியிருக்கையில், இத் தேர்தலில் இக் கூட்டமைப்புக்கு கிடைத்த பெறுபேறு அதன் சொந்த ஆதரவாகவோ அல்லது அதிலுள்ள தனித்தனிக் கட்சிகளுக்கு கிடைத்த ஆதரவுகளின் அடையாளமாகவோ கொள்ளப்பட முடியாது.

இது தெளிவாகவே விடுதலைப் புலிகளுக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணை!

அத்தோடு, இக் கூட்டமைப்பின் சகல கட்சிகளும் ஒரு சேர முன்வைத்த விடயமானது, தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசி இனப்பிரச்சனைக்கான சமாதானத் தீர்வைக் காணவேண்டும் என்பதே.

இதன் மூலம், தாம் இத் தேர்தலில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும் தாம் மக்களின் பிரதிநிதிகளல்ல, அவர்களின் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

எனவேதான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், வேறெந்தக் கட்சிகளுடனும் நடத்தக்கூடாதெனவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இதில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தாம்கூட பேச்சுவார்த்தைக்கு அருகதையற்றவர்கள் என கூறாமல் கூறியுள்ளார்கள். இக்கூற்றை மலையகத் தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கும் என்பதும் இது ஜனநாயகத்துக்கு விரோதமான நிலைப்பாடல்லவா என்பதும் கேள்விக்குரிய விடயமாக இருந்தாலும், அதையும் பொருட்படுத்தாமல் இக் கூட்டமைப்பினர் புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும்; மற்றய எந்தக் கட்சிகளுடனும் பேசக்கூடாது என உறுதிப்படக் கூறியுள்ளார்கள்.

எனவே புலிகள் வழங்கிய வழிகாட்டல் ஒருபுறமும் கூட்டுக் கட்சிகள் தாமாகவே புலிகளை முதன்மைப்படுத்தி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த நிலைப்பாடுகள் மறுபுறமுமாக, ஒட்டு மொத்தமாக வெளிப்பட்ட கருத்துருவத்தின் பிரகாரம் இத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவானது புலிகளுக்கு வழங்கப்பட்ட மக்களாணையாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டும் தமிழ் மக்கள் ஒரு மக்கள் ஆணையை வழங்கியிருந்தார்கள்.

அது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ் மக்கள் வழங்கிய மக்களாணை!

அன்று 17 ஆசனங்களுடன் தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணி வரலாற்றில் முதற் தடவையாக எதிர்க்கட்சித் தலைமையையும் கைப்பற்றிக் கொண்டது.

ஆனால் அந்த மக்களாணையை, தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி நிறைவேற்றத் தவறிவிட்டது.

தன்னால் சாத்தியமாக்க முடியாத ஒன்றை, வெறும் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் தேர்தல் தந்திரமாக மட்டுமே முன்வைத்து தமிழ் மக்களை இக்கட்டான யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு அது ஒதுங்கிக் கொண்டது. இந் நிலையில்தான் இதனை முகம் கொடுக்க வேண்டியவர்களாக ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்கள் பரிணமித்தன.

இன்று மீண்டும் ஒரு மக்களாணை வழங்கப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட மக்களாணை. இவை பிரச்சனைக்கு சமாதானத் தீர்வைக் காண்பதற்காக தமிழ் மக்கள் வழங்கிய மக்களாணை இது.

***ஒன்று புலிகள் மீதான தடையை நீக்கச் செய்வது இரண்டாவது புலிகள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கு வழி செய்வது.***

***இவற்றைச் செய்யலாமல் வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளில் இருந்து கொண்டு ஈயோட்டுவதற்கோ, வெட்டிப் பேச்சும் வீராவேசப் பேச்சும் பேசியபடி பொழுது போக்குவதற்கோ புலிகள் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பவில்லை.***

***இப் பொறுப்புகளை எவ்வாறு கூட்டமைப்பினர்கள் ஈடேற்றப் போகிறார்கள் என்பதே அவர்கள் முன்முன்வைக்கப்பட்டுள்ள கேள்வியாகும்.***

இங்கு பாராளுமன்றம் செல்லும் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக வாதாடும் வழக்கறிஞர்களாகவே அங்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களின் வாதம் திருப்தி தரவில்லையென்றால், அவர்கள் அங்கிருப்பது இனி அவசியமில்லையென்றால் வழக்கறிஞர்களை மாற்றுவதுபோல, அல்லது மீளப் பெறுவதுபோல அவர்கள் மீளப் பெற்றுக் கொள்ளப் படுவார்கள். இதையே புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தேர்தலின் இறுதிக் கட்டத்தில் வெளியிட்ட கருத்தும் உறுதிப்படுத்துகிறது.

கூட்டுக் கட்சியினர் பிழைவிட்டால் அவர்களுக்கும் மாலை அனுப்புவோமென அவர் கூறியிருந்தார். ராஜீவ்காந்திக்கு அனுப்பப்பட்டது போன்ற மரணதேவதையின் மாலையையே அவர் குறிப்பிட்டுள்ளாரென்பது கூட்டுக் கட்சியினருக்கும் நன்கு புரியும்.

இதன் படிப்பினைகள் ஏற்கெனவே கூட்டுக் கட்சிக்குள் உள்ளடங்கியுள்ள கட்சிகளுக்கு நிறையவே உண்டு. முக்கியமாக அதற்கு தலைமை தாங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு உண்டு.

அதன் தலைவர் அமிர்தலிங்கம் (பா.உ) மற்றும் யோகேஸ்வரன் முதல், தங்கதுரை (பா.உ), நீலன் திருச்செல்வம் (பா.உ), மேயர் சரோஜினி யோகேஸ்வரன், மேயர் சிவபாலன், இறுதியில் நிமலன் சௌந்தரநாயம் வரை தமது எண்ணப்படி நடக்கத் தவறியதற்காக புலிகளின் மரணதண்டனைக்கு உள்ளானவர்களே.

எனவே புலிகளின் செய்தியை மிக நன்றாகப் புரிந்து கொண்டே இந்தக் கூட்டுக் கட்சியினர் பாராளுமன்றம் செல்கின்றனர்.

முன்னரும் 1988ல் இவ்வாறே ஈரோஸ் உறுப்பினர்கள் புலிகளின் அனுமதியுடன் பாராளுமன்றம் அனுப்பப்பட்டனர்.

தம்மால் புலிகளுக்கு அனுசரணையாகப் பாராளுமன்றத்தில் செயற்பட்டு ஆக்கபூர்வமான நகர்வுகளை மேற்கொள்ள முடியும் என்ற உத்தரவாதத்தைத் தெரிவித்துக் கொண்டே அன்றும் அவ் 13 ஈரோஸ் உறுப்பினர்களும் பாராளுமன்றம் சென்றனர்.

ஆனால் ஒரு கட்டத்தின்பின் இவர்களால் தமக்குப் பாராளுமன்றத்தில் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை, மாறாக இவர்கள் பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருப்பது தமிழ் மக்கள் பாராளுமன்ற வழிமுறைக்கு அங்கீகாரம் கொடுத்துள்ளார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி தமது ஆயுதப் போராட்டத்துக்குரிய நியாயாதிக்கத்தை மழுங்கடித்துவிடும் என்று புலிகள் உணர்ந்து கொண்டதால் அவர்களை பாராளுமன்றத்திலிருந்து விலகும்படி உத்தரவிட்டார்கள்.

அதன் பிரகாரம் அந்தப் 13 ஈரோஸ் உறுப்பினர்களும் பாராளுமன்றத்திலிருந்து விலகினார்கள். அத்துடன் இது நின்றுவிடவில்லை.

ஈரோஸ் என்ற தனியொரு இயக்கமாக அவர்கள் இனிச் செயற்படத் தேவையில்லை, அவர்கள் தமது இயக்கத்தைக் கலைத்துவிட்டு, புலிகள் இயக்கத்துடன் சேரவேண்டுமெனக்கூறி 24 மணித்தியால அவகாசம் கொடுத்தார்கள். இதனையடுத்து ஈரோஸ் அமைப்பைக் கலைத்துவிட்டு புலிகளுடன் இணைய, அதில் தனிப்பட விரும்பமில்லாதவர்கள் வெளியேறினார்கள்.

இதே நிலைமையில்தான் இன்று இக் கூட்டமைப்பினரும் புலிகளுக்கான ஏஜன்டுகளாக செயற்பட வேண்டியவர்களாக உள்ளார்கள்.

1987ல் நிகழ்ந்தது போலல்லாமல் இம்முறை புலிகள் நேரடியாகவே இக் கூட்டமைப்பை ஆதரிக்கும்படி நெறிப்படுத்தல் வழங்கியுள்ளதால் இக் கூட்டமைப்பினர் புலிகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டிய தார்மீகக் கடப்பாட்டுக்கும் உள்ளாகியிருக்கின்றனர்.

இதேவேளை இக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகள் யாவும் புலிகளை ஆதரிப்பதில் ஒரே மாதிரியானவையாக இல்லை.

அவர்களுள் மாறுபட்ட கருத்துக்களும், இடைவெளிகளும் வேறுபாடுகளும் உண்டு.

ஒருவரைவிட மற்றவர் தான்தான் உண்மையான விசுவாசியெனக் காண்பிக்க முயலும் போட்டியும் உண்டு.

உதாரணத்திற்கு கூறுவதானால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உண்மையான புலிகளின் ஆதரவாளர்களல்லவெனவும் அவர்கள் சந்தர்ப்பவாதிகள், இந்தியாவுடனும் அதன் உளவு ஸ்தாபனமான ரோவுடனும் இரகசியத் தொடர்பு கொண்டவர்களெனவும் தமிழ்க் காங்கரஸ் குற்றம் சுமத்தி மறைமுகப் பிரசாரம் நடத்தியது.

இதில் ஒருவகையில் ஓர் உண்மையும் உள்ளது. அதாவது புலிகளைத் தடை செய்த முதலாவது நாடு இந்தியா என்பதுடன், புலிகளுடன் யுத்தம் புரிந்து பல போராளிகளைப் பலிகொண்ட நாடும்கூட அதுவே.

இன்றும் இந்தியாவின் நிலைப்பாடு புலிகளுக்கு எதிரானதாகவே உள்ளது.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், உளவுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் முதற் கொண்டு பல முக்கிய புலி உறுப்பினர்களைத் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவித்துள்ளதுடன், இண்டர்போல் போன்ற சர்வதேச உளவு நிறு வனங்களூடாகவும் அவ் அறிவித்தலை வெளியிட்டு ஏனைய நாடுகளிலும் தேடுதலைக் கோரியுள்ளது.

கிட்டு முதலான முக்கிய புலி உறுப்பினர்களை சர்வதேச கடற்பரப்பில் கைது செய்ய முனைந்து அவர்களை மரணத்தை தழுவச் செய்ததும் அதுவே.

தற்போதும்கூட புலிகளின் நடமாட்டம் தொடர்பாக சர்வதேச நாடுகளுக்கு தகவல் வழங்குவது முதல் சர்வதேச ரீதியில் நடமாடும் புலிகளின் சில முக்கிய உறுப்பினர்களை கைது செய்வதற்கான வலைகளையும் விரித்து வைத்தபடியேதான் உள்ளது.

சென்ற தடவை புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடத்திய யுத்தத்திலும் இலங்கை இராணுவத்தை மீட்கும் போர்வையில் இந்தியா தனது தலையீட்டை மேற்கொள்ள முனைந்ததுடன், பின்னர் இலங்கைக்கான 100 கோடி டொலர் கடனுதவி, கடற்படைக் கப்பல்கள், பயிற்சிகள் என்பவற்றையும் வழங்கியுள்ளது.

இந்நிலையில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியா புலிகள்மீது மீண்டும் கடும்போக்கை கைக்கொண்டால், அல்லது புலிகள் இந்தியா எதிர்ப்பு நிலைப்பாட்டை தீவிரமாக முன்னெடுத்தால் இக்கூட்டமைப்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மெதுவாக சறுக்கிவிடுவார்கள் என்ற சந்தேகம் நியாயமாக உள்ளது.

இந்திய அரசியலில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏறும் வாய்ப்பும், அதிலும் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி பிரதமராகும் வாய்ப்பும், அத்துடன் ராஜீவின் பிள்ளைகளான பிரியங்கா, ராகுல் காந்தி ஆகியோர் கட்சியிலும் ஆட்சியிலும் பிரதான பங்கெடுக்கும் வாய்ப்பும் நிறையவே உள்ளது.

இவ்வாறாக அங்கு நிலைமை மாறும் போது புலிகளுக்கு எதிரான கடும்போக்கை இந்தியா மீள மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளது.

இந்நிலையில் தொன்றுதொட்டு இந்தியச் சார்பு நிலைப்பாட்டையும் மனோபாவத்தையும் கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர், எவ்வளவுதூரம் புலிகளுடன் ஒத்துழைக்க முன்வருவர் என்பது கூறமுடியாத ஒன்றே.

இதேபோல் முன்னர் இந்திய அமைதிப்படையுடன் சேர்ந்து புலிகளை வேட்டையாடிய ஈ.பி.ஆர்.எல்.எப். இன்றும் இந்திய காங்கரஸ் கட்சியுடனும் பி.ஜே.பி. கட்சியுடனும் தொடர்புகளைப் பேணிவரும் ஈ.பி.ஆர்.எல்.எப்., இந்தியாவுக்கும் புலிகளுக்கும் முரண்பாடு ஏற்படும் தறுவாயில் என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பதும் சந்தேகமே?

இதனால்தான் இக் கூட்டமைப்பை உருவாக்கும் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளின் போதும்கூட புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்பதாக கூட்டில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் எழுத்து மூலம் ஒப்புதல் அளித்தால் மட்டுமே தாம் கூட்டில் இணைய முடியுமென ஒரு நிபந்தனையை முன்வைத்த தமிழ் காங்கிரஸ் கூட்டிலுள்ள ஏனைய கட்சிகளைவிட தாமே புலிகளின் உண்மையான விசுவாசிகளென்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்த முயன்றது.

ஆனால் அவ்வாறு ஒரு எழுத்துமூலமான ஒப்புதலை வழங்காமல் ஏனைய கட்சிகள் ஒருவாறு தட்டிக் கழித்து விட்டன.

இவையாவற்றையும் நன்கறிந்து, இக் கட்சிகளின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்தால்தான் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இக் கூட்டுக் கட்சியினர் ஏதும் தவறிழைப்பின் அவர்களுக்கும் தமது 'மாலை' அனுப்பிவைக்கப்படுமென எச்சரித்துள்ளார்.

இப்போது தேர்தல் முடிந்து தமிழ்க் கூட்டமைப்பினர் தாம் மக்களிடம் கேட்டுக் கொண்டவாறே 15 ஆசனங்களை அவர்கள் மூலம் பெற்று பாராளுமன்றத்துக்குச் செல்கிறார்கள்.

இப்போது கேள்வி இவர்கள் அங்கு சென்று புலிகளுக்காகச் செய்யப்போவது என்ன என்பதே. புலிகளைப் பொறுத்தவரை இக் கூட்டுக் கட்சியினர் உடனடியாகச் செய்ய வேண்டிய இரு முக்கிய பணிகள் உள்ளன.

ஒன்று புலிகள் மீதான தடையை நீக்கச் செய்வது இரண்டாவது புலிகள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கு வழி செய்வது.

இவற்றைச் செய்யலாமல் வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளில் இருந்து கொண்டு ஈயோட்டுவதற்கோ, வெட்டிப் பேச்சும் வீராவேசப் பேச்சும் பேசியபடி பொழுது போக்குவதற்கோ புலிகள் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பவில்லை.

இப் பொறுப்புகளை எவ்வாறு கூட்டமைப்பினர்கள் ஈடேற்றப் போகிறார்கள் என்பதே அவர்கள் முன்முன்வைக்கப் பட்டுள்ள கேள்வியாகும். இதற்கு அவர்கள் வாயாலோ, அறிக்கைகளாலோவன்றி செயலால் பதிலளிக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இனிமேல்தான் இவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்படப் போகிறார்கள்.

# Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு

**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spltalgasse 16 (4th மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509


## 9th ஆண்டு நினைவஞ்சலி

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திப் பிரிந்த ஐயாவின் ஒன்பதாண்டு நினைவலைகள்

மலர்வு 17 03 1937



உதிர்வு 18 12 1992

### அமரர் கந்தையா மருதபிள்ளை (மணியம்)

(யாழ் மத்திய கல்லூரி காவலாளி யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு)


நீங்காத இடம் பெற்று நிர்மலமாய்
நிறைந்திருக்கும் எங்கள் அன்பான ஐயாவே
ஆண்டவன் எம்மை விட்டு உமை
அழைத்து ஆண்டுகள் ஒன்பது ஓடிச்சென்றாலும்
புன்னகை நிறைந்த உங்கள் பூமுகம்
புத்துணர்வுடன் எங்கள் மனதில் வீற்றிருக்க
காலமெல்லாம் எங்கள் அனைவரின் கண்களின்
கண்ணீரையே காணிக்கையாக்கி சென்றீர்களே
நல்லூர்க் கந்தனின் நற்கருணையுடன்
நாம் இப்புவியில் நலமாக வாழ
இனிதே எம் இல்லத்தில் இறையொளி பரப்பி
இன்பமுடன் வழிகாட்ட இரந்து நிற்கின்றோம்.

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: மனைவி, கொழும்பு-15. T.P.:- 078-671211

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 02 1934



மறைவு 19 11 2001

### திரு நல்லதம்பி புஷ்பராஜா

| திதி |
|---|
| 19 |
| 12 |
| 2001 |

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா
என்று ஆசையுடன் அழைத்து மகிழ
உறவொன்றில்லையே அப்பா...
எத்தனை நாட்கள் சென்றாலும்
உங்கள் நினைவாலும் பிரிவாலும் வாடும்.
உங்கள் அன்புச் செல்வங்கள் உங்கள்
ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும்
என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புச் செல்வங்கள்


திருமதி ராஜினி ஸ்ரீசாந்தா (கொழும்பு)
திரு.ராஜ்குமார் குடும்பம் (ஜெர்மனி) தொ.பே.இல:- 0049-9723930158
செல்வி ரஜனி வவுனியா
திரு.ரகுமார் (கனடா) தொ.பே.இல- 001416-7598808
திரு.ரவீந்திரகுமர்ர் அன்ரனி (பிரான்ஸ்) தொ.பே.இல:- 00331-48972383
திருமதி.ரஞ்சினி சுப்கர்ணன் (பிரான்ஸ்)
செல்வி. ரதிமாலா வவுனியா
பேரப்பிள்ளைகள்
துவாரகன், தனுஷா, நிகாஷினி, தீபிகா (துர்க்கா)

தகவல்:- மகன் பு.ரகுமார் இல: 30/41 A கோவில்வீதி, குருமன்காடு, வவுனியா. தொ.போ.இல:- 024-23328.


# மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் முழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நாலும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NI. JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குலநாயகம்-பசுபதிப்பிள்ளை

(ரூபன் இளைப்பாறிய அதிபர்)

| மலர்வு: 08. 03. 1929 | உதிர்வு: 19. 12. 1997 |
|---|---|

"நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாய் இருப்பார்கள்"
(நீதிமொழி 20:7)

உள்ளத்தில் என்றும் உதிர்ந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையே, ஆயிரம் தலைமுறைகள் ஆனாலும் எங்கள் அப்பாவே உங்கள் அன்பும் பாசமும் -என்றும்அழியாது. கலங்கரை விளக்கத்தின் ஒளி விளக்கே! எங்களை அன்பாலும், பண்பாலும், அரவணைத்து அறிவை ஊட்டிய எங்கள் அப்பாவே, நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள் நகர்ந்தாலும் உங்கள் நினைவுகளினால் தினமும் நினைத்து வதங்கி வாடுகின்றோம். எங்கள் கண்ணீரால் தினமும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

தகவல்: ப.ரகு.சூரிச் (Swiss)

# 'புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர வேண்டியது தமிழ்க் கட்சிகளின் கடமை'

கடந்த பொதுத்தேர்தலின்போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களித்த சகலருக்கும் நன்றி தெரிவித்து அந்தக் கட்சி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வர வேண்டிய கடமை தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புக்கு உண்டு என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின்போது பல்வேறு நெருக்கடிகள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியிலும் எமது கட்சியின் சார்பாக வாக்களித்த பல்லாயிரக்கணக்கானவர்களில் ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இத்தேர்தலின் முடிவுகள் குறித்து எமக்கு மகிழ்ச்சியில்லை. எனினும் முக்கியமான மூன்று விடயங்களில் எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாவதாக நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காணமுடியும் என்பதைப் பகிரங்கமாக எந்தவிதமான ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படுத்தி வந்தோம். புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது உரையின்போது அழகான இந்தத் தீவில் ஒருங்கிசைவாக ஒன்று கூடி வாழ முடியும் எனக்குறிப்பிட்டு உள்ளார். இது உளப்பூர்வமானதா அல்லது உதட்டளவிலானதா என்பது வேறு விடயம். ஆனால் அவரை இவ்வாறு சொல்ல வைத்தமையானது எமது செயற்பாடுகளுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

இரண்டாவதாக 1989ன் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களைப் பதவி துறக்க வைத்தும் 1994ல் மக்களில் வாக்களிப்பில் ஈடுபடுவதற்கே அனுமதி மறுத்தும் வந்த சக்திகள் பாராளுமன்ற பொதுத் தேர்தலைப் பயன்படுத்த முடியும் என்ற தீர்மானம் மேற்கொள்ள எமது நடவடிக்கைகளே காரணம் என்பது வெளிப்படை. பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நின்றவர்களை ஒரே மூட்டையில் கட்டி வைத்துப் பின்னாலிருந்து இயக்கிய சக்திகளின் சதி முன்னிலைக்கு வந்துள்ளது. எனினும் நாம் முன்னெடுத்துச் சென்ற பாதைக்கு இத்தகையவர்களை இழுத்து வந்திருப்பது வெற்றியாகும்.

மூன்றாவதாக கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலைவிடவும் அதிகப்படியான வாக்குகள் இம்முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் எமக்கு கிடைத்துள்ளது. எனவே எமது வாக்கு வங்கி உறுதியான அடித்தளத்தைக் கொண்டுள்ளது.

எனவே தேர்தல் முடிவுகள் குறித்து நாம் மகிழ்ச்சிகொள்ள முடியாத போதும் கவலையடைவதற்கில்லை. மேலும் 1989 பொதுத் தேர்தலின்போது நிலவியதை விடவும், 1994ன் பொதுத் தேர்தலின்போது காணப்பட்டதைவிடவும், ஜனநாயகபூர்வ சூழ்நிலை தற்போது நிலவுகிறது என்பது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு இழப்புக்களையும் துன்ப துயரங்களையும் ஏற்றுச் சகித்துக் கொண்டுதான் இந்த ஜனநாயகச் சூழலை நாங்கள் தோற்றுவித்தோம். இந்தச் சூழலை தவறாகப் பயன்படுத்திய சக்திகள் கபடத்தனமான குறுக்கு வழிகள் மூலம் அவர்களே எதிர்பாராத வகையில் முன்னிலைக்கு வந்துள்ளன. எனவே உருவாகியுள்ள இந்த ஜனநாயக சூழலைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும், போர்ச்சூழலால் துன்பப்படும் மக்களின் அன்றாட வாழ்க்கை அவலங்களைக் களைய வேண்டிய பொறுப்பும் இவர்களுக்கே உரியது.

அத்துடன் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர வேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு. கடந்த காலங்களைப் போல இந்தப் பொறுப்புகளில் இருந்தும், கடமைகளில் இருந்தும் விலகிச் செல்லவோ நழுவிச் செல்லவோ ஒதுங்கிக் கொள்ளவோ புதிய பிரதிநிதிகள் முற்படமாட்டார்கள் என நம்புகிறோம்.

மேலும் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் முதன்மைச் சக்திகளாக பரிணமித்துள்ளவர்கள் புலிகள் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி சகோதரப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், யாழ்ப்பாண குடாநாட்டிற்கான தரைவழிப்பயணத்திற்கு வழி காணவும், போருக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பாடுபடுவார்களாயின் மக்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும். இந்த திசை வழிக்கு மாறாக செயற்படுவார்களாயின் தமிழ் பேசும் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரலாம் என்னும் ஆபத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் மக்களுக்கான எமது பணிகள் எந்தவித இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடரும் என்று உறுதியளிக்கின்றோம்


**சுவிஸ் பேர்ண் மாநகரில்.**

# Suji Jewellery Works

நங்கையா மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.

**T.P. 0041-31-8191837**

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

# மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் டிசம்பர் 22-28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் டிசம்பர் 29,30 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் டிசம்பர் 08, 09 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் டிசம்பர் 15, 16 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## அலசுவது-இராஜதந்திரி

# மக்கள் தீர்ப்பு

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் மிக்கதாகவே அமைந்திருந்தது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை மட்டுமல்ல. வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை கூட நடந்து முடிந்த பொதுத் தேர்தல் குறிப்பிடத்தக்க தொன்றாகவே இருந்தது.

முழுநாடுமே பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பாராளுமன்ற ஆட்சியிலிருந்து நிராகரித்துள்ள அதேசமயம், வடக்கு-கிழக்கு மக்கள் மீளவும் தமது அரசியல் ரீதியான எதிர்பார்ப்பினை இத்தேர்தல் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரை பதினேழு வருடங்கள் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, கடந்த ஏழுவருடங்களில் நிகழ்ந்த எந்தவொரு தேர்தலிலும் வெற்றியைச் சம்பாதிக்க முடியாமல் இருந்து வந்தது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா 1993ம் ஆண்டு மே தினத்திலன்று கொல்லப்பட்டதையடுத்தே ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சி ஆரம்பமானது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குப் பின்னர் ஐ.தே.கவின் தலைமையை ஆர்.பிரேமதாசா ஏற்றிருந்தார். இருப்பினும் அவரோடு முரண்பட்டு ஐ.தே.கவின் முக்கிய புள்ளிகளாகவிருந்த காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத்முதலி ஆகியோர் அக்கட்சியிலிருந்தும் வெளியேறினர்.

இவ்விரு அரசியல் வாதிகளும் ஐ.தே.க.வைப் பொறுத்தவரை முக்கிய தூண்களாக இருந்தவர்கள். ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசியல் பாசறையில் மிக இளவயதிலேயே முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை இவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். காமினி, லலித் ஆகியோர் ஜே.ஆரினால் வருடி விடப்பட்ட காலப்பகுதியிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பிரவேசமும் ஆரம்பமாகியிருந்தது.

காமினி, லலித் ஆகியோர் காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை பகைத்துக் கொண்டு ஐ.தே.க.விலிருந்தும் வெளியேறிய சமயம், திரு.ரணில் விக்கிரமசிங்க பிரேமதாசாவின் விசுவாசியாக ஐ.தே.க.வில் இருந்து வந்தார்.

எதிர்பாராத விதமாக ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்டதையடுத்து பிரதம மந்திரியாகவிருந்த டி.பி.விஜேதுங்க அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியானார்.

இதனையடுத்து பிரதம மந்திரியாக 1993ம் ஆண்டு திரு.ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

இருந்தபோதிலும் ஐ.தே.க.வினுள் ரணில் மீது அதிருப்தி கொண்டோரும் இருந்தனர். இவர்கள் மீளவும் திரு.காமினி திசாநாயக்காவை ஐ.தே.வில் சேர்த்துக் கொண்டதோடு 1994ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க சார்பில் காமினி திசாநாயக்காவை ஒரு வேட்பாளராகவும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கெதிராக நிறுத்தியிருந்தனர்.

ஆனால் கொழும்பில் இடம்பெற்ற ஐ.தே.க.வின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காமினி திசாநாயக்காவும், அவரை ஆதரித்த ஐ.தே.க.வின் முக்கியஸ்தர்கள் சிலரும் சக்திமிக்க குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டனர்.

அதேசமயம் ஐ.தே.க.விலிருந்து விலகிச் சென்ற மற்றொரு அரசியல் புள்ளியான லலித் அத்துலத் முதலியும் தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பங்குபற்றியிருந்த தருணத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

ஐ.தே.க.வைக் கட்டியெழுப்பக்கூடியவர்கள் என நம்பப்பட்ட அரசியல் வாதிகள் பலரும் எதிர்பாராத விதத்தில் மரணங்களைத் தழுவியிருந்தனர். இத்தருணத்திலேயே ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் தலைமையை ஏற்க வேண்டிய நிலைக்குள்ளாகியிருந்தார்.

1994ம் ஆண்டின் பின்னர் மிகவும் பலவீனமான நிலைக்கு ஐ.தே.க தள்ளப்பட்டிருந்தது. 1994ம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க.வினால் உறுதியான வெற்றிகள் எதனையும் பெற முடியவில்லை.

ஆனால் இத்தடவை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 109 ஆசனங்களைப் பெற்று ஐ.தே.க நல்லதோர் வெற்றியை ஈட்டியுள்ளது.

திரு.ரணில் விக்கிரம்சிங்கவும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமராகியுள்ளார்.

இத்தடவை பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது ஐ.தே.க பலமான இருமுனைத்தாக்குதல்களை எதிர்நோக்கியிருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபறமும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மறுபறமுமாக ஐக்கியதேசியக் கட்சிமீது கடுந்தாக்குதல்களைத் தொடுத்திருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்படுத்தி துவேசத்தனமாகவும் ஐ.தே.க சாடப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் நாடுபிளவுபடுவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க.வின் தேர்தல் செலவுகளுக்கு எல்.ரி.ரி.ஈ நிதியுதவி வழங்கியுள்ளது, போன்ற பிரசாரங்களை ஜே.வி.பி.யும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் நாட்டின் மூலை முடுக்குகள் அனைத்திலுமே மேற்கொண்டிருந்தன.

கடந்த பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றின் போது நிறை வேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை நீக்குதல், புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருதல் என்ற வாக்குறுதிகளையே பொது ஜன ஐக்கிய முன்னணி முன்வைத்திருந்தது.

ஆனால் இத்தடவை தேர்தலில் ஐ.தே.க.வை புலிகளோடு சம்பந்தப்படுத்திப் பிரசாரங்களை முன்னெடுப்பதன் மூலம் மக்களைத் தம்பக்கம் ஈர்க்க பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் முனைந்தன. ஆனால் இம்முயற்சியில் இவ்விரு தரப்பும் தோல்வியையே தழுவியுள்ளன.

'சிலரைச் சில காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது' எனக் கூறப்படுவதுண்டு.

மணிக்கணக்கில் மக்கள் திரண்டு நின்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசப்படுபவற்றுக்கு செவி மடுக்கிறார்கள். ஆனால் பேச்சாளர்களோ வார்த்தை ஜாலங்களைப் பாவித்து மக்களை மடையர்களாக்கவே முனைகின்றனர்.

இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் ஒருசாபக் கேடாகவே இருந்து வருகின்றது. இந்த யுத்தம் தீராத வரை எவ்வகையிலும் ஒரு விமோசனம் நாட்டுக்குக் கிடைக்கப்போவதில்லை என்பதனை முழுநாடுமே நன்கறிந்து வைத்துள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின் தாக்கம், அப்பிரதேசங்களை மட்டும் பாதிக்கவில்லை. முழு நாட்டையுமே வெகுவாகப் பாதித்துவிட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் வெளியான இருளடைந்த பௌர்ணமி (புரசந்த களுவர) என்ற சிங்களத் திரைப்படம், வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள அப்பாவிச் சிங்கள கிராம வாசிகள் எவ்வளவு தூரம் யுத்தத்தின் கொடுமையை அனுபவிக்கின்றனர் என்ற கதையையே மையமாகக் கொண்டிருந்தது.



யுத்தத்தில் பலியான இராணுவவீரர் ஒருவரது உடலைக்கூட அவரது உறவினர்களால் பெற முடியாதுபோன ஓர் உண்மைச் சம்பவத்தைக் கருப்பொருளாகக் கொண்டே அக்கதை அமைந்திருந்தது.

வடக்கு-கிழக்கில் பணியாற்றும் படையினரை எடுத்து நோக்கும் பட்சத்தில் அடிமட்டச் சிப்பாய்களாகவுள்ள ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இவர்கள் யுத்தம் புரிகின்றனர் என்று கூறுவதை விட, யுத்தம் இவர்கள்மீது திணிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

விதவைகள், அநாதைகள், அகதிகள் என லட்சக் கணக்கானவர்களைக் கடந்த இருதசாப்த காலமாக இடம்பெற்று வரும் யுத்தம் உருவாக்கி விட்டுள்ளது.

இத்தகைய கொடிய யுத்தம் விரைவாகத் தீர்க்கப்பட்டு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஒரு விரைவான அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமென்ற நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிப்பதாகவே இத்தடவைத் தேர்தல் முடிவுகள் விளங்கியுள்ளன.

பெருங்கட்சிகள் என்றிருந்தவை சோடிக்க முனைந்த இனவாதப் பிரசாரங்களை மக்கள் ஓரந்தள்ளியுள்ள அதேசமயம், இனவாதத்தையே 'தாரகமந்திர'மாகக்கொண்டிருந்த சிஹல உறுமய கட்சியை பாராளுமன்றிலிருந்தும் மக்கள் விரட்டியடித்துள்ளனர்.

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை சிஹல உறுமயக் கட்சி பெற்றிருந்தது. இந்த ஒரு ஆசனத்தைப்பெற்ற நிலையில் அக்கட்சி இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகளை வன்மையாகவே எதிர்த்து வந்தது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான அரசியல் தீர்வு முயற்சிக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதிலும் சிஹல உறுமயக் கட்சிக்கு நிறையவே பங்கிருந்தது.

ஆயினும் இத் தடவைத் தேர்தலில் சிஹல உறுமயக் கட்சிக்கு நாட்டு மக்கள் நல்ல பாடம் புகட்டியுள்ளதையே அவதானிக்க முடிந்தது.

இதேவேளை வடக்கு-கிழக்கின் தேர்தல் முடிவுகள் மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. வடக்கு-கிழக்கைச் சேர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இத்தடவைத் தேர்தலில் வழங்கியுள்ளனர்.

நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு உதய சூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட்டிருந்தது. இந்த நான்கு கட்சிக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி), ரெலோ ஆகிய நான்கு கட்சிகளும் அங்கம் பெற்றிருந்தன. ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் உட்பட பதினைந்து ஆசனங்களை நான்கு தமிழ்க் கட்சி கூட்டமைப்பு வென்றிருந்தது.

இக் கூட்டமைப்பில் சேராத திரு.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), வடக்கே இரு ஆசனங்களை வென்றிருந்தது.

திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பு வன்னியில் ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் போட்டியிட்ட நான்கு தமிழ்க் கட்சி கூட்டமைப்பு, மற்றும் இக் கூட்டில் சேராத ஈ.பி.டி.பி, புளொட் ஆகியவை இத்தடவை தேர்தலில் வெவ்வேறாக தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டிருக்கலாம்.

ஆனால் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் பேச்சுக்கள் என்ற விடயத்தில் ஒரு பொதுநிலைப்பாட்டையே வடக்கு-கிழக்கில் போட்டியிட்ட அனைத்து தமிழ்க்கட்சிகளுமே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த தமிழ்ப் பிரதேசம் என்பது உட்பட, ஒரு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சனைக்குரிய அரசியல் தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்பதை அனைத்துத் தமிழ்க் கட்சிகளுமே வலியுறுத்தியிருந்தன.

1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தனி ஒரு பெருங் கட்சியாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரு வெற்றி பெற்றிருந்தது.

இருபத்திநான்கு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தென்னிலங்கையில் அமோக வெற்றி பெற்ற அதேசமயம், வடக்கு-கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பெருவெற்றி பெற்றிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வெற்றி அக்கட்சியை அன்றைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் மாற்றிவிட்டிருந்தது.

ஆனால் காலப்போக்கில் ஜே.ஆர். ஜயவர்த்தன அரசு அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை பாராளுமன்ற ஆட்சியைப் பலவீனப்படுத்தியதோடு, வடக்கு-கிழக்குப் பிரச்சனையையும் சிக்கலாக்கிவிட்டிருந்தது.

தனிநாடு, தமிழீழம் என்ற கோஷங்களோடு பாராளுமன்றத்தினுள் பிரவேசித்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தனது நிலைப்பாடுகளை விட்டுக் கொடுத்து மாவட்ட அபிவிருத்திசபை, மாகாணசபை என்ற தீர்வுத் திட்டங்களைக் கூட ஏற்க முன்வந்திருந்தது.

இதன் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைகள் கூட உருண்டிருந்தன.

தற்போது மீளவும் இருபத்திநான்கு வருடங்களின் பின்னர் தனியொரு தமிழர் விடுதலைக் கூட்டணி என்றில்லாது உதய சூரியன் சின்னத்தின் கீழ் நான்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.


வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை தமிழ் அரசியல் சக்திகள் அனைத்துமே ஒன்றுபட வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

வடக்கு-கிழக்கில் போட்டியிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குக் கிடைத்த பாராளுமன்ற ஆசனங்கள் குறித்து ஆராய்வதைவிட மக்கள் தீர்ப்பை மனதில் நிறுத்துவதே அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியையும் அப்பிர தேசமக்கள் நிராகரிக்காமல் இருந்துள்ளதையே தேர்தல் முடிவ வெளிக்காட்டுகிறது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு மக்கள் எதனை எதிர் பார்க்கிறார்களோ அதனை நிறைவேற்ற வேண்டியதே தமிழ் அரசியல் கட்சிகளின் தலையாய கடமையாகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**தமிழ்க் கூட்டமைப்புக் காரார்** தங்ளின்ர தேசியப் பட்டியல் எம்.பி.யாக அண்ணர் சிவசிதம்பரத்தை நியமிச்சுப் போட்டினம். எண்பது வயசுக்கு மேல எழுந்து நடக்க கஷ்டப்படுர சிதம்பரத்தாரால எம்.பி.யாக இருக்க முடியாதெண்ட செய்தி ஆனந்தசங் கரிக்கும் சகாக்களுக்கும் தெரியா தென்று நினைக்காதியல். சிவாவின் பேரைச் சொல்லி தமிழ்க்காங் கிரஸ்காரரை ஓரங்கட்டிப் போட்டு பிறகு அவரை பழையபடி இந்தியாவுக்கு அனுப்பி வைக்கிறதுதான் திட்டம். எம்.பி. பதவியை தங்களின்ர கைக்கு எடுக்கும் வரைதான் சிதம்பரத்தார். குமரகுருபரனை நியமிக்க விநாயகமூர்த்தி ஓடித்திரிந்தும் பிர யோசனமில்லாமல் போச்சு. தண்ணீருக்குள்ளால் நெருப்புக்கொண்டு போகும் தண்ர வழமையான ஸ்டைலை காட்டத் தொடங்கியிருக் கிறார் ஆனந்த சங்கரி.

**தேர்தல் முடிஞ்சுது.** மகேஸ்வரன் வெற்றியும் பெற்றிருக் கிறார். பச்சைக்கட்சி ஆட்சிக்கும் வந்துவிட்டுது. இனிமேல் யூ.பி. சொன்ன மாதிரி 20 நாளில குடாநாட்டில இருந்து படை விலகு வதும் 40 நாளில தரை வழிப்பாதையை திறக்குறதும்தான் பாக்கி! யூ.பி.யின்ர காலக்கெடுவில ஒரு வாரம் கழிஞ்சுட்டுது. இன்னும் ரெண்டு வாரத்துல யாழ்ப்பாணத்துல இருக்கிற இராணுவத்தை முட்டை முடிச்சுக்களோட தென்னிலங்கைக்கு திருப்பி அனுப்பிடுவார் மகேஸ்வரன்! அதன் பிறகு 40 நாளுக்குள்ள தரைவழிப்பாதையை திறந்து வன்னி ஊடாக யாழ்ப்பாணம் போவார்!

**ரவி ராஜ் எம்.பி.யாகிட்டார்.** எஞ்சியிருக்கிறவை யாழ். மேயர் பதவிக்கு அடிபடுகினம்! 'தம்பிமார்' ஒப்படைச்சிருக்கிற பணி பாராளுமன்றத்துல முறையா நிறைவேற்றப்படவில்லை எண்டால் எம்.பி.களுக்கு மட்டுமல்ல மேயர்களுக்கும் மலர் வலயம் கிடைக்கும் என்றத மறந்திட்டினம் போலக்கிடக்கு!

**பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு** கிடைத்த தோல்வியின் காயம் ஆறுவதற்குள்ளேயே எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பெருந்தலைகள் முரண்பட்டு நிற்கினம். 'தோல்வியின் சின்னமான' பண்டாரநாயக்க புத்திரரை நியமிக்கத்தான் அக்காவுக்கு விருப்பம். உவர் பரசூட் பொருத்தினால்போல அங்கும் இங்கும் பறந்து திரிந்து போட்டு வந்து எப்படி எதிர்கட்சித் தலைவராகுறதென்று சீறிக்கொண்டு கிடக்கிறார் மகிந்த ராஜபக்ஷ. உந்தாக்களின்ர சச்சரவால் கடைசியில் பலன் கிடைத்தது இரட்ணசிறி விக்கிர மநாயக்காவுக்குத்தான். ஏற்கனவே சிறுபான்மைக்கட்சிகள் பலவும் பொதுஜன ஐக்கிய முன்னணியை விட்டு தூர விலகியிருக்கிற சமயத்துல இரட்ணசிறி மாதிரி கடும் சிங்கள பௌத்தத்துவம் பேசுர ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரானால் அரோஹராதான். உந்தக் குழப்பங்களுக்குள்ள பௌசியின்ர 'தேசிய அரசாங்க' ஆசையை பார்த்தியலே... பச்சை நிறத்தில் அமைச்சராகலாமா... என்ற பரிதாப முயற்சி!

**அரச ஊடகங்கள்** எத்தனை வேகமாக ஒரே நாளில நீலத்துல இருந்து பச்சையா மாறிப்போச்சென்று நினைக்கைக்க அதிர்ச்சியாக் கிடக்கு! ஏரிக்கரையில நீல நிறத்துக்கு ஆளவட்டம் பிடித்துக் கொண்டிருந்தவை எல்லாம் ஆட்சி மாறின அடுத்த கணம் தங்களை பச்சைக் கட்சியில ஊறிப்போனவையாக காண்பிக்க படாதபாடு பட்டவையாம். வாழ்க பத்திரிகை உலகம்!

கண்களைப் பற்றி ஒரு சின்னக் கவிதை.

**துயருற்றிருப்போரை கண்டு இரக்கப்படாத எந்த விழிகளும் ஊமை விழிகளே!**

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்வ் ஹிட்லர்

## உண்மைத் தொடர் 35

பிரான்ஸில் ஜெர்மனியப் படைகள் பெருவெற்றியீட்டிய போதிலும் தங்களுக்கெதிராக போரிட்ட ஒட்டுமொத்தமான பிரிட்டிஷ், பிரான்ஸ் படைகளை அழிக்க நாஸிப்படைகளால் முடியவில்லை. முடியவில்லை என்று சொல்வதைவிட அதை அவர்கள் செய்யவில்லை என்பதுதான் பொருத்தமானது. பிரான்ஸில் இருந்து தப்பிச் செல்லும் பிரிட்டிஷ் படைகளை துரத்திச் சென்று அழிக்க வேண்டாம் என ஹிட்லர் தனது தளபதிகளுக்கு உத்தரவிட்டிருந்தான். "நின்றுவிடும் கட்டளை" என அழைக்கப்படும் இந்த உத்தரவின் பிரகாரம் ஜெர்மன் தளபதிகளின் கைகளை ஹிட்லர் கட்டிப்போட்டான். அரசியல் நோக்கம் கொண்ட இந்த முடிவு குறித்து பல்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் உலகின் செல்வம்மிக்க பகுதிகளை பகிர்ந்து கொள்வதில் பிரிட்டனுடன் ஓர் உடன்பாட்டுக்கு வர ஹிட்லருக்குள் இருந்த விருப்பத்தின் பிரதிபலிப்பே இதுவென பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.


ஹிட்லரின் இந்த 'நின்றுவிடும் கட்டளை' குறித்து அவனது முக்கிய தளபதிகளில் ஒருவனான ருன்டிஷ்டேட் என்பவன் தனது நாட்குறிப்பில் பின் வருமாறு எழுதுகிறான்.

"எனது விருப்பப்படி இயங்க என்னை அனுமதித்திருந்தால். ஆங்கிலேயர் பிரான்ஸில் இருந்து அத்தனை எளிதில் வெளியேறியிருக்கமுடியாது. ஆனால் ஹிட்லரின் தனிப்பட்ட கட்டளையால் எனது கரங்கள் கட்டிப்போடப்பட்டன. கரையோரத்திலிருந்து கப்பல்களில் ஆங்கிலேயர்கள் ஏறிக் கொண்டிருந்த சமயம் துறைமுகத்தில் இருந்த என்னால் விரலைக்கூட அசைக்க முடியவில்லை. என்னுடைய டிவிஷனில் உள்ள 5 தாங்கிகளை உடனடியாக அங்கு அனுப்பி பின்வாங்கும் ஆங்கிலேயர்களை அழிக்குமாறு தலைமை பீடத்துக்கு சிபார்சு செய்தேன். இதற்குப் பதிலாக ஹிட்லரின் கண்டிப்பான கட்டளை ஞாபகப்படுத்தும் கடிதம் வந்தது. இதனால் எந்த ஒரு சூழ்நிலையிலும் முன்னேறித்தாக்க எனக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. 10 கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்தை நெருங்குவது தடை செய்யப்பட்டிருந்தது.

அருகில் இருந்த நான் ஆங்கிலேயர்கள் எப்படிப் பின்வாங்குகிறார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருந்தேன். எனது டாங்கிகளும், காலாட்படைகளும் இடத்தை விட்டு நகருவது தடை செய்யப்பட்டிருந்தது" என குறிப்பிட்டுள்ளான்.

யுத்த காலத்தில் ஹிட்லரினால் ஜெர்மனியில் இருந்து விடுக்கப்படும் கட்டளைகள் பிறநாடுகளில் செயற்படும் அவனது தளபதிகளால் நூறு சதவீதம் கடை பிடிக்கப்பட்டாக வேண்டும். அதனை சிறு அளவிலேனும் மீறும் எந்தப் பெரிய படை அதிகாரியை தனது எஸ்.எஸ்.உளவாளிகள் ஊடாக கொலை செய்வது ஹிட்லரின் வழக்கமாக இருந்தது. ஹிட்லர் பிறப்பிக்கும் கட்டளைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதை அவதானிப்பதற்கென்றே தனியான உளவு நிறுவனம் ஒன்றை அவன் அமைத்திருந்தான். முக்கிய இராணுவ முடிவுகள் செயற்படுத்தப்படும் விதம் குறித்து மாத்திரம் இந்த உளவாளிகள் கண்காணித்தனர்.

ஜெர்மனியர்களால் அடித்துத் துரத்தப்பட்ட ஆங்கிலேயர்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்கும் எதிராக யுத்தத்தில் குதிக்க இத்தாலி நாட்டின் கொடுங்கோன்மைவாதி முசோலினி தீர்மானித்தான். பிரான்ஸ் முழுத்தோல்வியின் விளிம்பில் இருப்பதை முசோலினி அறிந்திருந்தான் இதற்குமேல் தாமதித்தால் போர் முடிவடைந்ததும் இரையில் பங்கு கேட்க முடியாமல் போகுமோ என்ற பயம் அவனுக்குள் ஏற்பட்டது.



"யுத்தத்தில் பங்கேற்றவன் என்ற வகையில் சமாதானப் பேச்சு வார்த்தையில் போய் அமர எனக்கு ஒரு சில ஆயிரம் பிணங்கள் மாத்திரம் போதும்" என்று தனது தளபதியிடம் கூறினான் முசோலினி. பிரான்ஸுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்துமாறு தன்னுடைய இராணுவத்துக்கு உத்தரவிட்டிருந்தான்.

ஆனால் அவன் நினைத்தஅளவில் அந்தத் தாக்குதல் வெற்றிபெறவில்லை. முசோலினியின் இந்த இறுதி நேர பிரவேசத்தை ஹிட்லர் விரும்பவில்லை.

இந்த அரசியல் நிகழ்வை வழமைக்கு மாறாக ஈவாவிடம் சொல்லி கோப்பட்டான் ஹிட்லர். இதற்கு முன்னர் சில விடயங்களில் ஹிட்லருக்கும் முசோலினிக்கும் இடையில் உடன்பாடு நிலவிய போதிலும் பிரான்ஸ் விஷயத்தில் முசோலினி காட்டிய கபடத்தனம் ஹிட்லருக்குப் பிடிக்கவில்லை.

இதை ஈவா பிரௌனிடம் சொல்லி விட்டு அவளது பதிலுக்காக காத்திருந்தான். அவள் எதுவும் பேசவில்லை. ஹிட்லருக்கு ஏமாற்றமாக இருந்தது. பிறகு மெதுவாக வாய் திறந்து கோயபல்ஸ் போல இதில் கருத்துச் சொல்ல எனக்குத் தெரியவில்லை என்று சொன்னாள் ஈவா.

அப்போ உனக்கு என்னதான் தெரியும்... என்று கேட்டான் ஹிட்லர். இப்படி நீங்கள் சூடாக இருக்கும் நேரங்களில் உங்களை குளிர்விக்கத் தெரியும் என்று சொல்லிசிரித்தாள். அதற்கு மேல் அவளுடன் அரசியல் பேசும் எண்ணம் அவனிடம் இல்லை. கோபம் ஆறிப்போனது. நின்று கொண்டு வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளை நெருங்கிச் சென்று முத்தமிட்டான் ஹிட்லர்.

ஈவா 'சூடாக' இருந்தாள். அவனை மேலும் இறுக்கமாக . அணைத்தவள் வழமைக்க மாறான வேகத்துடன் ஹிட்லரை முத்தமிட்டாள். அவனது கைகள் அவளது தோளில் வேகமாக அழுத்தின.

**வருவான்...**



ஷொனு

# மூண்டது போர் 9

## தருவது ~ தண்டாயுதன்

➔ ஆப்கானிஸ்தானில் ஒசாமாபின்லாடனைத் தேடிக் கண்டு பிடிக்கும் விதத்தில் அமெரிக்கா ஆரம்பித்த 'வியாபித்த நீதி' என்று பெயரிடப்பட்ட யுத்தம் இரண்டாவது மாதத்தை எட்டியுள்ளது. இந்த இரு மாதகாலத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. எதிர்த்து நின்று போரிடுவார்கள் என்று தலிபான்கள் எதிர்பார்க்கப்பட்டனர். ஆனால் அமெரிக்காவின் ஒத்தாசையுடன் வடக்குக் கூட்டணிப் படைகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாதவர்களாக தலிபான்கள் இருந்து வருகின்றனர். தலிபான்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். அநேகர் சரணடைந்துள்ளனர்.



அகதி முகாமில் உணவுக்காக காத்திருக்கும் ஆப்கான் சிறுவர்

➔ அமெரிக்காவினால் வேண்டப்படும் ஒசாமா பின்லாடன், அவரது அல் குவைதா அமைப்புப் போராளிகள் ஆகியோர் தொடர்ந்து யுத்தத்தை நடத்தி வருகின்றனர். இவர்களது மறைவிடங்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலை அமெரிக்க, மற்றும் வடக்குக் கூட்டணிப் படைகளுக்கு ஏற்பட்டுள்ளது. ஊகத்தின் அடிப்படையில் மறைவிடங்கள் எனக் கருதப்படும் மலைக்குன்றுகள், குகைகளை அமெரிக்கா சக்திமிக்க குண்டுகளைப் போட்டுத் தாக்கி வருகின்றது. தற்சமயம் டோரா போரா என்ற மலைக் குன்றுப் பகுதியே பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. இங்குள்ள குகைகளுக்குள்ளேயே ஒசாமா பின்லாடன் மறைந்திருக்கலாமென அமெரிக்கா கருதுகிறது. தனது போராளிகளுடன் மறைந்திருப்பதோடல்லாமல், தன்வசமுள்ள ஆயுதங்கள், வாகனங்கள், மற்றும் உணவு, மருந்துப் பொருட்கள் என்பவற்றை ஒளித்து வைத்திருக்கக் கூடிய ஒசாமா பின்லாடனின் விசாலமான மறைவிடமொன்று டோரா போரா மலைப்பகுதியில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

➔ ஆப்கானிஸ்தானில் போரிட்டு வரும் தலிபான் போராளிகளில் மிகச் சிலரே ஒசாமா பின்லாடனுடன் இருந்து வருகின்றனர். ஏனையோர் ஆப்கானிஸ்தானியர்கள் அல்லாத வெளிநாட்டு கூலிப்படையினராவர். பின்லாடனின் இந்த அல் குவைதா கூலிப் படையில் பாகிஸ்தான், செச்னியா, சவுதி அரேபியா, சீனா, ஈராக் போன்ற நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களும் இருந்து வருகின்றனர். அமெரிக்கர் ஒருவரும் இந்த அல்குவைதா அமைப்பில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவக் குடும்பமொன்றில் பிறந்து, இஸ்லாத்தைக் கற்பதற்காக சவுதி அரேபியாவுக்கு வந்து பின்னர் இஸ்லாத்தைத் தழுவி அல்குவைதா அமைப்பிலும் அந்த அமெரிக்கர் இணைந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

➔ யுத்தத்துக்கு மத்தியிலும் ஆப்கானிஸ்தான் மக்கள் புனித ரமழான் நோன்பை அனுஷ்டித்து வருகின்றனர். கடந்த இருபது வருடகால யுத்த சூழல் காரணமாக பஞ்சம், பட்டினி என்பவை ஆப்கானிஸ்தானில் தாண்டவமாடுகிறது. மக்கள் போதியளவு உணவின்றி அவஸ்த்தைப்பட்டு வருகின்றனர். இப் பரிதாப நிலையை அறிந்து பிரிட்டனில் இருக்கும் இஸ்லாமிய அன்பர்கள் ஆப்கானிஸ்தானுக்கு பெருந்தொகையான உணவுப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளனர். தானியவகை, சமையல் எண்ணெய், பேரீச்சம்பழம் என்பவை உட்பட ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதகாலத்துக்குத் தேவையானவை என்ற ரீதியில் பெருந்தொகைப் பண்டங்கள் பிரிட்டனில் உள்ள இஸ்லாமிய மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வேறு பல இஸ்லாமிய அமைப்புக்களும் இதையொத்த உதவிப் பணிக்கு சர்வதேச ரீதியாகத் தயாராகி வருகின்றன.

➔ ஜெர்மனியின் பொன் நகரில் ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. வடக்குக் கூட்டணிப் படைகளின் பிரதிநிதிகள், மற்றும் ஆப்கானிஸ்தானின் பல்வேறு இனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் இந்த உடன்பாட்டுக்கு வந்துள்ளனர். யுத்தம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க இடைக்கால அரசாங்கமும் தனது பணியை மறுபுறத்தே ஆரம்பிக்கவுள்ளது. சர்வதேச சமூகம் ஆப்கானிஸ்தானில் புனர்நிர்மாணப் பணிகள் உட்பட ஏனைய நிவாரணப் பணிகளுக்கு தாராளமாகவே உதவ முன்வந்துள்ளது.

➔ ஆப்கானிஸ்தானில் ஜலாலாபாத் நகரில் வீடொன்றைச் சோதனையிட்ட அமெரிக்கப்படையினர் வீடியோ ஒளிப்பதிவு நாடாவொன்றைக் கைப்பற்றியுள்ளனர். இந்த ஒளிப்பதிவு நாடாவில் அமெரிக்காவில் செப்டெம்பர் 11ந் திகதி நடத்தப்பட்ட தாக்குதலோடு ஒசாமா பின்லாடன், சம்பந்தப்பட்டுள்ளமைக்கான ஆதாரம் அப்பட்டமாக இருப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். ஒசாமா பின்லாடனின் திட்டங்கள், அவர் அமெரிக்கத் தாக்குதல் பற்றி எடுத்த நடவடிக்கைகள் என்பவற்றை அந்த வீடியோ நாடா வெளிப்படுத்துகிறதாம்.

➔ இப்பொழுது அமெரிக்காவில் ஒரு புதிய அபிப்பிராய வாக்கெடுப்பை பல ஊடக நிறுவனங்கள் நடத்துகின்றன. அமெரிக்கப் படைகள் முழு அளவில் ஆப்கானிஸ்தானுக்குள் இறங்கியுள்ளன. ஒசாமா பின்லாடனே அப்படைகளின் இலக்கு. எனவே பின்லாடன் பிடிபடுவாரா? அல்லது பிடிபடமாட்டாரா? என்பதே அந்த அபிப்பிராய வாக்கெடுப்பாகும். 80 சதவீதமானோர், ஒசாமா பிடிபடுவார் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர். 20 சதவீதமானோர் அவரைப் பிடிப்பது முடியாத காரியம் எனக் கூறியுள்ளனர்.

**(தொடரும்)**



## பிழைப்பு

இந்த பங்களாதேஷ் குழந்தையின் அருகில் இருக்கும் குரங்குதான் அவளது குடும்பத்து ஜீவனோபாயத்தின் மூலதனம். தந்தை டாக்கா வீதிகளில் குரங்கு வித்தை காட்டித்தான் குழந்தைக்குப் பால் வார்க்கிறார். டாக்காவில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இவ்வாறு குரங்காட்டிப் பிழைப்பு நடத்துகின்றன.

இத்தாலி நாட்டு நிதியமைச்சினால் கடந்தவாரம் வெளியிடப்பட்ட படம் இது. அந்நாட்டு அழகி ஒருவர் கையில் லீரா நாணயம் ஒன்றைப் பிடித்துக்கொண்டு உண்டியல் ஒன்றின் மேலால் அமர்ந்திருக்கிறார். இத்தாலி புற்றுநோய் தடுப்பு பிரிவிற்க்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் வெளியான இந்த விளம்பரத்தில் "லீரா நாணயத்தின் கடைசி நற்பணி" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவுக்கான கூட்டு நாணயமாக யூரோ அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால் அடுத்த ஆண்டு முதல் லீரா நாணயம் செல்லுபடியற்றதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடைசிச்சேவை






## சொக்லட் மரம்

நத்தார் பண்டிகை நெருங்கிவிட்டது. உலகம் முழுவதிலும் ஆங்காங்கே நத்தார் மரங்கள் நாட்டப்பட்டு ஒளி விளக்குகளால் அழங்கரிக்கப்படுகின்றன. படத்தில் இருப்பது முழுவதும் இனிப்பான ஒரு நத்தார் மரம். அதாகப்பட்டது சொக்லட்டினால் தயாரிக்கப்பட்ட மரம். உலகில் சொக்லட்டினால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய நத்தார் மரம் இதுதான்.

தாய்லாந்தில் பாங்கொக் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்திருக்கிறார்கள். சுவிஸ் நாட்டு நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட இந்த சொக்லட் மரத்தின் உயரம் 2.3 மீற்றர். 1.2 மீற்றர் அகலமுடையது. 85 கிலோகிராம் நிறையுடைய சொக்லட் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## ஒட்டிப் பிறப்பு

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் தலையால் ஒட்டிப் பிறந்த இரண்டு குழந்தைகள் பால் அருந்துகின்றன. அந்நாட்டில் இவ்வாறான குழந்தைகள் பிறந்திருப்பது இதுதான் முதல் தடவை என்பதால், இவற்றை வெட்டிப் பிரிப்பது எப்படி என்று புரியாமல் மருத்துவர்கள் திண்டாடுகின்றனர். மேல்நாட்டு வைத்தியர்களின் உதவி நாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



தகவல் பெட்டி



## 'சர்வாதிகாரி'

'வாத்தியார் வீட்டுப் பிள்ளை', 'நடிகன்', 'பிரம்மா', 'தமிழ்ச்செல்வன்', 'வள்ளல்' போன்ற பல மாபெரும் வெற்றிப்படங்களை தயாரித்த நிறுவனமான ராஜு பிலிம்ஸ் இண்டர் நேஷனல் சார்பில் எம்.ராமநா... தன் தயாரிக்கும் ப... தாவது படம் 'சர்வாதி காரி'.

இதில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கிறார்.

அர்ஜுன் ஜெயில் சுப்பிரண்ட் ஆக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக பிரபல மும்பை நடிகை ஒருவர் நடிக்கவிருக்கிறார். ரகுவரன், கவுண்டமணி, வடிவேலு, செந்தில் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

## சிலம்பரசன் பாடினார்

'மோனிஷா என் மோனாலிஷா' படத்தில், சொந்தக் குரலில் பாடிய சிலம்பரசன் அடுத்து 'சாக்லெட்' படத்தில் பாடினார். அதையடுத்து 'ரெட்' படத்திலும் பாடியிருக்கிறார்.

இப்போது விஜயசாந்தி கதாநாயகியாக நடிக்கும் 'பண்ணாரி அம்மன்' படத்திலும் ஒரு கரகாட்டப் பாடலைப் பாடியுள்ளார்.



ஜோதிகா-த்ரிரோசஸ்

## முரளியின் ராசி இதுதான்



முரளி

பிரபுதேவா, முரளி கெஸ்ட் ரோல் நடித்த 'அள்ளித்தந்த வானம்' படத்தினை பத்திரிகையாளர்களுக்கு போட்டுக் காட்டலாம் என்று நினைத்துக் கொண்டிருந்திருக்கிறார் தயாரிப்பாளர். உடனே குறுக்கே விழுந்து அவரை வழிமறித்த முரளி, பத்திரிகைகாரங்க எழுதி என்னத்தை கிழிச்சிட்டப் போறாங்க எம்படம் போட்ட போஸ்டர்களை ஒட்டுங்க சும்மா பிச்சுகிட்டு ஓடும் என்று கூறி தன் வசம் இருந்த கிளிசரின் பாட்டில் முழுவதையும் கண்ணில் கொட்டிக்கிட்டு ஆக்ட் கொடுக்குற மாதிரி பேசியிருக்கிறார். அவங்களும் சரி என்று தலையாட்டி விட்டார்களாம். இப்படம் ரிலீஸ் ஆகிவிட்டதா இல்லையான்னே பாதிபேருக்கு தெரியாது. இப்படி செய்தார் என்பதற்காக முரளியை திட்டக்கூடாது. மக்களுக்கு அவர் நன்மை செய்கிறதா நெனைச்சுக்குவோம். பாரதிராஜா தன் மகன் மனோஜ் நல்லவனாலும்னு கடலூர்களில் முரளியை போட்டாரா படம் தியேட்டருக்கே வரமாட்டேன்னு சாதிக்குது. மனோஜ் மார்க்கெட்டை டவுன் ஆக்கினார். சமுத்திரத்தில் நடித்த சரத்குமாரை டவுன் ஆக்கினார். பிரபுதேவாவுடன் நடித்து காணாமல் போக்கடிக்க திட்டம் போட்டிருக்கலாம். இப்படி ஒரு ராசியை வச்சிட்டு பத்திரிகைக்காரர்களுக்கு போட்டால் ராசியில்லைன்னு சொல்லுறாராம்.

## ...னாக அஜித்

...ஷாருக்கான் படமாக்கியிருக்கிறார். ...ல் படமாக்கப்பட்டுள்ளன. குழந்தை ...லே தடம் தெரியக்கூடாது என்பதற் ...சொல்லலாம்!

...ன் என்று இழுத்தடித்திருந்தாலும்

...ளைவுக் காட்சியில் சந்தோஷ் சிவன் ...ர்களை மிதக்க விட்டு அற்புதமான

...: ஆனால் சாம்ராட் அசோகனுக்கு

... அங்க லட்சணங்களுக்கு இலக்கண... அங்குலம் என்பார்கள்!

...ாக ஏங்குபவன் இந்த அசோகன் ... இயக்கியிருக்கிறார்கள்.

...மாக்லே கரீனா கபூர்தான்! ஏங்க ...ம்பு.

...ிருக்கிறார் அனுமாலிக் ராப்-பாப ...இருக்கிறது. பாடல் வரிகள் சரியாக ...வரிகளை எழுதிக்காட்டியிருக்கலாம்! ...யதரி ஜெயராமின் ஆடலும் பாடலும்

...(தமிழாக) அஜித்குமார் முக்கியமான ...ரமே வந்தாலும் நிறைவான நடிப்பு ...கிடைத்திருந்த வாய்ப்பினை நன்றாக

## ...தொப்புள் அறிமுகம்

...ங்கையான ஜோதி சினிமாவுக்கு வரு... ...இடத்தை ஜோதி நிச்சயம் நிரப்புவார் ...தலை வாளிப்பான உயரம், வனப்பான ...லே கிடி ஏற்றும் இடை சமாச்சாரம் ...ரசிப்பதுதானாம்.

...பிள்ளையார் சுழிபோடும் ஜோதிக்கு ...ள்ளது. எஸ்.குருசுமோகன் ஜோடியாக ...விஜய் ஜோடியாகவும் ஒரு வாய்ப்பு ...ல் நாசர் இயக்கும் படத்தில் மோகன் ...தெரிக்கப்பட்டுள்ளார். தொப்புளுடன் ...வளிப்படுத்த தன்னை முழுவதுமாக ...ஜோதியை, ஜோதிகாவுக்கு ...ளத்தில் சிம்ரன் ...ிருக்கிறது ...ன்

## பிழைக்கத் தெரிந்த பிரதியூஷா!

பிரதியூஷாவுக்கு தமிழில் நிறைய வாய்ப்புகள் குவிந்தன. ஆனால் அவற்றை எல்லாம் மறுத்துவிட்டார். காரணம் எல்லாம் தாராளமயமாக்கல் காட்சிகள். விளைவு, கையில் படங்கள் இல்லாத நிலையில் இருந்தார். தெலுங்கு, கன்னடம் என்று முயற்சி செய்தார். நிலைமை அங்கு இன்னும் மோசமாக இருக்கவே, மீண்டும் கோடம்பாக்கத்தில் அடைக்கலமானார். 'தவசி' படத்தில் இவரது நடிப்பு தமிழ்ப் பெருங்குடி இனத்தையே கதிகலங்கச் செய்திருப்பது கண்கூடு.

இப்போதெல்லாம் 'ஒரு பாடல் காட்சியாக இருந்தாலும் சரி இரு கதாநாயகிகளில் ஒருவராக நடிக்கணுமாக இருந்தாலும் அல்லது காமெடி நடிகர்களுடன் கவர்ச்சியாக இருந்தாலும் ஓ.கே. எனக்கு தேவையெல்லாம் துட்டுத்தான்' என்கிறார் பிரதியூஷா! பிழைக்கத் தெரிந்தவர் தானே.

## மூத்தம்

'ஐ லவ் யூடா' படத்தில் சிம்ரனும், ராஜு சுந்தரமும் காதலர்களாக மிக நெருக்கமான காட்சிகளில் நடித்துள்ளனர். நிஜத்திலும் காதலர்கள் என்பதால் இருவரும் உதட்டோடு உதடு வைத்து முத்தக்காட்சியில் தூள் கிளப்பியிருக்கின்றனராம்.



...ராஜ்-திவ்யா உன்னி-சுவலட்சுமி படம்: ஆண்டான் அடிமை

## மினி சினி

• நாசர் தயாரித்து இயக்கும் 'பாப்கார்ன்' தமிழ்ப் படத்தில் மலையாள நடிகர் மோகன்லாலுக்கு ஜோடியாக சிம்ரன் நடிப்பது தெரிந்ததே. படத்தில் சிம்ரனுக்கு மகளாக நடிப்பவர் சிம்ரனின் மூன்றாவது தங்கையான ஜோதி.

• 'பாண்டவர் பூமி'யின் வெற்றியைத் தொடர்ந்து சேரன் இயக்கும் அடுத்த படம் 'பொக்கிஷம்' ஹீரோவாக நடிப்பதும் சேரனேதான்!

• இந்த ஆண்டு பெரிய வெற்றிப் படங்களில் ஒன்றான 'தில்' படத்தின் தயாரிப்பாளர் அஜய் குமார் தயாரிக்கும் புதிய படம் 'யூத்'. 'பிரிய முடன்' இயக்குநர் வின்செண்ட் செல்வா இயக்கத்தில் மறுபடியும் விஜய் ஹீரோவாக இணைகிறார். விஜய்க்கு ஜோடியாக ஷாகீன் என்ற மும்பை அழகி அறிமுகமாகிறார்.

• தன்னைப் பற்றி எழுதப்படும் கிசுகிசுக்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்திலேயே தமிழ் கற்றுக் கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் பூமிகா. சொல்லித்தர 'ஆயா' தான் பிடியில் இல்லை.

• ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி விட்ட குஷ்பு, இதுவரை நடித்திராத வகையிலான படு கவர்ச்சியாக ஒரு படத்தில் நடிக்கிறாராம். படத்தின் பெயர் 'சூப்பர் ஆன்டி'. கதாநாயகர்களாக ராம்குமார், ஆனந்த பாபு ஆகிய மூன்று புதுமுக நடிகர்கள். கணவனைப் பிரிந்து தனியாக வாழும் குஷ்புவை அடைய இந்த மூன்று வாலிபர்களும் முயற்சி செய்வதுதான் கதை.

• 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தைத் தயாரித்த ஆஸ்கார் ரவிச்சந்திரன், அந்தப் படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடிய யுக்தா முகியை தனது அடுத்த படத்திற்குக் கதாநாயகி ஆக்குகிறார்.

• இளையராஜா பற்றி ஒரு ஆய்வுக் கட்டுரையை தனது பட்டப்படிப்பிற்காக சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கவுள்ளார் பாடகி அனுராதா ஸ்ரீராம்.

• அஜித்குமாரும் ஷாலினியும் ஆதரவற்ற குழந்தைகள் பத்துப் பேரை சுவீகாரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். படித்து முடித்து அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்கும்வரை இந்த உதவி தொடரும் விதமாக அந்தந்தக் குழந்தைகள் பெயரில் சில லட்சங்களை வங்கியில் வைப்புச் செய்திருக்கிறார்களாம்.

• 'பாண்டவர் பூமி', 'நந்தா' ஆகிய படங்களின் மூலம் மறுவாழ்வு பெற்று விட்ட ராஜ்கிரண், மீண்டும் ஒரு படத்தைத் தயாரித்து, இயக்கி நடிக்கத் தயாராகி விட்டார். படத்திற்கு வைத்திருக்கும் பெயர் 'முத்து மாணிக்கமே'.

## சல்மான்-ஐஸ் புது ஒப்பந்தம்

ஐஸ்வர்யா ராய்-சல்மான் கான் காதல் விவகாரம் பற்றி இந்திய வடநாட்டுப் பத்திரிகைகள் பட்டிமன்றமே நடத்தி சலித்து விட்டன. இப்போது இருவரும் புது ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

கல்யாணம் ஆகாமலேயே இருவரும் ஒரு வருடம் சேர்ந்து வாழலாம். தமக்குள் சண்டை சச்சரவு வராமல் இருந்தால், பலருக்கு அறிவித்து கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். ஆகா, இப்படி அல்லவா நடிகர் நடிகைகள் நம் கலாச்சாரத்தை காப்பாற்ற வேண்டும். ஒப்பற்ற ஒப்பந்தம்.

## ஆண்டான் அடிமை

அமைதிப்படைக்குப் பிறகு சத்தியராஜ்-மணிவண்ணன் கூட்டணியில் உருவாகியிருக்கும் படம். நிறைய கலக்கல் எதிர்பார்க்கலாம். சத்தியராஜ் ஜோடியாக சுவலட்சுமி, திவ்யா உன்னி நடித்துள்ளனர். இசை-இளையராஜா. கதை திரைக்கதை வசனம் இயக்கம்-மணிவண்ணன். தயாரிப்பு-யோக சௌரி பிலிம்ஸ்

## என் பாழடைந்த இதயம்!

உன்னைக் கண்டவுடன்
வான் பறக்கத் துடிக்கிறது...
நீ
வாய் வெடித்த
மொட்டுகளாய்!
மலர்ந்து...
சிட்டுகளாய்
வானில் சிறகடித்துப்
பறக்கிறாய்!
என்
கண்களில்
மின்னிமறையும்...
மின்னலாக.
உன் முகத்தை
எண்ணித் தவிக்கும்
என் இதயம்..
உன்னிடம் சொல்லத் துடித்து..
மௌனத்தை
மாத்திரம்
பேசிப்போடும்..
மறந்து விடச் சொல்லாமல்
இறந்து விடச் சொல்...
ஓ...
உன்-நினைவுகளை
நிரப்பிக் கொள்ளும்
இதயம்
புதிதாக பாழடைந்து
பரிதவிக்கிறது!
ஆத்மாவில் கனவுகளை
அரங்கேற்றி...

கிண்ணியா (சமீரா,கடாபி)

## மீண்டும் நாம்....

வீதியில் சூரியன் உதிக்கும்
மரமும் முளைக்கும்!
***
தளபாடங்களும்
விலங்களும்
இன்ன பிறவும்
வேட்பாளரை எழுவாயாகவும்
புள்ளடியை பயனிலையாகவும்
கொண்டு
பல்லிளிக்கும்!
***
தெரியாத முகங்களின்
கரங்களும்
எமைப் பார்த்து
சிரம் தாழ்த்தி வணக்கம் சொல்லும்!
***
வாகனங்களும் புடைவை
கட்டிக் கொண்டு,
சிவப்புக் கலரு சிங்கிச்சா
பச்சைக் கலரு சிங்கிச்சா என்று
கர்வம் காட்டும்!
***
ஹரிகரனையும் வைரமுத்துவையும்
ஒலிபெருக்கி மறந்து போகும்
டி.எம்.எஸ்ஸும், கண்ணதாசனும்
பழையபடி நம்பர் வன்னாவார்கள்
***
எல்லாவற்றுக்கும்
தலையாட்டும்
ஆட்டு மந்தைகளாய் மட்டும் நாம்!
***
நாமிட்ட புள்ளடிகள்
பொல்லடிகளாய் மாறும் போது
சித்தம் தெளியும்
***
ஆனால், இன்னொரு தேர்தல் வந்தால்
மீண்டும் நாம்
எல்லாவற்றுக்கும்
தலையாட்டும்
ஆட்டு மந்தைகளாவோம்!

பாண்டியூர்-செ.திவாகரன்.

## உனக்குள்ளாகும்போது....

**தேன் கிண்ணம்**

உன்னைக் காணும் போதெல்லாம்
ஒரு அழகிய கவிதையை
எழுதிய
திருப்தி வரும்.
***
என்னைப் பார்த்து-நீ
புன்னகைக்க வேண்டாம்
தும்மிவிட்டாவது போ!
அந்த தூறலில்
நான் குளிக்கிறேன்.
***
அருகில் நீ இருந்தால்
ஒரு நிமிடத்தில்
என் ஆயுளை வாழ்வேன்
விலகியே நீ சென்றால்
என் ஆயுளை
ஒரு நிமிடத்தில் முடிப்பேன்.
***
உனக்குள்ளாகும் போது
உயிருக்குள் பூக்கிறேன்
உனக்குள் தானே!
உலகத்தைப் பாக்கிறேன்.

இறக்காமம்-எம். நாவாஸ் சௌபி.

## காதல் தேசத்தின் தேர்தல் கால வாக்குறுதிகள்

நீ தந்து விட்டுப் போன
வார்த்தைகளில்
ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும்
தொடுவானமாய்
பரந்து விரிந்திருக்கின்றன!
***
உனது வாக்குறுதிகளால்
விளைந்த ஆசைகள்
வீரியம் கொண்டெழுவதற்கு முன்
நிராசையாக்கி விட்டு
எந்த தேசத்திற்குள்
ஒளி(ர்)ந்திருக்கின்றாய்?
***
மரணத்திலாவது
இணைந்து வாழ்வோமென்ற
நீயா
சாவோடென்னை
தவிக்கவிட்டுச் சென்றாய்?
சின்னச் சின்ன
ஆசைகளுக்கிடையில்
கொழுந்து விட்டெரியும்
கனத்த துயரங்களைத்
தந்தவள்தானே நீ?
***
சாவோடு வாழ்ந்தாவது
சரித்திரத்தை
மாற்றியமைப்போமென்ற
நினைவுகளை,
மலைப் பிரதேச தேசமொன்றில்
ஒளித்து வைத்ததை
எப்போதுதான் சிறை மீட்பேன்?
***
கசங்கிய இதயத்தின்
உதிர்ந்த வாழ்க்கையை
கனவிலாவது
புதுப்பித்துச் செல்.
பெண்ணே!
உனக்காக வாழ்ந்த
காலங்கள் அதிகம்;
எனக்காக வாழ்ந்ததைவிட!
ஆதலினால்...
***
நீ தந்துவிட்டுப் போன
வார்த்தைகளில்
ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும்
தொடுவானமாய்
பரந்து விரிந்திருக்கின்றன!
***
பூக்களைச் சொரிந்து
இதயத்தில்
புதியதொரு பூபாளம் பாடுவோம்!
மீட்பு நாள் வரை
நீயும் நானும்
ஒன்றாகச் சேர்ந்திருக்கும்
ஒப்பந்தத்தை எழுதுவோம்.

முகம்மது ஹாரீத்-
அட்டாளைச் சேனை-11.

## தோல்வி மரம்

நீண்ட காலம் நின்று
நிலைக்காது விட்ட அந்த
மரத்தின் கிளையெல்லாம்
மனசுகளின் மகஜர்கள்!
***
தாவணிகள் நெகிழ்கிறதோ...
தலைப்பாகை தவழ்கிறதோ...
***
கதர்த் துணிகளுக்குள்
காணிகை முடிந்து கிடப்பது
எந்தக் கனவுகளோ...
சிறியக் கனவுகளோ?
சீரியக் கனவுகளோ?
***
கணவன் வர வேண்டிக்
கட்டியதோ? அன்றிலொரு
காதலி வருகைக்காக
வாடுகிறதோ.
***
பொருள் சேர வேண்டுமென
பூத்த முடிச்சிகளோ...
காதல் வரம் கேட்டுக்
காய்ந்த முடிச்சிகளோ....
***
அம்மரத்தின் கிளைகள்
இலைகள், எதுவுமே
தெரியாமல் துணிமுடிச்சுகளோ,
தொங்கிகொண்டிருக்கிறது.
***
என் காதலியின் வருகைக்காகவே
கட்டினேன் ஒரு முடிச்சு.
***
அன்றிரவே
கோபித்த புயற்காற்றின்,
கொடூரத்தால் வரம் அருளும்
மரத்துகே துயரொன்று
சூழ்ந்து.
***
வந்தவர்களுக்கு வரமருளும்
மரத்தின் நிலை
தலைகீழாக மாறியது,
மண்ணில் சாய்ந்தது.
***
அன்று-
அத்தனை கனவுகள்
இடை நடுவில்... யாரறிவார்?
***
அன்றே,
என் காதலும் தலைகீழாக
நிலைதடுமாடுகிறது.
காதலிக்க கற்று கொடுத்தவள்
மறப்பதற்கும் கற்றுகொடுத்து
விட்டு போகாமல்,
கண்ணீரோடு கரைகிறது
என்நாட்கள்.

க.ஸ்ரீதரன்-அப்புத்தளை.

## நிகழ்வுகள்...

யாராவது,
யாரோடவாது,
பேசத்தான்
விரும்புகிறார்கள்..
எல்லோருக்கும்
எதிலாவது
ஞாபகங்கள்...
வாழ்வதற்காக
புதையல் தேடும்
நாட்களில்...
சந்தர்ப்பமாய்
சாலையில்
சந்தித்தாலும்...
ஒரு புன்னகையோடு
புதைக்கிறார்கள்...
மனித நேயத்தை!
மௌனமாய்
மனதுக்குள்
யாருமிருப்பதில்லை...
யாராவது,
யாரோடவாது,
பேசத்தான்
விதும்புகிறார்கள்....

ஆகஸா-கத்தார்.

## ரகசிய சிநேகிதனே...


நான்
அதிகம் பேசிடும் போதும்
அளவாய் சிரித்து; அன்பாய் பார்த்து;
அமைதி காக்கும் அந்தச் சில நிமிஷங்கள்
உன்னை எனக்கு நிறையப் பிடிக்கும்!
என் மனம் உடைந்து
உன் மடிசாய்ந்து விக்கி நான் அழுதிடும்போது
மௌனமாய் தலைகோதி நீ தரும். அந்த
ஆறுதல்;
எப்போதும் எனக்குப் பிடிக்கும்.
சிலநேரம் வரும் ஊடலில்
சிறு கோபம் வந்து பெரும்போரிடும் போதும்
சின்னதாய் சிரித்து; என்னை இன்னும் நீ
சீண்டி விட்டுப் பார்க்கும் அந்த
வேடிக்கை இப்போதும் பிடிக்கும்!
உன் வரவுக்காய்
எனை காக்க வைத்து
கடுங் கோபங் கொண்டு நான்
கண் கலங்கிட கனிவாய் நீ கூறிடும்
சமாதானம்,
எப்போதும் பிடிக்கும் எனக்கு...

வெண்ணிலா-பேராதனை வளாகம்.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஆர். யோகேஸ்வரன்
வயது: 19
முகவரி: இல. 118/8, அனு தொலைத் தொடர்பகம், பூந்தோட்டம், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: என்.எம்.முகம்மது நியாஸ்
வயது: 19
முகவரி: இல.277, வடிகால் வீதி, புல்மோட்டை-02.
பொழுது போக்கு: பத்திரிகை,வானொலி.



பெயர்: ஆர்.கே.ஏ. கரே
வயது: 23
முகவரி: 56, Havelock Street, Ayeesbury, Bukks HP20-2NX U.K.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: ஏ.எம்.நளீம்
வயது: 18
முகவரி: 252 ஆலிம் வீதி, மாளிகைக்காடு-02. காரைதீவு.
பொழுது போக்கு: பத்திரிகை,வானொலி.




## அலையும் மனம் வாழ்க்கைக்கு வேண்டாம்

மனதை அலைய விடுவது மாபெரும் பலவீனமாகும். அது ஆற்றலைச் சிதைத்து திறனைக் கொன்றுவிடும். உளவலிமை கொள்ள வேண்டுமானால் கட்டுப்பாடற்று அலையும் மனத்தை அடக்கித்தான் தீர வேண்டும்.

மனக் கட்டுப்பாட்டிற்குப் பெரும் பகை அலையும் மனம் தான். மனமானது. ஒரு காரியத்தில் குவிந்திருக்கும் நிலைத்து நிற்கும் தன்மையற்றதாகும். ஏதாவது ஒரு விஷயத்தில் சிந்திக்கத் தொடங்கினால் மனம் அதில் ஆழப்படுவதில்லை.

அடுத்த நிமிடமே ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிக் கொண்டு அதன் மீது ஏறிப் பயணம் செய்ய ஆரம்பித்து விடும். அதிலாவது நீடித்துப் பயணம் செய்யுமா என்றால் அப்படியும் செய்யாது.

வழியில் தோன்றும் மற்றொரு விஷயத்தைப் பற்றிக் கொண்டு வேறு திசையில் கிளம்பத்தொடங்கிவிடும். சிந்திக்கத் தேர்ந்தெடுத்த விஷயம் அப்படியே நிற்கும். மனமோ எங்கெல்லாமோ அலைந்து கொண்டிருக்கும்.

குறிப்பிட்ட விஷயத்திற்கு அதைத் திருப்பிக் கொண்டு வருவது என்பது எளிதான செயலன்று இப்படி அங்கும் இங்கும் ஆடுவது தான் அலைபாயும் மனம் என்று கூற வேண்டும்.

மனத்தின் இத்தன்மையை உணர்ந்தே நம் முன்னோர் அதனைக் குரங்கிற்கு உவமையாக்கினர். எவ்வாறு குரங்கு ஓரிடத்தில் அமராமல் கிளைக்குக்கிளை தாவிக் கொண்டிருக்குமோ அவ்வாறு மனம் ஒரு விஷயத்தில் சற்று நேரம் கூட நிலைத்து நிற்காது. விஷயத்திற்கு விஷயம் தாவிக் கொண்டிருக்கும்.

ஒரு குறிப்பிட்ட விஷயத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டால் அதில் நம் முழுக் கவனமும் மனமும் செல்ல வேண்டும். சித்தம் அனைத்தும் குவிய வேண்டும்.

ஏதாவது ஒரு விஷயத்தைத் தொற்றிக் கொண்டு மனத்தை அலைய விட்டு விடுகின்றோம். ஓர் எண்ணத்தை நாம் பற்றிப் பயணம் செய்வதற்குப் பதிலாக ஏதாவது ஓர் எண்ணம் நம்மைப் பற்றி இழுத்துச் செல்ல அனுமதித்து விடுகின்றோம்.

ஓடும் வெள்ளத்தில் அகப்பட்ட மனிதன், அதன் போக்கில் அடித்துச் செல்லப் படுவது போன்று, நம்மைப் பற்றிக் கொண்ட எண்ணமானது எங்காவது நம்மை இழுத்துச் செல்கிறது.

புகை வண்டி நிலையத்தில் தாங்கள் ஏற வேண்டிய ரயிலைத் தெரிந்து கொள்ளாமல், முன்னால் நிற்கும் வண்டியே தங்களுடைய ஊருக்குச் செல்லும் என்று எண்ணி ஏறிக் கொள்பவர் சிலருண்டு.

வண்டி புறப்படச் சில விநாடிகள் இருக்கும் போதே அவர்களுக்குத் தெரிய வரும், தாம் ஏறியிருக்கும் புகை வண்டி தங்களுடைய ஊருக்குச் செல்லாது என்பது. அதன் பின் அவர்களின் செய்கையைப் பார்க்க வேண்டுமோ! சாமான்களைச் சுருட்டுவர் அங்குமிங்கும் ஓடுவர், அவசர அவசரமாகத் தாண்டிச் செல்வார்.

இந்த வித நிகழ்ச்சிகளைக் கண்டு நகைக்கும் நாமும் இவ் விதம் தான் நடந்து கொள்கிறோம். நமக்குவேண்டிய விரும்பிய விஷயத்தில் மனத்தைச் செலுத்துவதில்லை.

வழியில் நின்று வண்டியில் ஏறி அவதிப் பட்ட பயணி போன்று வழியில் தோன்றும் விஷயத்தைத் தொற்றிக் கொண்டு மனத்தை அதில் செல்ல விட்டு அவதியுறுகின்றோம்.

நாமும் குறிப்பிட்ட விஷயத்தில் மனத்தைப் பதித்துக் குவிக்காது ஏதாவது வேறு ஒரு விஷயம் நம்மை இட்டுச் செல்ல அனுமதித்து விட்டால் பயன் ஏதும் பெறமாட்டோம். இது மாபெரும் பலவீனமும் ஆகும். இவ்வாறு இருந்தால் நம்மால் எதனையும் சிறப்பாகச் செய்ய இயலாது.

## இந்தவாரம் உங்கள் பலன்

**16.12.2001 தொடங்கி 22.12.2001வரை**

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் சிறப்பும், பொருளாதார முன்னேற்றமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வந்தடையும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### இடபம்:
(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டங்கள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், பொருள் வரவும் உண்டாகும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் விலகும். மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### மிதுனம்:
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன் முக்கால்) முயற்சிகளில் வெற்றியும், பணவரவும் உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷமான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்களுக்கு நன்மைகள் வந்துசேரும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்? புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) மனக்கஷ்டங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் வெற்றியுண்டாகும். பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுண்டாகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் நிலையில் கஷ்டங்களைக் காட்டும். பணவரவு சுமாராக அமையும். குடும்பத்தில் நன்மைகள் உண்டாகும். உத்தியோக ரீதியாக சிலருக்கு மாற்றங்களைத் தரக் கூடியதாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பொருள்வரவுக்கு இடமளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி தரும்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**சோதிட மாமணி தில்லை**

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழிலில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். பொருள்வரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. உத்தி யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கிரக நிலை

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன், வெள்ளி, கேது |
| கும்பம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு. |

சந்திரன், தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம்,பூராடம்,உத்தராடத்து முதற்கால்,) எதிர்பார்த்த கருமங்கள் வெற்றி தரும் பொருள்வரவு சிறந்து காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வெற்றிதரும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) குடும்பத்தில் மனக் கஷ்டங்களுக்கு இடமளிக்கும். பொருள்வரவு சிறிது தாமதமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளால் கஷ்டம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்? புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை,சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) தொழிலில் முன்னேற்றமும், பொருள்வரவும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்க இடமுண்டு. உத்தியோக ரீதியாக சிலர் பிரச்சனைக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) எதிர்பார்த்த கருமங்களில் சிறு தடை ஏற்படும். குடும்பத்தில், மகிழ்ச்சியும், பொருள்வரவில் மந்த நிலையும் தோன்றும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த நன்மைகளில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கண்கள் அழகாக

உடலில் உள்ள உறுப்புகளிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப் படுவது கண். இதோ கண்களை அழகு படுத்த சில முக்கியமான தகவல்கள்:

மஸ்காரா கண்களுக்கான மேக் அப் சாதனங்களில் மிக முக்கியமானது. மஸ்காரா வாங்கும்போது கண்ணுக்கு எந்தவித மான பாதிப்பையும் ஏற்படுத்தாத தர மான மஸ்காராவா என்பதை அறிந்து வாங்க வேண்டும். இமைகளில் மை தீட்டி னால் வெண் விழி எடுப்பாகத் தெரியும். அதற்கு ஏற்ற நிறத்திலும் மஸ்காரா வாங்கலாம்.

கண் மற்றும் இமைகளின் அமைப்புக்கு ஏற்ப ஐ ஷேடோவை முடிவு செய்ய வேண் டும். இமைகளில் அதிக அளவில் வண்ணம் தீட்ட வேண்டாம். உடல் நிறத்திற்கு ஏற்ற நிறத்தில் ஐ ஷேடோ கொடுக்க வேண்டும். இளம் பெண்கள் கிரே நிறத்தைப் பயன் படுத்தலாம்.

கண்கள் பளபளப்பாகத் தோன்ற கண்ணின் உள் மூலைப் பகுதியில் வெள்ளை ஹைலைட்டரைப் பயன்படுத்தலாம். உடல் நிறத்திற்கு ஏற்றதாக ஐ ஷோடோ இருக்க வேண்டும் என்று முயற்சிக்காதீர்கள்



முக்கின் மேற்பகுதிக்கு ஏற்ற லேசான ஐ ஷேடோவைப் பயன்படுத்தலாம்

இமை முழுவதும் அடர் நிற வண்ணம் பூச வேண்டும்.

புருவங்களை மறந்து விடாதீர்கள் அவை முகத்தின் முக்கிய அம்சங்கள். நல்ல வடிவத்தில் புருவத்தை சீர் செய்து கொள்ளலாம். இதற்கு தேவையான சிறந்த ஐ புரோபென்சிலை வைத்துக் கொள்ளுங்கள்.

## இல்லறம் இனிக்க....

இல்லற வாழ்க்கை இனிமையாக அமைந்தால் தான் குடும்பம் முன்னேற் றம் அடையும். அப்படிப்பட்ட இல்லறம் என்னும் கடலில் நீந்துபவர்கள் பலர். ஆனால் இல்லறம் என்னும் ஆழ்கடலில் மூழ்கி இன்பம் என்னும் முத்துகுளிப்பவர்கள் சிலர். எனவே இல்லறத்தில் இனிமை காண இளைய தலைமுறைக்கு இதோ ஒரு சில டிப்ஸ்:

கணவன்- மனைவி இருவரும் மனம் திறந்து பேச வேண்டும். இரண்டு பேரும் இன்ப, துன்பங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து பழக வேண்டும். மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிப்பதை கற்றுக் கொள்ள வேண்டும்.

கோபத்தில் பேசிவிட்டால் சிறிது நேரம் கழித்து சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒருவருக்கொருவர் நல்ல காரியங்கள் செய்யும்போது பாராட்டிக் கொள்ள வேண் டும். பிறர் சொல்வதை கேட்டு ஒருவரை ஒருவர் பழித்துக் கொள்ளக்கூடாது.

மனைவி: மனைவியானவள் தன் வீட்டு பெருமைப்பற்றியே பேசிக் கொண்டு இருக்கக்கூடாது.

கணவனின் தேவையை புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

கணவன் பிற பெண்களிடம் பேசும் போதும், பழகும்போதும், மனைவி தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது.

கணவனிடம் அடுத்தவீட்டு வசதி களைப்பற்றி தன் வீட்டோடு தொடர்பு படுத்தி பேசுவதை தவிர்க்க வேண்டும்.

கணவன் அலுவலகத்தில் இருந்து வரும்போது பெண்கள் முகவசீகரத்துட னும், புன்னகையுடனும் வரவேற்க வேண் டும்.

கணவனிடம் அன்பு இருந்தால் மட்டும் போதாது. அதை வெளிப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும்.

கணவன்: மனைவியின் மனம் புண்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

மனைவியின் தேவையை அறிந்து அவள் கேட்காமலேயே தேவைகளை நிறை வேற்ற வேண்டும். மனைவிக்கு உடல் நலம் சரியில்லாத நேரத்தில் அன்பாக பேசுவது மருந்து மாத்திரைகளை விட அருமருந்தாக இருக்கும்.

தெரிந்து கொண்டீர்களா! பிறகென்ன ஜமாய்த்திடுங்கள்!


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KO

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-12-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## லுணுகலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

க.சாந்தி
அமுனவத்த, உடபங்குவ லுணுகலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


"போனாப்போறது... ஆனா, பர்மனன்டா வேண்டாம். மூணு மாசத்தில் காலி பண்ண சொல்லிட்டேன். நமக்கும் இடம் போறாது" என்று மகாதேவன் சொன்னார்.

"பில்டிங்.. இந்த பில்டிங்கே நம்முதா?" என்றாள் அனிதா.

"ஆமாம் பைத்தியமே.. தெரியலையா? இப்பல்லாம் நாம ஹவுஸ் ஓனர். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுண்டு கொடுக் கும். இவ பொறந்தப்பவே 'ஜாதகத்துல லட்சுமி கடாட்சம் ஏராளமா இருக்கு'னு ஜோஸ்யன் சொன்னான். நான் இத்தனை பெரிசா இருக்கும்னு எண்ணிக்கூட பார்க் கலை."

அனிதா இந்த சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டு அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். வெளிநாட்டுப் பெட்டிகள், வார்டுரோபுகள், சக்கரம் வைத்த பெட்டிகள், மேக்கப் செட் என்று அந்த அறையிலேயே அஞ்சு லட்சம் மதிப்புள்ள பொருட்கள் நிறைந்து கிடந்தன.

ஜன்னலுக்கு வெளியே ஏரோப்ளேன் இரைச்சலாகப் பறந்து சென்று கொண்டிருந் தது. போன் இடைவிடாமல் அடித்துக்கொண் டிருக்க, அதை ஜிம்ப எடுத்து "அனி... உனக்குத்தான்! எம்.டி.கூப்பிடறார்" என் றான்.

உதட்டோரத்தில் வைத்து கடிக்கிறது போலப் பண்ணி மறுபடி வைத்துவிட்டாள்.

வைரவன் சிரித்துக் கொண்டு, அதை- அவள் வாயைத் திறக்கவைத்து அடைத்தான். "பொண்டாட்டி நீ... சொன்ன பேச்சு கேட் டாகணும்."

அன்றிரவ இருவரும் ஐந்து நட்சத்திர ஒட்டலின் ப்ரைடல் ஹனிமூன் ஸூட்டுக்குச் சென்றனர். ஒரு வீடு அளவக்குப் பெரிசாக இருந்தது. சித்திர வேலைப்பாடுகள் கொண்ட மரத்திரையின் பின்னே ஏக்கர் படுக்கையில் கனவு ஸீன் போல ரோசா நிற வலை பாதி திறந்திருந்தது. வைரவன் வெள்ளையைவிட வெள்ளையாக ட.ீ. பேட்டா சில்க் ஜிப்பாவும் பைஜாமாவும் அணிந்து கையில் புத்தகம் வைத்திருந்தான். படுக்கையருகே உறுத்தாமல் பாட்டு கேட்டது. டி.வி. திரையில் நடன மௌனங் கள் சஞ்சலமாக சலனித்துக் கொண்டிருக்க, கண்ணாடிக்கு வெளியே நிசப்த கார்கள் வரிசை தெரிந்தது. சோடியம் விளக்குகள் நகரம் முழுவதும் தெளித்திருக்க, வைர வன் வெள்ளிக் கத்தியை எடுத்து "ஆப்பிள் சாப்பிடறியா?" என்றான் அனிதாவிடம்.

"வேண்டாம்."

"உக்காரு" என்றான்.

விளிம்பில் உட்கார்ந்தாள்.

"ஏதாவது பேசு."

மௌனமாக இருந்தாள்.

"நீ பேசலைன்னா நான் பேசறேன். அந்தக் கனத்துலயே தீர்மானிச்சிட்டேன். பின்னணில எத்தனை ரிஸர்ச் பண்ணி னேன்...! நீ எங்க பிறந்தே... எந்தெந்த ஸ்கூல்ல படிச்சே... எத்தனை மார்க் வாங் கினே... உன் தோழி மது... அவளோட ஹாஸ்டல் ரூம் நம்பர், உனக்குப் பிடிச்ச கலர், எல்லாம் தெரியும்..."

"அந்தப் பொம்மை என்ன ஆச்சு..? அனிதா ஆவலோடு கேட்டாள்.

"எந்தப் பொம்மை?"

"நீங்க பிடிவாதம் பிடிச்சு வாங்கி னீங்களே... அது என்ன ஆச்சு?"

"அதை எடுத்து ஒரு முறை கூட விளையாடலை. எனக்கு அடையறதிலதான் அதிக ஆர்வம்" என்ற வைரவன், அவள் முகத்தைக் கவனித்து-அந்தக் கேள்வி கேட்டதன் காரணத்தை உணர்ந்து சட் டென்று, "உன்னை அதுக்கு கம்பேர் பண் றதா நெனச்சுக்காதே... என் பிடிவாதத்துக்கு உதாரணமா சொன்னேன். அம்மாவைக் கேளு. எத்தனையோ சொல்வாங்க. கமான் லெட்'ஸ் மேக் லவ்!" என்றான்.

அந்த வார்த்தைகளின் எதிர்பாராத தாக்குதலின் தொடர்ச்சியாக, வைரவன் அவள் அருகே உட்கார்ந்து, அவள் கையைப் பற்றி தன் மேல் படர வைத்துக்கொண்டு, கிட்டத்தில் அவளை இழுத்து முத்தம் கொடுக்க, அனிதா தன்னைப் பிடுங்கிக் கொண்டாள்.





"நம்பரை வாங்கி வெச்சுக்கோ. திரும்ப போன் பண்றதா சொல்லு."

"வைரவன் பி.ஏ... அனி" என்று அதட்டி னான் ஜிம்ப.

"யாராயிருந்தா என்ன?" என்றாள் அனிதா.

அனைவரும் அவளைச் சற்றே கவலை யுடன் பார்த்தார்கள். குறிப்பாக அப்பாவின் முகத்தில் கவலையுடன் லேசான குற்ற உணர்ச்சியும் இருந்ததாகப்பட்டது.

★★★

எத்திராஜ் காலேஜ் எதிரே இருந்த மகத்தான இரண்டு பெரிய மண்டபங்களில் அனிதாவின் கல்யாணம் நடந்தது. ஆர்க் வெளிச்சத்தில் ஒரு டி.வி. ஸ்டூடியோவே அங்கு இயங்கிக் கொண்டிருந்தது. டெல்லி மந்திரி கல்யாணத்துக்காக ஸ்பெஷல் ப்ளேனில் வந்திருந்தார். வைரவனின் வெளி நாட்டு கம்பெனி வெள்ளைக்காரர்கள் அனைவரும், போட்ட மாலையைக் கழற் றாமல் காம் கார்டர்களில் அந்த விநோத கல்யாணத்தைப் பதிவ செய்தார்கள். சினிமா நட்சத்திரங்கள் வியர்வையிலும் வைரத்திலும் ஜொலித்தார்கள். கல்யாணம் சம்பிரதாயமா கவே நடந்தது. வைரவன் சட்டையைக் கழற்றாமல், கோட்டுக்கு மேல் அவனுக்குப் பூணூல் போடப்பட்டது. அவர்கள்கூட ஒரு காலத்தில் பூணூல் போடுகிறவர்கள் தானாம். மாலை மாற்றிக் கொண்டார்கள். 'காசி யாத்திரை, நலங்கு கிலங்கு எல்லாம் வேண் டாம்' என்று இருவருமே சொல்லிவிட... அக்னி வலம் இருந்தது. அப்பா மடி இருந் தது... வைரவனின் பட்டுத் தலைப்பாகை யில் வைரம் பதிந்திருந்தது.

தாலி கட்டும்போது வைரவன் அவளை மையிட்டு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். 'உன்னை அடைஞ்சுட் டேன் பார்த்தியா!' என்று சொன்னது அந்த லேசான புன்னகை.

'என்ன நடக்கப்போகிறது? யார் இவன்' எதற்காக என்னை இந்த துரிதகதியில் வரித்தான்? யார் இந்த சமகால ப்ருத் விராஜன்? நான் ராஜகுமாரி இல்லையே... எதற்காக என்னைப் புயல் வேகத்தில் வந்து வாரி அள்ளிக் கொண்டு போகிறான்?'

மதுதான் அருகில் இருந்த அவளுக்குத் தெரிந்த முகம். அப்பா, அம்மா, ஜிம்ப, சீதா, சுகந்தி, அவள் கணவர்... யாரை யும்- அவள் மனுஷர்கள் யாரையும்- காண வில்லை!

கல்யாணம் முடிந்து சாப்பிடச் செல்ல இரண்டு மணியாகிவிட்டது. சாஸ்திரி கள்கூட புதுசாக வைர மோதிரம் போட்டி ருந்தார்.

"சாஸ்திரப்படி அவர் இலையில இருக்க றதை நீ சாப்பிடணும்மா! எடுத்துப் போட்டுக்கோம்மா... கொஞ்சம் எச்சில் சேரணும்" என்றார் சாஸ்திரிகள்.

வைரவன் பாதி கடித்த தின்பண்டத்தை அவள் இலையில் வைத்து "சாப்பிடு" என் றான்.

"எனக்குப் பிடிக்கலை" என்றாள் அனிதா.

"சாப்பிடு... சாஸ்திரம்... அய்யர் சொல்றார் இல்லையா!" என்றான் வைரவன்.



## நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"உன்னை எதுக்காக கல்யாணம் பண்ணிக் கிட்டேன், சொல்லட்டுமா?"

அனிதாவை-புதுசாகக் கிடைத்த பொரு ளைப் போல் பார்த்து, அவள் முகத்தின் எல்லா பாகங்களிலும் தன் பார்வையை ஓட்டி னான் வைரவன்.

"சின்ன வயசில ஒருமுறை நான் அப்பா, அம்மாவோட கடைக்குப் போயிருந்தேன். பிளாட்பாரத்தில் ஒரு பொம்மை வித்துக் கிட்டு இருந்தான். சின்னதா செலுலாய்டு பொம்பளை... கண்ணுக்குத் தெரியாத முடி கட்டி, தய்யா தக்கான்னு தானா குதிக்கும். அதை வாங்கணும்னு சொன்னேன்... அப்பா கூடாதுன்னுட்டாரு. 'இந்த மாதிரி அடாசு பொம்மையெல்லாம் வீட்டுல சேரக்கூடாது. பொம்மைக்காரன் பீடி குடிக்கறான்... ஒரே அழுக்கு... வேற பொம்மை வாங்கித் தரேன்... நூறு ரூபாய்க்கு, இருநூறு ரூபாய்க்கு...'ன்னு சொல்லி மறுத்துட்டாரு. நான் மாட்டேன்னு அங்கயே உக்காந்துக் கிட்டேன். 'அந்தப் பொம்மை வாங்கிக் கொடுத்தாதான் நகருவேன்'னு சொல்லிட் டேன். அப்பா, 'இவனை இங்கயே விட்டுட் டுப் போயிரலாம்'னாரு. அம்மா பேச முடியாம தவிக்கிறாங்க. அப்பா, 'வா போலாம்'னு என்னை விட்டுட்டுப் போயிட்டாரு. 'அவனா வீட்டுக்கு வரட்டும். அப்படி என்ன பிடி வாதம்?'னு கோபமா சொன்னாரு. நான் ராத்திரி பன்னிரண்டு மணி வரைக்கும் அங்கேயே உக்காந்துக்கிட்டு இருந்தேன். அழலை... பேசலை.. அப்படியே குத்துக்கல் லாட்டம் உக்காந்துக்கிட்டு இருந்தேன். கடைசில அப்பா திரும்ப வந்து, தூங்கிட்டு இருந்தக் கடைக்காரனை எழுப்பி அந்தப் பொம்மையை எடுத்துக் கொடுத்தப்புறம்தான் நகர்ந்தேன்.

அந்த மாதிரி எதையாவது அடைய ணும்னு நான் நினைச்சுட்டேன்னா அடைஞ்சே தீரணும் எனக்கு... உன்னைப் பார்த்தவுடனே 'இவதான் எனக்கு'ன்னு

"ஏன்... பிடிக்கலையா?"-வைரவன் கேட்டான்.

"எனக்கு உடம்பு சரியில்லை!"

"டாக்டரைக் கூப்பிடட்டுமா?" என்று போனை எடுத்தான்.

"வேண்டாம்"

"உடம்பு சரியில்லைன்னா என்ன ப்ராப் ளம்னு உடனே சொல்லிரணும்.. உடனே கவனிச்சுக்கணும்" என்றான் வைரவன்.

சற்று நேரத்தில் "ஸாரி! நான் காட் டான் போல அணுகிறேன் இல்லையா? இப்படிக்கூடாது... எங்கே... உன் கைய காட்டு! மருதாணி சிவப்பை மட்டும் பார்க் கிறேன்."

"மெகந்தி."


"நான்தான் வரவழைச்சுப் போட வெச்சேன். நல்லாயிருக்கு இல்லை? அனிதா... என் ஃப்ரெண்டு ஒருத்தன் இருந் தான் கல்ஃப்ல! கோடி கோடியா சம்பாதிச் சான். ஒரு முறை கன்னிமாரா ஓட்டல்லே தங்கறப்ப, லவுஞ்சில ஒரு பெண்ணைப் பார்த்து எங்கிட்ட காட்டினான். 'இதைப் பத்தி என்ன நினைக்கிறே?"ன்னான். கறுப்பாக வத்தக்குச்சி மாதிரி இருந்துச்சு அந்தப் பொண்ணு. 'உலகத்தில நான் பார்த்த பெண்கள்லேயே அழகான பொண்ணு இவதான்'னு அவன் சொன்னான். எனக்கு அப்ப புரியலை... இப்ப புரியுது?

[அனிதா வருவாள்...]

## பாப்பா முரசு சிறுகதை

# எது வீரம்?

**கோபு**-சுற்றும் முற்றும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துக் கொண்டான். யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். பிறகு தன் வீட்டுக் காம்பவுண்ட் சுவர் மேல் ஏறி நின்று கொண்டு பக்கத்து வீட்டுக் கொய்யா மரத்திலிருந்து நான்கைந்து கொய்யாப் பழங்களை பறித்து எடுத்துக் கொண்டான்.



பள்ளிக்குச் சென்று கொய்யாப் பழங்களைத் தன் நண்பர்களோடு பகிர்ந்து உண்டான்.

"டேய் கோபு, ஏதுடா இவ்வளவு ருசியான கொய்யாப்பழம்?" என்று கேட்டார்கள், நண்பர்கள்.

"பக்கத்து வீட்டு கொய்யா மரத்திலிருந்து பறிச்சுக்கிட்டு வந்தேன். ஐயாவை என்னன்னு நெனச்சே!" என்று பெருமையாகக் கூறிக் கொள்வான்.

இன்னொரு நாள் அதேபோல் பக்கத்து வீட்டு வாழைமரம் இவர்கள் வீட்டுப் பக்கமாக வாழைக்குலை தள்ளியிருந்தது. அதிலிருந்து வேண்டிய அளவு வாழைப் பழம் பறித்துச் சென்று நண்பர்களோடு சாப்பிட்டான்.

இந்த முறையும் அவர்கள் கேட்ட போது இதுவும் பக்கத்து வீட்டு மரத்தில் பறித்தது என்று பதில் கூறினான்.

"டேய், வேண்டாம்டா விபரீதம். ஒரு நாளைக்கு மாட்டிக்கிட்டா கொய்யா ஒத விழும்டா' என்றார்கள் அவனுடைய நண்பர்கள்.

"போங்கடா, நீங்கள்லாம் கோழைங்கடா, என்னை மாதிரி வீரன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை" என்பான், கோபு.

கோபுவின் நண்பர்களில் தியாகு மட்டும் நேர்மையும் துணிவும், அன்பும், ஒழுக்கமும் கொண்டவன்.

"நீ. செய்யற செயலுக்கு வீரம்னு பெயர் சூட்டாதே. அது அசட்டுத் துணிச்சல்ல செய்கிற காரியம். தயவு செய்து இந்த மாதிரி செயல்கள் செய்யறதை விட்டுவிடு. திருக்குறள்ல "அஞ்சுவது அஞ்சாமை பேதமை'ன்னு படிச்சதுகூட ஞாபகமில்லையா உனக்கு?" என்றான்.

"உன்னுடைய அறிவுரைக்கு ரொம்ப நன்றி" என்று கிண்டலாக பதிலளித்தான், கோபு.

ஒரு நாள் பள்ளி விட்டு விடு திரும்பிக் கொண்டிருந்த போது, கரும்பு ஏற்றிக் கொண்டு ஒரு லாரி கொஞ்சம் மெதுவாகச் சென்றது. அதைப் பார்த்தவுடன் அந்த லாரியின் பின்னால் தாவி ஏறினான். யாரும் கரும்பு இழுக்கக் கூடாது என்பதற்காக லாரியின் பின் பக்கம் நிறைய முட்கள் கட்டியிருந்தார்கள்.

கோபு அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. முட்கள் கீறி காயப்படுத்துவதையும், பொருட்படுத்தாமல் பின்பக்கம் தொற்றிக்கொண்டு கரும்புக்கதிர்களை வேண்டிய மட்டும் வெளியில் இழுத்துப் போட்டான். போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க லாரி டிரைவர் திடீரென்று பிரேக் அடிக்கவே கோபு நிலை தடுமாறிக் கீழே விழுந்தான். தலையில் பலத்த காயம்பட்டு மருத்துவமனையில் நீண்ட நாள் சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் தேறினான் கோபு.

கோபு, இப்போதெல்லாம் அசட்டுத் துணிச்சலான காரியங்களில் இறங்கி துன்பத்தை வரவழைத்துக் கொள்வது கிடையாது. மற்றவர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சியோடு வாழ்வதே உண்மையான வீரம் என்பதைப் புரிந்து கொண்டான்.





மரத்திலுள்ள சிறுவன் எந்த குழாய் வழியாக ஈச்சம் பழத்தைப் போடுகிறான் என்பதை கீழேயுள்ள சிறுவனால் சரியாகக் காட்ட முடியவில்லை. உங்களால் முடியுமா பாருங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.12.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **425**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 423

**பரிசுக்குரியவர்:**
அ. யோகதாஸ்,
செல்வநாயகபுரம் மகா வித்தியாலயம், திருமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| டெரன்ஸ் ஸ்பென்ஸர்<br>றோ.க. தமிழ் கலவன் பாடசாலை, இராஜகிரிய. | என். சமீனா,<br>இரஜவல தமிழ் தேசிய கல்லூரி, திகன. |
| வ. றஜீகரன்,<br>புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை, மன்னார். | யோ. பிருதிவிகா,<br>சைவ மங்கையர்க் கழகம், வெள்ளவத்தை. |
| யோகராஜா தர்ஷிகா,<br>சென். மேரிஸ் மத்திய கல்லூரி, பொகவந்தலாவ. | செல்வி ஆர் சுகீத்தா,<br>நு/மேபீல்ட் தமிழ் வித்தியாலயம், அட்டன். |
| எம். சந்துறு,<br>சென். லூசியஸ் மகா வித்தியாலயம், கொழும்பு. | இராஜரட்னம் சாருஜன்,<br>வ/மகா வித்தியாலயம், வவுனியா. |
| மெலானி அமலநாதன்,<br>சந்திரா ஒழுங்கை, மட்டக்களப்பு. | மொஹமட் இப்ராஹிம்,<br>திவுலான, பொலனறுவை. |

## சின்னச் சின்னச் செய்திகள்

- ★ மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி கல்லீரல்.
- ★ அக்குபங்சர் என்பது சீன நாட்டின் மருத்துவ முறை.
- ★ இந்தியாவில் கிராம்பு அதிக அளவில் உற்பத்தியாகும் மாநிலம் கேரளா.
- ★ தாதா சாகிப் பால்கே விருது திரைப்படத்துறைக்கு வழங்கப்படுகிறது.
- ★ புகழ் பெற்ற கோஹினூர் வைரம் ஆந்திர மாநிலம் கோல் கொண்டா சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டது.
- ★ இரு மாநிலங்களின் தலை நகராக விளங்கும் நகரம் சண்டிகர்.
- ★ இந்தியாவிலேயே அதிக அளவில் உப்பு எடுக்கப்படும் மாநிலம் குஜராத்.
- ★ புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தகயா பீகார் மாநிலத்தில் உள்ளது.
- ★ இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் 18.
- ★ உலக சுகாதார நிறுவனம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்டது.
- ★ ஐரோப்பாவைப் போல மூன்று மடங்கு பெரிய கண்டம் ஆபிரிக்கா.
- ★ ரஷ்யாவின் தேசிய விளையாட்டு சதுரங்கம்.
- ★ திருக்குறளில் ஒரே தலைப்பில் வரும் இரண்டு அதிகாரம் குறிப்பறிதல்.
- ★ பாபா அணுசக்தி நிலையம் மும்பையில் உள்ளது.
- ★ 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறியவர் திருநாவுக்கரசர்.
- ★ ஜெய் ஜவான், ஜெய் கிசான் என்று முழங்கியவர் லால்பகதூர் சாஸ்திரி.
- ★ பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் நடந்ததாகக் கூறப்படும் குருஷேத்திரம் ஹரியானா மாநிலத்தில் உள்ளது.
- ★ ஒற்றைக் கொம்பு காண்டா மிருகங்களின் 'ஹாசிங்கா தேசியப் பூங்கா' அசாம் மாநிலத்தில் உள்ளது.

## நோபல் பரிசு



இந்த ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு ஐ.நா.சபை பொதுச் செயலாளர் கோபி அன்னானுக்கு வழங்கப்படுகிறது! கோபி அன்னான் ஐ.நா.சபை பொதுச் செயலாளராக இருந்த போது வளைகுடா யுத்தம், யூகோஸ்லோவியா மீது நேட்டோ தாக்குதல், இன்று ஆப்கான் யுத்தம் போன்றவை நடைபெற்ற போதிலும், பாலஸ்தீன உடன்பாடு, அயர்லாந்து உடன்பாடு, போன்ற பாராட்டுக்குரிய செயல்களும் நடைபெற்றன. எனவே இந்த விருது பொருத்தமானது தான் என்பதில் சந்தேகமில்லை!

## ஒன்றரை கோடி



பதினாறாம் லூயி மன்னர் காலத்தில், அவரின்-அரண்மனையை அலங்கரித்த, தங்கம், வைரத்தால் செய்யப்பட்ட இந்த கடிகார கூண்டு சமீபத்தில் ஆம்ஸ் டர்டாம் நகரில் ஏலம் விடப்பட்டது. பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் ஒன்றரை கோடி ரூபாய்க்கு இதனை வாங்கிச் சென்றார்.

## விநோத விலங்கு



கழுதை போல் முக அமைப்பையும் ஆடு போல் முன் வைத்த கொம்புகளையுடைய "கழுதை ஆடு" என அழைக்கப்படும் இவைகள் ஆபிரிக்க காடுகளில் இன்னமும் வாழ்ந்து வருகின்றன. ஈட்டியை போல கூர்மையான-இதன் கொம்புகளால் யானை-சிங்கம் போன்றவைகளைகூட ஒரே குத்தில் வீழ்த்தி விடக் கூடியவைகள் இவை!

## அது என்ன 'ஸிப்போன்?'

டெலிபோனில் பல மாடல்களைப் பார்த்திருக்கிறோம். இப்போது புதிதாக 'ஸிப்போன்' என்ற நவீன தொலைபேசி உபயோகத்தில் வந்துள்ளது. இங்கல்ல பெங்ளூரில். ரூ 20,000 விலையுள்ள இந்த தொலைபேசியை நகரின் பல பொது தொலைபேசி மையங்களில் பலர் நிறுவியிருக்கிறார்கள். இதில் ரிசீவரைக் கையிலெடுக்காமல் பொத்தான்களை மட்டும் அழுத்தி விட்டு பேசலாம். இதன் சின்னத் திரையில் பல தகவல்கள், விளம்பரங்கள் ஓடிக்கொண்டேயிருக்கும். பேசிக்கொண்டே, தேவையான தகவல்களைக் காணலாம். விருப்பம் போல் விளம்பரங்களைத் தேர்ந்தெடுத்துக் கண்டு மகிழும் வசதியும் இந்த புதிய 'ஸிப்-போனில்' உள்ளது.

அந்த தரிப்பிடத்திலிருந்து விடைபெற்ற பேருந்து மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது, பஸ்சின் ஜன்னலோரம் அமர்ந்தபடியே வெளிப்புறக் காற்றை இதமாக சுவாசித்துக் கொண்டிருந்த ரகுவின் மனவோட்டம் அதைவிட வேகமாக இருந்தது.

எங்கோ பிறந்து, வளர்ந்து, கற்று இப்போது என்றுமே அறியாத தெரியாத ஒரு புதிய இடத்திற்கு சென்று கொண்டிருப்பதை எண்ணியவன் இவையெல்லாம் இறைவனின் திருவிளையாடலா இல்லை இயற்கையின் நியதியா என்று தனக்குத்

# அவனுக்குள் ஒரு காதல்

தானே கேள்வியிலும் கேட்டுக் கொண்டான்.

இளமைத் துடிப்பும் சுமாரான அழகும் கொண்டிருந்த ரகு இன்னும் திருமணமாகாத வாலிபன், வயது வந்தும் திருமண வரம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை, ஒரு கணம் தனக்குள் தானே தன்னை நினைத்து சிரித்துங் கொண்டான், அவன் இறங்க வேண்டிய அந்த அழகான தீவில் உள்ள தரிப்பிடத்தில் பஸ்சை நிறுத்துவதற்கு டிறைவர் அடித்த பிறைக்கில் எதிர்பாரத விதமாக அவனது தலை முன் சீற்றில் அடிபடவும் சுய நினைவுக்கு வந்தவன் திடுக்கிட்டு நிமிர்ந்த போது பஸ்சிலுள்ள அனைவரும் இறங்கிக் கொண்டிருந்தனர். அவனும் கீழே இறங்க முற்பட்ட போது அவனுக்கு அருகில் ஒரு அழகான இளம் பெண் தூக்க முடியாத ஒரு பெரிய பையைத் தூக்கியபடியே கீழே இறங்கிக் கொண்டிருந்தாள் அவளுக்கு உதவி செய்யும் பொருட்டு அந்த பையை இறக்கிக் கொடுத்தான் அவன். அப்போது அவள் மெதுவாக நிமிர்ந்து பார்த்தபடியே "தங்யூ" எனக் கூறியபோது அந்த இனிமையான குரலும் அழகான விழிப்பார்வையும் அவனை ஏதோ செய்தது. இருந்தும் தன்னை ஒருவாறு சமாளித்த வண்ணம் தனது அலுவலகத்தை நோக்கி நடக்கலானான்.



பற்குணன் அம்பிகாபதி—மன்னார்

புதிய இடம், புதிய அனுபவங்கள் எல்லாம் அவனுக்கு ஏதோ ஒரு வித விரக்தியை ஏற்படுத்தியதுடன் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்தது. கடமை முடிந்த நேரங்க்ளில் ரகுவுக்கு பொழுது போவது மிகவும் கஷ்டமாக இருந்தது. எனவே அவன் ஓய்வ நேரங்களில் நூலகத்திற்குச் செல்வது வழக்கம். அன்றும் அவன் வழக்கம் போல் நூல்கம் சென்று கொண்டிருந்த வேளை அவன் எதிரே அதே புன்னகை, அதே பார்வை எதிர்பாராத சந்திப்பு "ஆ... ஆ... நீங்க அண்டைக்கு அந்த பஸ்" என்று ரகு தடுமாறவும் அதற்கு அவள் "ஆமா நான்தான்" என்று கூறியவள் சகஜமாகப் பேசத் தொடங்கினாள், "என் பேரு ராகினி நான் ஒரு அரச நிறுவனத்தில வேலை செய்யிறன் இப்ப ரான்சர் கிடச்சதால இங்க வந்திருக்கிறன்" எனத் தன்னை அறிமுகப்படுத்தியவள் ரகுவைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள், ரகுவின் பதிலும் அவளது பதிலைப் போன்றே சற்று மாறுபட்டிருந்தது, உரையாடல் முடிந்து இருவரும் விடை பெற்றபோது ராகினி கூறினாள் "ரகு உங்களைப் பார்த்தா நல்லவராத் தெரியுது அதனால ஆபிஸ் இல்லாத நேரம் நீங்க தாராளமா நான் இருக்கிற... வீட்டுக்கு வந்து போகலாம்" எனக் கூறி விட்டுச் சென்றாள்..........

எவரையும் அறியாத தெரியாத ரகுவிற்கு ராகினியின் நட்பு மனதுக்கு இதமாகவும், ஏதோ ஒரு வித உற்சாகத்தையும் கொடுத்தது, எனவே நாட்கள் தவறாமல் ரகு ராகினியைச் சந்தித்து வந்தான். நாட்கள் நகர நகர ரகு ராகினி மேல் காதல் கொண்டான். தனது காதலை ராகினிக்கு எப்படியாவது தெரிவித்தே ஆக வேண்டும் என எத்தனையோ முறை முயற்சித்தும் தோல்வியடைந்து கொண்டிருந்தான், இருந்தும் வாய்ப்புக் கிடைக்கும் போது தெரிவிக்கலாம் என எண்ணி தனது காதலை தன் மனதுக்குள் பூட்டி வைத்தான்.

ராகினியின் அடக்கமான பேச்சும், அழகான நடத்தையும் அவன் மனதில் பச்சை குத்தி இருந்ததால் என்னவோ அவன் ராகினிமேல் இச்சை கொண்டிருந்தான். இந்த வேளையில் வீட்டிலிருந்து வந்த அந்தக் கடிதம் அவனைக் கதிகலங்க வைத்தது. ஆம் திருமணம் நிச்சயித்து இருப்பதாகவும், உடன் வரும்படியும் அம்மா எழுதியிருந்தாள். கடிதத்தைப் படித்தவன் உடன் பதில் எழுதி அனுப்பி வைத்தான். "அம்மா எனது மனதுக்குப் பிடித்தவளை நான் நிச்சயித்து விட்டேன் தயவு செய்து என்னை மன்னிக்கவும்." கடிதத்தைக் கவரிலிட்டு அனுப்பியவன் இனியும் தாமதித்தால் சில விபரீதங்கள் ஏற்படலாம் எனவே இன்றே ராகினியிடம் தனது காதலைத் தெரிவித்தாக வேண்டும் என எண்ணி ராகினி வீட்டையடைந்தான்.

ரகுவின் வருகையை எண்ணி எதிர்பார்த்திருந்தது போல் ராகினி "ஆ ரகு வாங்க உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன் வந்திட்டிங்க" என்றாள். அதற்கு ரகு "அதுதான் வந்திட்டனே" என வேடிக்கையாகப் பதிலளித்தவன் ராகினி நீட்டிய திருமண அழைப்பிதலைக் கண்டு அதிர்ந்து போனவனாக "ரா... கினி இது இது என்ன திடீர் இன்னு" என அவன் தடுமாறவும், அவனது நிலையையோ மனதையோ கொஞ்சங்கூடப் புரிந்து கொள்ளாத ராகினி, "ஆமா ரகு எங்க திருமணம் காதல் திருமணம் இத நான் எப்பவோ உங்ககிட்ட சொல்லனுமின்னு நெனச்சன். ஆனா சொல்லயில்லை. மற்றது நாளை காலையில நான் வீட்ட போறன் கலியாணத்துக்கு இன்னும் ஒரு வாரம் தானே இருக்கு, அதனால நிறைய வேலை இருக்குமில்லையா" என ராகினி ஏதேதோவெல்லாம் அடுக்கிக் கொண்டே போனாள். ஆனால் அவள் கூறுவதெல்லாம் ரகுவிற்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல் இருந்தது.

தனது காதல் ஒருதலைக் காதலாக இறந்து விட்டதை எண்ணிக் கலங்கியவனாக அவளிடமிருந்து விடை பெற்றுச் சென்று கொண்டிருந்தான் ரகு. ■

சுனித்ரா-பஸ்ஸில் பிரயாணம் செய்த களைப்புடன் வீட்டினுள் நுழைந்தாள். உள்ளே அம்மா சமையலறையில் வேலையாக இருந்தாள். தம்பி விக்னேஷ் மும்முரமாக படித்துக் கொண்டிருந்தான். அக்கா வனஜா இன்னமும் திருமண கனவுகளுடன் புத்தகத்தில் ஒரு கண்ணும் வீதியில் ஒரு கண்ணுமாக இருந்தாள். தங்கைகளில் ஒருத்தி சுகயீனம் காரணமாக கீழே பாயில் படுத்து புரண்டுக் கொண்டிருக்க இன்னொருத்தி அம்மாவுக்கு உதவியாக சமையலறையில் இருந்தாள். சுனித்ரா-தோல் பையை மேசையில் வைத்தாள். அவளுக்காக ஒதுக்கப்பட்ட அந்த ஒரேயொரு அறைக்கு சென்றாள். வீட்டில் அவள் மட்டும்தான் உழைக்கிறாள். எனவே அவளுக்கு சலுகைகள் அதிகம். அவளின் தந்தை ஏற்கனவே காலமாகிவிட்டிருந்தார். அவரின் அரசாங்க ஓய்வூதியம் கிடைக்கிறது.

சுனித்ராவுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. அப்போது மெதுவாக விக்னேஷ் வந்தான்.

"அக்கா பரீட்சைக்கு பணம் கட்டணும்...

# காகிதக் கப்பல்!

போனவாரமே சொன்னேனே..." அவள் அவனிடம் கொடுத்தாள். அடுத்தது-படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்த தங்கை வந்தாள்.

"ரெண்டு நாளா சரியான தலைவலி.. உயிர் போகுது.... நாளைக்காவது வைத்தியசாலைக்கு கூட்டிட்டு போவியா.."

"ம்...!"

அடுத்து சமையலறையிலிருந்து அம்மா வந்தாள்.

"அக்காவை பொண்ணுப் பார்த்துட்டுப் போனவங்க.. என்ன சொல்லுறாங்களாம் போன்ல விசாரிச்சியா...?

"இல்லை... நாளைக்குப் பார்ப்போம்..."



"தினமும் இதையே சொல்லிக்கிட்டிரு.... அவ ஒரு வேலையும் செய்யாம புத்தகமும் கையுமா கனவுல இருக்கா..."

பாலா. சங்குபிள்ளை

அவள் ஒன்றும் பேசவில்லை.

"இவள் வேணியோட வேலை சம்பந்தம்மா விஷ்ணுவைப் போய் பார்த்தியா.. பேசினியா..?"

"இன்னைக்கி நேரம் கிடைக்கல்ல..."

"அப்புடி என்னதான் வேலையோ தெரியலை. என்னால முடிஞ்சா நானாவது போவேன். நான்தான் எல்லாத்தையும் இழந்துட்டு மூலையில முடங்கிக் கிடக்கிறேனே.. எனக்கொரு சாவு வரமாட்டேன்னுதே..."

அவள் முணங்கியவாறு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். யாரும் அவளை தேநீர் குடிக்க சொல்லவில்லை. ஆறுதலாக ஒரு வார்த்தை பேசவும் அவர்களுக்கு தோன்றவில்லை. அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரமில்லை.

இருட்டியது. எல்லோரும் உறங்கி விட்டார்கள். சுனித்ரா-அறைக்கதவை மூடினாள். பேப்பர் பேனாவுடன் நாற்காலியில் அமர்ந்து எழுத தொடங்கினாள்.

"அன்பான அரவிந்... வெகுநாட்களாக யோசித்து இக்கடிதம் எழுதுகிறேன். நாம் இருவரும் இரண்டு வருடங்களாக நட்பாக பழகி வருகிறோம். ஆனால் என்னைப் பொருத்தவரை நட்பு காதலாகிவிட்டது. உங்களை நேசிக்க ஆரம்பித்துவிட்டேன். நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா என்பது தெரியவில்லை. என்னால் நேரடியாக இதை சொல்ல முடியவில்லை. பெண்ணல்லவா... அதனால்தான் கடிதம் மூலம் எழுதுகிறேன். பாலைவனத்தில் பட்டுப் போய் பரிதாபமாக இருந்த இந்த பட்டு வண்ணரோஜாவுக்கு பன்னீராக வந்த உங்கள் பார்வையினால் உயிர் பெற்றேன். உங்களின் உறவுக்காக உபயோகமில்லாத உடன்பிறப்புகள், உயிரில்லாத வாழ்வு யாவற்றையும் துறந்துவிட்டு ஓடிவர துணிந்துவிட்டேன். இந்த வாடிய பயிருக்கு உங்களின் இதமான பார்வையினால் உயிர் தருவீர்களா. கண்ணீருடன் காலத்தை கழிக்கும் இந்த கன்னியின் வாழ்வில் ஒளியேற்றி வாழ வழி காட்டுவீர்களா? நம்பிக்கையுடன் இந்த கடிதத்தை எழுதுகிறேன். என்னை ஏமாற்றி விடாதீர்கள். மறுத்து விடாதீர்கள். மனமொடிந்து விடுவேன்..."

கடிதத்தை மறுபடியும் வாசித்தாள். உறையினுள் வைத்து மூடினாள். பத்திரப்படுத்திவிட்டு படுக்கையில் விழுந்தாள். நிம்மதியாக தூங்கினாள்- மறுநாள் வழமைப்போல வேலைக்குப் புறப்பட்டாள். தன்னுடன் வேலை செய்யும் சக தோழி சிந்துஜாவை சந்தித்தாள். கடிதத்தை அவளிடம் கொடுத்தாள். அவள் அதை நிதானமாக வாசித்தாள். சட்டென சுனித்ராவை சந்தோசத்துடன் கட்டிக் கொண்டாள். "ரொம்ப சந்தோசம்டி... கடிதம் ரொம்ப அருமையா இருக்கு... உனக்குத்தான் தெரியுமே என் கையெழுத்து ரொம்ப மோசம்... கடிதம் எழுதுறதுக்கு புத்திசாலித்தனமும் கிடையாது. அரவிந்... நிச்சயமா என்னை விரும்புறாரு... என்னோட எண்ணத்தை கடிதம் மூலமா சொல்ல நினைச்சேன்... அதுக்கு உன்கிட்ட உதவி கேட்டேன்.... நீ... கொஞ்சமும் யோசிக்காம இந்த விஷயத்துல இவ்வளவு பெரிய உதவி செஞ்சதை என்னால நிச்சயமா மறக்கவே முடியாதுடி... ரொம்ப நன்றி சுனித்ரா... உன்னோட கைராசி நிச்சயமா என் காதல் நிறைவேறும்..."

அவள் சொல்லிவிட்டு குதூகலத்துடன் அந்த இடத்தை விட்டு ஓட எல்லா உறவுகளும் இருந்தும் இன்னமும் தனிமரமாக யாருமற்ற அநாதையாக வெகு நேரம் நின்றிருந்தாள்- சுனித்ரா... சுமைதாங்கியாக மற்றவர்களுக்கு இடிதாங்கியாக வாழ்ந்துக் கொண்டிருக்கும் இவர்களைப் போன்ற நடுத்தரப் பெண்களுக்கு எப்போதுதான் விடிவு தோன்றுமோ தெரியவில்லை. ■

வீதியை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த மகன் "அம்மா... அம்மா... என்றவாறே ஓடிவந்தான். "ஏண்டா. ஏன் இப்படி அலறிக் கொண்டு வருகிறாய்?" அதட்டலாய் மனைவி கேட்டாள். "நம்ம பாபு அவங்க வீட்டுக்கு அம்புலன்ஸ் வந்திருக்கு. எல்லோரும்



பூண்டுலோயா-மெய்யன் நட்ராஜ்-கட்டார்

கூட்டமா இருக்கிறாங்கம்மா... வாயேன் வந்து பார்" என்று கூறிவிட்டு மறுபடியும் ஓடிப்போனான். "அம்புலன்ஸா!" என்று அவள் அதிர்ந்தது போலவே நானும் ஒரு கணம் அதிர்ந்து போனேன். "லக்ஷ்மி போய் என்னான்று பாருங்க. எனக்கு ஆபீசுக்கு நேரமாச்சு" என்று மனைவியை அனுப்பினேன். அவளும் பதற்றத்தோடு ஓடிப்போனாள்...

ஸ்திரிப்போட்டுக் கொண்ட சேர்ட்டை அணிந்து கொண்டே அவர்களின் குடும்பத்தில் யாருக்கு என்னவாக இருக்குமோ என்று யோசிக்கிறேன். "அவங்க அம்மாவை நேற்று மாலை ஆபீஸ்விட்டு வரும்போது கூட கண்டேன் அவங்க கணவரோடு நல்லா சிரிச்சி பேசிக் கொண்டிருந்தாங்க. அவங்க அண்ணனும் வெளியூர் போயிருக்கான். பாபுவோட தம்புயும் தங்கையும் மாத்திரம்தான் வீட்டிலே இருக்காங்க. அப்படியென்றால் யாருக்கு என்னவாக இருக்கும்?" என்யோசனைக்கு எதுவுமே பிடிபடவில்லை.

அம்புலன்ஸ்' என்றாலே அதுவும் தந்திபோலத்தான் பதறப்பட வேண்டி இருக்கிறது. வடக்கிலோ கிழக்கிலோ கடும் யுத்தம் என்றால் அதனை முதலில் காலி வீதி வழியாக பெரியாஸ்பத்திரிக்கு ஓடுகின்ற அம்புலன்ஸ்களே அறிவித்துப் பீதியை உண்டாக்கும். அந்நாட்களில் எல்லாம் கொழும்பில் வாழும் தமிழர்கள் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு ஊசலாட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனால் சாதாரணமாய் ஒரு அம்புலன்ஸ் காலி வீதியில் அலறிக் கொண்டு ஓடினாலும் அங்கே யுத்தமோ என்று சம்சயிக்கவும் கூடுகின்றது.

சட்டையை அணிந்து கொண்டு வாசலுக்கு வந்தேன். யாருக்கு என்ன வருத்தம் என்று பார்த்து விட்டு வரப் போன மனைவி அதுவரையிலும் வந்திருக்கவில்லை. "டேய் போய் அம்மாவை கூட்டிவா" என்று மகனுக்கு உத்தரவிட்டேன். அவனுடைய சத்தமும் அங்கே இருக்கவில்லை. அவனும் அவளோடு சென்றுவிட்டிருந்தான் என்பது புரிந்தது.

# "அம்புலன்ஸ்!"

நேரம் ஆக ஆக எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆபீஸிற்கும் நேரமாகிக் கொண்டிருந்தது. யாருக்கோ என்வோ ஆகித்தான் இருக்கின்றது போய் ஒரு நடை நாமும் பார்த்துவிட்டு வருவோம் என எண்ணிக் கொண்டு கேற்றை திறக்கப் போனேன். அதற்குள் மனைவியும் மகனும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரின் முகத்தைப் பார்த்தபோது எனது பதற்றம் சற்று குறைய ஆரம்பித்தது. கவலையின் ரேகைகளோ சோகத்தின் சுவடுகளோ இல்லாமல் மல்லிகைப்பூவாய் மலர்ந்த சிரிப்போடு வந்த மனைவியிடம் "என்னாச்சு. யாருக்கு என்ன வருத்தம் அம்புலன்ஸ் எதற்காக வந்தது?" கேட்டேன்.

"அட நம்ம பாபு இல்ல" "ஆமா அவனுக்கு என்னாச்சு." "ஒண்ணும் ஆகல" "அப்படீன்னா!" "வேலையில்லாமல் வீட்டிலே சும்மாதானே இருந்தான்." "ஆமா அதுக்கென்ன" "கொஞ்சம் முழுசா என்னை சொல்லவிடுங்க." "சரி சரி சீக்கிரமா சொல்லு எனக்கு ஆபீஸிற்கு நேரமாச்சு." "அவன் எங்கேயோ போய் டிறைவிங் பழகி இருக்கான்." என்றபோதே எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. "வாகனத்தை எங்கேயே கொண்டு போய் விபத்துக்குள்ளாக்கி கையைக் காலை உடைத்துக் கொண்டு வந்துவிட்டான் அதுதான் அம்புலன்ஸ் வந்திருக்கிறது அப்படித் தானே!.. என்ன பெரியவருத்தமா லஷ்மி" என்றேன்.

"நான் முதல்லயே சொன்னேன் இல்ல. என்ன கொஞ்சம் முழுசா சொல்லவிடுங்க. ஏன் இப்படி அவசரப்பட்டு எல்லாத்தையும் தலைகீழா கற்பனை பண்ணிக்கிறீங்க. எதையும் நல்லமுறையிலே சிந்திக்கக்கூடாதா?" கடிந்து கொண்டாள் "சரி சரி என் நேரத்தை வீணடிக்காதே சொல்லு" "டிரைவிங் பழகி லைசென்ஸ் எடுத்ததுமே ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரிலே அம்புலன்ஸ் ஓட்டுற வேலை கிடைச்சிருக்கு. நேற்று நைட் டியூட்டி செய்திட்டு வார வழியிலே வண்டியை சர்வீஸ் செய்வதற்கு காரேஜிற்கு கொண்டு போக வந்திருக்கான். வீடு பக்கம் என்கிறதால வீட்டுக்கு வந்திருக்கான் அவ்வளவுதான். இதுக்குத்தான் அவங்க வீட்டிலே இப்படிக் கூட்டம். நம்ம ஆளுங்களுக்குத்தான் எதுக்குத்தான் கூட்டம் கூடணும் எதுக்கு கூடக்கூடாது என்று ஒரு விவஸ்தையே இல்லையே!" என அலுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைகிறாள். நான் கேற்றை அடைத்துவிட்டு வெளியேறுகிறேன்! ■

# கண்ணாமூச்சி ரே... ரே... 3

அன்று ஞாயிறு. மதியம். ஸ்டுடியோவில் சேது மட்டும். பழைய ஸ்டுடியோக்காரன் விட்டுச் சென்ற நெகடிவ், பாசிடிவ் படங்கள் கொண்ட நிறைய அட்டைப் பெட்டிகளை எடுத்து வைத்துக் கொண்டு... அவற்றைப் பார்த்து எதாவது தேவைப்படுவதை வைத்துக் கொண்டு, மற்றவற்றைக் கழிக்கும் நோக்கத்தில்...

ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்யாண புகைப்படங்கள் க்ரூப் புகைப்படங்கள். விழாக்கள். தறிப்பு விழாக்கள். அரசியல் கூட்டங்கள் என்று நிறைய இருந்தன.

ஒரு பிரௌன் கவரின் மேல் 'ரோஸ்லின்' என்று எழுதப்பட்டு அந்தக் கவரின் வாயில் வரிசையாக நான்கு பின்கள் அடிக்கப்பட்டிருந்தது.

சேது அந்த நான்கு பின்களையும் பொறுமையாக விலக்கி எடுத்து, உள்ளிருந்த புகைப்படங்களை எடுக்க... மொத்தம் பத்து, பனிரெண்டு இருக்கும். கூடவே நெகடிவ்களும் இருந்தன.

அட! என்று வியந்தான் சேது.

அந்த பனிரெண்டு படங்களும் ஒரு இளமையான பெண்ணின் முழு நிர்வாணப் படங்கள்-வெவ்வேறு போஸ்களில்.

இந்த ஸ்டுடியோக்காரனும் இந்த வேலை எல்லாம் செய்திருக்கான்யா! என்று நினைத்துக் கொண்ட சேது மீண்டும் அவற்றை ரசித்தான்.

இவ பேர்தான் ரோஸ்லினா? செம கட்டைதான்!

முகத்தை உற்றுப் பார்த்தவனுக்கு பகீரென்றது.

இது... இது... நடிகை மதுலதா முகம் போல இல்லை?

மதுலதா சினிமாவுக்காக வைத்த பெயர் என்றும், தான் ஒரு கிறிஸ்தவப் பெண் என்றும், பெயர் ரோஸ்லின் என்றும் மதுலதா எப்போதோ சொன்னதாக... படித்ததாக நினைவுக்கு வர...

அப்படியென்றால்?

இப்போது இந்த புகைப்படங்கள் வெறும் புகைப்படங்கள் அல்ல!

பம்பர் பரிசு அடித்த லாட்டரி டிக்கெட்.!

❀ ❀

பங்களா. பங்களாவின் பின்னால் தோட்டம். தோட்டத்தில் நீச்சல் குளம். நீச்சல் குளத்தில் மதுலதா. மதுலதா மேல் இரண்டு பீஸ் நீச்சல் உடை. நீச்சல் உடையில் அபார கவர்ச்சி. கவர்ச்சியில் கிறங்கின விழிகளுடன் அணில்தூத். அணில்தூத் தரையில் நாற்காலியில்.

"காமான்யா. நான் கத்துத் தாறேன் என்றாள்.

> மமதையான நபர்களையே பார்த்து பழகின மதுலதாவிற்கு அவனின் அமுல் தனம் பிடித்திருந்தன. திமிரான வார்த்தைகளையே கேட்டுப் பழகின அவள் காதுகளுக்கு அவனின் அப்பாவித்தனமான பேச்சுக்கள் பிடித்திருந்தன.

"ம்ஹூம். எனக்கு பயமா இருக்கு" என்றான்.

"நல்லா பயந்தே போ."

ஒரு கை தண்ணீர் எடுத்து அவன்மேல் வீசினாள்.

"மது டார்லிங், போதும் மேல வா."

"ஏன்?"

"என் பலம் தரையிலதானே?"

மதுலதா படியேறி தொடைகள் அரைக்க, அரைக்க ஈரம் சொட்ட வந்து அருகில் நின்று அவன் உதட்டுக்கு மேலே நீரால் மீசை எழுதி, "எப்ப வரும் அணில்?" என்றாள்.

"கிண்டலா? நான்தான் தினம் ஷேவ் பண்ணிக்கிறேன். என் முகத்துக்கு மீசை நல்லா இருக்குமா சொல்லு, பத்தே நாள்ல மீசை இருக்கும்."

"வேணாம், இப்படியே இரு நீ" என்று அவன் தலையை லேசாகக் கலைக்க..

"சப்பாத்தி மிஷின் மாதிரி சப்பக்குன்னு அணைச்சிக்கணும் மாதிரி இருக்கு."

"கமான், டூ இட். இங்கே யாரும் வர மாட்டாங்க அணில்."

"அதெல்லாம் சரி. என் ட்ரெஸ் முழுக்க நனைஞ்சிடுமே. எப்படிப் போவேன்?"

"புடவை வேணும்னா தர்றேன்."

"ச்சீ! ப்போ!"

"சமயத்தில நீ பொம்பளை மாதிரியே சிணுங்கறே. உதடுகூட பொம்பளை மாதிரி சிகப்பா இருக்கு."

"விட்டா நான் பிரா போட்டுக் கிட்டிருக்கேன்னு கூட சொல்வே போலிருக்கே. போ. போய் துவட்டிக்கிட்டு ட்ரெஸ் மாட்டிக்கிட்டு வா. வெய்ட் பண்றேன்."

மதுலதா தொடையருகில் உடையைக் கொத்தாகப் பிழிந்து உள்ளங்கையில் நீர் சேமித்து சட்டென்று அவன் பனியனுக்குள் கொட்டிவிட்டு ஓடினாள்.

இவன் சேச்சே என்று கர்சீப் எடுத்து துடைத்துக் கொண்டு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

அணில்தூத் ஒரு மார்வாடியின் பிள்ளை. மார்வாடிக்கு பத்து பதினைந்து பிஸ்னெஸ். விளம்பரச் செலவு வருடத்திற்கு நாற்பதரை லட்சம் என்றால் கால்கு லேட்டர் எடுத்து பண வலிமையைக் கணக்கிட்டு கொள்க.

அணில்தூத் ஒரே பிள்ளை. அந்த ஒரே பிள்ளை என்ன கேட்டாலும் எஸ். என்ன சொன்னாலும் எஸ். ஓய். ஈ எஸ் எஸ்!

"பாபா, அந்த கார் எவ்வளவு அழகு!"

மறுநாள் சூரியோதயத்துக்கு முன்னால் அணில் தூத்தின் முன்னால் அந்தக் கார் சலாம் போட்டு விட்டுக் காத்திருக்கும்.

"பாபா, இந்த பங்களா. எவ்வளவு பியூட்டிஃபுல்லா கட்டியிருக்கான்."

அடுத்த வாரம் பிறந்த நாள் பரிசாக பங்களாவின் பத்திரத்தை பாபா தருவார்.

அணில்தூத் பெண்கள் விஷயத்தில் மகா நல்லப் பையன். இந்தியாவின் இருபது பைசா ஸ்டாம்ப்பைக்கூட உற்றுப் பார்க்காமல்தான் ஒட்டுவான். புத்தகத்தில் பிரா விளம்பரத்தை வேகமாகப் புரட்டி விடுவான். சினிமாவில் கற்பு திருட்டு போகிற காட்சிகளில் நெளிந்து கொண்டு திரையில் இருந்து பார்வையை விலக்கி பக்கத்து சீட்டைப் பார்ப்பான். அங்கே காட்சி இன்னும் மோசமாக இருக்க... திரையே பரவாயில்லை என்று பார்ப்பான்.

அப்படிப்பட்ட சங்கோஜனாக வளர்ந்த அணில் தூத்தை பாபா ஒரு பட பூஜைக்கு அழைத்துச் சென்றார். அந்த படத்திற்கு அவனின் பாபா ஃபைனான்ஸ் செய்திருந்தார். அங்கே மதுலதா வந்திருந்தாள்.

அறிமுகப்படுத்தப்பட்டான்.

மதுலதாவின் காதில் கிசுகிசுத்தாள் கூட வந்த சித்தி.

"பிள்ளை யாரு தெரியுமில்லை, மார்வாடி பையன். ஒரே பையன். இவன் அப்பாவை நம்பிதான் பெரிய பெரிய கம்பெனியே படம் எடுக்கறாங்க. சொத்து தோராயமா பத்து கோடிக்கு மேல தேறும்னு சொல்றாங்க."

மதுலதா அப்போது அவனை விசேஷமாகப் பார்த்தாள். ஒரு காலத்தில் பணத்திற்காக என்னென்னமோ காரியங்கள் செய்திருக்கிற மதுலதாவுக்கு பணம், பணம், பணம் என்று லட்சிய ஜுரம் வந்து... 'எதுவும் செய், பணம் செய்!' என்கிற மகத்தான கொள்கை வகுத்துக் கொடுத்த சித்தியின் போதனைகள் தேனாய் சித்தித்தது.

அணில் தூத்தை கொஞ்சம் ஆட்டம் காட்டி தன் பின்னால் சுற்ற வைத்து, என்று சில திட்டங்களுடன் அவள் பார்த்த பார்வையில் அவன் அடிவேர் வரை ஆடிப்போனான்.

ஈர்த்தாள். ஈர்க்கப்பட்டான்.

"ஒரு நாள் ஷூட்டிங் பார்க்கலாம் வாங்களேன் மிஸ்டர் அணில்."

அன்றைக்கு செயற்கை மழையில் நனைகிற காட்சி.

அணில் நூறு தரம் எச்சில் விழுங்கினான்.

"ஹலோ அணில், எப்படி இருக்கிங்க? இன்னிக்கு ஷூட்டிங் கேன்சல்ட். சீட்லதான் இருக்கேன். போரடிச்சிது. உங்க நினைவு வந்திச்சி. வர்றிங்களா, சும்மா பேசிக்கிட்டிருப்போம்."

அணில் மார்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு பேசினான்.

மமதையான நபர்களையே பார்த்து பழகின மதுலதாவிற்கு அவனின் அமுல் தனம் பிடித்திருந்தன. திமிரான வார்த்தைகளையே கேட்டுப் பழகின அவள் காதுகளுக்கு அவனின் அப்பாவித்தனமான பேச்சுக்கள் பிடித்திருந்தன. தொட்டுத் தொட்டு, உரசி உரசி பேசும் நபர்களுக்கு மத்தியில் தூரமாய் உட்கார்ந்து பேசின அவனை மிகப் பிடித்துப் போயிற்று.

நீ பெத்த பொண்ணா இல்லை நீ சொந்த சித்தியா? தூரத்து உறவுல சித்தி உறவு வேணும். ஏதோ வீட்டுக்கு காவலா, வெளியே போக வரதுணையா உன்னை வச்சிக்கிட்டிருக்கா. நானும் ஒட்டிக் கிட்டிருக்கேன். அவ சொந்த வாழ்க்கைல தலையிட நமக்கென்ன உரிமை இருக்கு?"

"சேம் சைட் கோல் போடறதே உங்களுக்குப் பொழைப்பாப் போச்சி. அவளை கல்யாணம் பண்ணிக்க விடாம தடுக்கணுமேங்க... அய்யோ! என்ன செய்வேன் நான்!"

சித்தி விழிகளை உருட்டி யோசித்தாள்.

*(கண்ணாமூச்சி தொடரும்)*



**பட்டுக்கோட்டை பிரபாகர்**

# உயிரைக் குடித்த இண்டர்நெட் செக்ஸ்



சென்னை கிண்டி பகுதியில் உள்ள வீடோன்றின் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸாருக்கு அதிர்ச்சி!

'செத்துப் போனது ஆணா? பெண்ணா? என்ற முடிவுக்கு வரமுடியாமல் அதிர்ச்சி!

கழுத்தில் நைலான் கயிற்றால் சுருக்கிட்டு பிணமாக இருந்த அந்த இளைஞனின் மார்பில் 'ஸ்பாஞ்ச்' வைத்து பெண்கள் அணியும் பிரா அணியப்பட்டிருந்தது! உள்ளங்காலிலிருந்து தொடை வரை வெளிநாட்டு பெண்கள் அணியும் கருப்பு ஸாக்ஸ் (காலுறை) போடப்பட்டிருந்தது! பூனை முடி கூட இல்லாத அளவிற்கு உடம்ப முழுவதும் ஷேவ் செய்யப்பட்டிருந்தது! சடலத்தின் காலடியில் ஆளுயர கண்ணாடி தரையில் வைக்கப்பட்டிருந்தது! எதிரில் பெரிய கண்ணாடி சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது!

இறந்து பல் மணி நேரம் ஆகியிருந்த நிலையில்... வித்தியாசமான அலங்காரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞனின் மரணம் பொலிஸாருக்கு ரொம்பவே குழப்பத்தை உண்டு பண்ணியது!

தற்கொலைக்கான காரணம் இறந்து போனவரின் நண்பர்களுக்குக் கூட புரியவில்லை!

வீட்டைச் சோதனையிட்ட பொலிஸாருக்கு மேலும் மேலும் அதிர்ச்சி!

நெருப்புக்கோழியுடன் மனிதன் உடலுறவு கொள்வது, குரங்குடன் மனிதன் உறவு கொள்வது, உடலுறவின் போது சாட்டையால் அடித்து தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வது என விதவிதமான வக்கிர செக்ஸ் படங்கள் சிக்கியது!

'இவனுடைய பொழுது போக்கே... இன்டர்நெட்டில் செக்ஸ் தளங்களை பார்ப்பதுதான்!' என இறந்து போனவனின் நண்பர்கள் சொல்கிறார்கள்!

இன்டர்நெட்டுக்கும், இளைஞனின் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்? எப்படி சம்பந்தம்?

பிந்திய விசாரணைகளில் இருந்து உண்மை வெளிச்சமானது.

இன்டர்நெட்டில் செக்ஸ் வெப்-சைட்டுகளை பார்க்கும் பழக்கம் அந்த இளைஞனுக்கு இருந்திருக்கிறது! 'நெட்'டில் பார்க்கும் காட்சிகளை சுயமாக செய்து பார்ப்பது அவனுக்கு பொழுது போக்கு. கழுத்தில் தூக்கு மாட்டிக்கொண்டு செக்ஸை அனுபவிக்கிற முறைகள் 'நெட்'டில் உண்டு! அதைப் பார்த்து விட்டு அதேபோல் பல முறை செய்தும் இருக்கிறான்! மூன்று வருஷங்களுக்கு முன்... பெங்களூரில் உள்ள தன் வீட்டில் ஒரு முறை இதேபோல் இந்த இளைஞன் சுருக்குமாட்டிக் கொண்ட போது... அவனின் தாயார் பார்த்துவிட்டு அழுதிருக்கிறார்! 'இனி மேல் இப்படி செய்ய மாட்டேன்!' என்று சொன்ன அந்த இளைஞன்... தனிமையில் அந்தப் பழக்கத்தை தொடர்ந்திருக்கிறான்! விபரீதத்தில் முடிந்து விட்டது!

பொலிஸாரின் தகவலின்படி இறந்தவரின் உடம்பில் ஏகப்பட்ட சிறு சிறு காயங்கள் இருக்கிறது! போதைப் பழக்கம் உள்ளதற்கான அறிகுறியும் தெரிகிறது! இதே போல் பலமுறை தூக்கு மாட்டியதற்கு ஆதாரமாக கழுத்து எலும்பில் அடையாளம் இருக்கிறது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ரத்தத்தில் ஆக்ஸிஜன்' இருக்கும்! ஆனால் ஆக்ஸிஜன் அளவ குறையக் குறைய... கார்பன்டை ஆக்ஸைடு அதிகரிக்கும்! அப்படி அதிகரிக்கும் போதுதான் மரணம் சம்பவிக்கும்! ஆக்ஸிஜன் குறைந்து கார்பன்டை ஆக்ஸைடு கூடும்போது உடம்பின் நெகிழ்ச்சியான பகுதிகளில் உள்ள திரவங்கள் வெளியேறும்! இதனால்தான் தற்கொலை செய்து கொண்டவர்களின் உடம்பிலிருந்து சிறுநீர் மலம் ஆகியவை வெளியேறுவது! இந்த அடிப்படையில் செக்ஸை அனுபவிப்பது மேல்நாட்டு வழக்கம்!

செக்ஸ் உறுப்பில் விரைப்பை உண்டாக்கிக் கொண்டு கழுத்தில் சுருக்குக் கயிறை மாட்டிக்கொண்டு முடிச்சை இறுக்கிக் கொண்டே வருவார்கள்! அப்படி இறுக்க இறுக்க... கார்பன்டை ஆக்ஸைடு கூடும்! அதன் பிறகு உறுப்பிலிருந்து விந்து வெளியேறும்! சாதாரண செக்ஸைவிட இதில் அதிக போதையான ஒரு மயக்கம் கிடைக்கும்! 'திருப்தி' கிடைத்ததும் சுருக்கை நீக்கிவிட்டு பழைய நிலைக்கு வந்து விடுவார்கள். இந்த மாதிரி செக்ஸ் அனுபவிப்பவர்கள் 'செக்ஸுவல் ஆஸ்பீஸியா' (SEXUAL ASPHYXIA) என்கிற மனோவியாதி கொண்டவர்கள்!



மேலை நாடுகளில் இந்தப் பழக்கம் இளைஞர்களிடம் சகஜமாக இருக்கிறது!

தூக்கு மாட்டி செக்ஸ் அனுபவிப்பது ஆபத்தான விஷயமென்பதால் மேல்நாட்டில் இன்னொரு முறையையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்!

பிளாஸ்டிக் பையினால் முகத்தை மூடி 'கிளிப்' போட்டு இறுக்கிக்கொண்டு இப்படிப்பட்ட செக்ஸை அனுபவிக்கிறார்கள்! கீழேயும், எதிரிலும் இருக்கும் கண்ணாடி மூலம் சுருக்கை சரி பார்த்தபடியே செயல்படுவார்கள்! இந்த முறையில் உச்சபட்ச சந்தோஷம் கிடைப்பதால் உடம்பு கட்டுப்பாட்டை இழந்து சுருக்கு இறுகிவிடும்! அப்படி இறுகிய பட்சத்தில்தான் இந்த மரணம் ஏற்பட்டிருக்கிறது! இந்த இளைஞனுக்கு 'ட்ரான்ஸ் வெஸ்டிஸம்' (TRANSVESTIM) என்கிற செக்ஸ் மனநோயும் இருந்திருக்கிறது! இதனாலேயே... பெண்களின் ஆடைகளை அணியும் பழக்கமும் இருந்திருக்கிறது!

சாதாரண செக்ஸில் சலிப்புற்று புதிய தேடலில் ஈடுபட்டதன் விளைவுதான் இந்த விபரீதம்!

இப்படி விபரீதமான, விதவிதமான, வக்கிரமான செக்ஸ் பற்றி படத்துடன் மிகத் தெளிவாக விளக்கும் இணையத்தளங்கள் இன்டர்நெட்டில் தாராளமாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# எஸ்.டி.எஸ். தொடர் 77

**[இக்கட்டுரைத் தொடரில் இப்பொழுது நாம் முன்வைக்கும் கருத்துக்களை வாசகர்கள் இப்பொழுது நடைபெற்று முடிந்திருக்கும் பொதுத் தேர்தலுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கவேண்டியதில்லை. இப்பொழுது நாம் முன்வைக்கும் கருத்துக்கள் யாவும் பொதுத் தேர்தலுக்கு பலகாலத்திற்கு முன்பாக கருக் கொள்ளப்பட்டவை என்பதை வாசகர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன்.]**

## சம அந்தஸ்து தவிடுபொடியானது

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் 1956ம் ஆண்டு ஒரு பெரும் திருப்பு முனையாக அமைந்தது எனலாம். இந்த ஆண்டில்தான் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்கள் என்றநிலை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்களுடைய ஆங்கில மொழியே இந்த நாட்டின் ஆட்சி மொழியாக அரசோச்சி வந்தது. 1948ம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சிங்களப் பேரினவாதிகள், இந்த நாட்டில் பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே பூரண உரிமையும் உள்ளது என்ற அடிப்படையில் திட்டங்களைத் தீட்டலாயினர். அன்று வரை சிங்களமும் தமிழும் இணைந்து இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக இருக்குமென்று வாக்களித்து வந்த சிங்களத் தலைவர்கள், திடீரென தங்களுடைய வாக்குறுதிகளைக் கைவிட்டு சிங்களத்தை மட்டுமே இந் நாட்டின் ஆட்சி மொழியாக்க திடசங்கற்பம் பூண்டனர்.

திரு.டி.எஸ்.செனநாயக்கா 1952ம் ஆண்டு காலஞ் சென்றதைத் தொடர்ந்து அவருடைய புதல்வர் திரு.டட்லி செனநாயக்கா அவர்கள் நாட்டின் பிரதமரானார். இவருடைய காலத்தில் அரிசி விலையை சற்று அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் நாடு முழுவதும் எதிர்ப்பொலி கிளம்பியது. நாடு தழுவிய ஹர்தால் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டன. மென்மையான இதயம் படைத்தவரான திரு.டட்லி செனநாயக்காவால் இத்தகைய எதிர்ப்பினை எதிர்கொள்ளமுடியாமற் போய்விட்டது. இதனால் அவர் தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதனை அடுத்து சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் பிரதமரானார். சேர் ஜொன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

1954ம் ஆண்டின் நடுப்பகுதியில் பிரிட்டிஷ் மகாராணி எலிசபத் அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தார். அவருடைய வருகைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய நிதி அமைச்சராக விருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனா அவர்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் நன்றி உரையை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் தமிழுக்கு எவ்விடமும் அளிக்கப்படாமை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. தமிழுக்கும் சிங்களத்துடன் சம அந்தஸ்து வழங்கப்படும் என்று அன்று வரை கருதியிருந்த தமிழர்களுக்கு அன்று இரண்டாவது அடி விழுந்தது. (முதலாவது அடியாக விழுந்தது-இந்திய பாகிஸ்தானிய குடியுரிமை வாக்குரிமைச் சட்டங்கள்). இதன்பின்னர் சிங்களத் தலைவர்களின் போக்கில் ஏற்படத் தொடங்கிய மனமாற்றங்களை தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றத்துடன் நுகரத் தொடங்கினர்.

எலிசபத் மகாராணியின் நன்றி தெரிவிப்பில் தமிழுக்கு உரிய இடமளிக்கப் படாமையினால் கொண்ட வெறுப்பைக் காட்டுமுகமாக பிரதமர் சேர்ஜோன் கொத்தலாவலை அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டினார்கள்.

யாழ்ப்பாணம் கொக்குவில்லில் சேர் ஜோனுக்கு திரு.ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது தனது உரையில் திரு.பேரின்பநாயகம் அவர்கள், இலங்கை அரசியலில் தமிழர்கள் கொண்டிருந்த பெரும் பங்கினை எடுத்துரைத்ததுடன் தமிழுக்கும் உரிய இடம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலிறுத்த சேர் ஜொன், தான் உடனடியாகவே சிங்களத்துடன் தமிழையும் இந்நாட்டின் அரச மொழியாக்குவதற்கான அரசியலமைப்பு விதிகளில் உரிய மாற்றங்களைச் செய்யப் போவதாக வாக்குறுதி அளித்தார்.

சேர் ஜோன் யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழுக்கும் சிங்களத்துடன் சம அந்தஸ்து வழங்கப்போவதாக வாக்களித்த சம்பவம் சிங்களப் பேரினவாதிகளிடம் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. பிரதமர் கொழும்பு திரும்பு முன்னரே அவரைச் சுற்றி எதிர்ப்புத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கிவிட்டது. அவர் கொழும்பு திரும்பியதும், யாழ்ப்பாணம் கொக்குவில் வரவேற்பின்போது கொடுத்திருந்த வாக்குறுதிக்கு விரோதமாக அறிக்கை ஒன்றை விடுத்தார்.

கொத்தலாவலையின் மறுப்பு அறிக்கையால் திருப்தி அடையாத திரிசிங்கள பெரமுனை, பாஷா பெரமுனை போன்ற பேரினவாத இயக்கங்கள் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் விரோத வித்துக்களைத் திவிரமாக ஊன்றத் தலைப்பட்டனர்.

இதற்கு முன்னர் டாக்டர் என்.எம். பெரேரா அவர்கள் 1955ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தையே கொண்டு வந்தார். தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதே அத்தீர்மானம். திரு.எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் இத்தீர்மானத்துக்குத் தனது முழு எதிர்ப்பினை பாராளுமன்றத்தில் மட்டுமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலும் எடுத்தியம்ப தொடங்கினார்.

திரு.பண்டாரநாயக்க அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்னர், அரசாங்க சபையில் உரை நிகழ்த்தியபோது "சிங்கள மொழியுடன் தமிழும் இந்நாட்டில் ஆட்சிமொழி அந்தஸ்தினைப் பெறவேண்டும்" என்று வாதிட்டவர். பின்னர் 1955ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் டாக்டர் என்.எம்.பெரேரா அவர்களின் தீர்மானத்தை எதிர்த்துப் பேசியபோது, "சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் ஏராளமான தமிழர்கள் கடைகளை வைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். இக்கடைகளில் சிப்பந்திகளாக இருப்போரும் தமிழர்களே. இவர்களுடன் அன்றாடம் பழகும் வாய்ப்பும்பெறும் சிங்களவர்களும் தங்களுடைய மொழியான சிங்களத்தையே மறந்து போய்விடும் வாய்ப்புண்டு. இதன்பயனாக சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே வெகுவிரைவில் சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரச மொழியாக்கப்படவேண்டும்" என்று கருத்துப்படப் பேசினார்.



தந்தை செல்வா அவர்கள் சென்னை நகர்வந்தபோது தந்தை ஈ.வே.ரா பெரியாரை சந்தித்தார் திரு.அமிர்தலிங்கம் திருமதி மங்கையற்கரசு அமிர்தலிங்கம், திரு.கி.வீரமணி, டாக்டர் ஜனார்த்தனம், திரு.மணவைத்தம்பி ஆகியோர் உடனுள்ளனர்.

இதே காலகட்டத்தில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச மொழியாக வேண்டும் என்ற கூக்குரல் நாடு முழுவதும் ஒலிக்கத் தலைப்பட்ட திரு பண்டாரநாயக்க அவர்கள் ஒருபடி மேல் சென்று, "எனக்கு அதிகாரம் கிடைக்குமானால் இருபத்து நாலு மணி நேரத்தில் சிங்களத்தையே இந்நாட்டின் அரச மொழியாக்குவேன்" என்று சூளுரைத்தார்.

இக்கால கட்டத்தில் 1956ம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான முஸ்தீபுகள் தலையெடுத்தன. மொழிப் பிரச்சனையையே தேர்தலின் கோஷமாக அமையவேண்டும் என்ற நிலைப்பாடு தலை தூக்கியது.

1956ம் ஆண்டு பெப்ரவரி 18ம் திகதியன்று களனியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் முன்மொழியப்பட்ட முக்கிய தீர்மானம்: "இந்நாட்டின் அரசகரும மொழியாக சிங்களம் மட்டுமே இருக்க வேண்டும்" என்பதாகும். இந்தச் செய்தி ஒரு பேரிடியாக தமிழ் பேசும் மக்களைத் தாக்கிய போதும், சிங்களத் தலைவர்கள் பலர் சில ஆண்டுகளாகத் தெரிவித்து வந்த கருத்துக்களின்போது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த ஐயப்பாடுகள் உண்மையானது தெரியவந்தது.

## இரா.பத்மநாதன்

தந்தை செல்வா அவர்கள் ஏற்கனவே மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறிக்க எடுத்த நடவடிக்கைகளின்போது. "இன்று அவர்களுக்கு விழும் அடி, நாளை இலங்கை வம்சாவளித் தமிழர்களுக்கும் விழப் போகிறது" என்று பாராளுமன்றத்தில் கூறிய வாக்குப் பலித்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் பேசும் மக்களைக் கைவிடமாட்டாது என்று அதுவரை நம்பிக்கொண்டிருந்த அக்கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்த தமிழர்கள் பலர் அக்கட்சியிலிருந்து வெளியேறினர். பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு.சி.மு.இராசமாணிக்கம் அவர்களும் ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறினார்.

களனி மாநாட்டில் 'சிங்களம் மட்டும் இலங்கையின் அரச மொழியாக ஏற்படுத்தப்படவேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை எதிர்க்கும் முகமாக மட்டக்களப்பில் முதன் முதலாக ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. மட்டக்களப்பு மைதானத்தில் திரு.செ.இராசதுரை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் மட்டக்களப்பின் பல பாகங்களிலுமிருந்து திரண்டு வந்திருந்த ஏராளமான மக்கள் பங்கேற்றனர். மாலையில் ராஜா ஸ்டுடியோ அதிபர் திரு.நடராசா அவர்கள் உண்ணா நோன்பிருந்த தொண்டர்கள் அனைவருக்கும் பழரசம் வழங்கி நோன்பினை முடித்து வைத்தார்.

'சிங்களம் மட்டும் அரசகரும் மொழி என்ற கோஷத்தை அடிப்படையாக வைத்து 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. வடகிழக்கில் தமிழரசுக் கட்சி போட்டியிட்டு மொத்தம் 10 இடங்களைக் கைப்பற்றியது.

1952ம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சி, கல்முனை, நிந்தவூர் தொகுதிகளுட்பட நான்கு தொகுதிகளில் வெற்றியீட்டியது கல்முனைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டி போட்டு வெற்றியீட்டிய கேற் முதலியார் காரியப்பரும் நிந்தவூரில் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு.எம்.எம்.முஸ்தபா அவர்களும், மட்டக்களப்பில் கட்சியின் ஆதரவுபெற்று சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு.ஆர்.பி.கதிர்காமர் அவர்களும் வெற்றிபெற்றனர்.

இவர்களைத் தவிர கோப்பாயில் திரு.கு.வன்னியசிங்கம் அவர்களும் திருகோணமலையில் திரு.என்.ஆர். இராசவரோதயம் அவர்களும் வெற்றி பெற்றனர். காங்கேசன்துறையில் போட்டி போட்ட தந்தை செல்வா அவர்கள் வெற்றி பெறவில்லை.

1956ம் ஆண்டு தேர்தலில் எத்தனை பாடுபட்டும் ஐக்கிய தேசியக் கட்சியால் வெற்றிபெற முடியவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்து அதன் தலைவராகவிருந்த திரு.எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா பெரும் வெற்றியைப் பெற்றார். இதே தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு.செ.இராசதுரை அவர்களும் வெற்றிபெற்றார். **(வளரும்)**

---

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி – கோ.சுவாமிநாதன்

### 44. விவேக சிந்தனை

**1897லே** ஒரு நாள்.

இந்திய நாட்டின் தென்பகுதியிலே உள்ள ஒரு சின்ன துறைமுகம்-பாம்பன்!

ராமநாதபுரம் மன்னர், ராஜா பாஸ்கர சேதுபதி அங்கே யாருக்காகவோ ரொம்ப ஆவலோட காத்துக்கிட்டிருக்கார். தமது குடி படைகளோட காத்துக்கிட்டு இருக்கார்.

கொஞ்ச நேரத்துல அவர் எதிர்பார்த்த கப்பல் கரைக்கு வந்து சேர்ந்தது.

அவர் யாருக்குக் காத்துக்கிட்டிருந்தாரோ அவருடைய முகம் தெரிஞ்சுது!

அது சுவாமி விவேகானந்தருடைய முகம்.

1893 லே செப்டம்பர் மாசத்துலே அமெரிக்காவிலே நடந்த சர்வ சமய உலக மாநாட்டுலே பேசி, உலகப் புகழ் பெற்ற விவேகானந்தர் அப்பத்தான் தாய்நாடு திரும்புறார்.

கரைக்கு வந்ததும் சுவாமிகள் தம்முடைய பாதத்தை இந்திய மண்ணில் வைக்கறதுக்காக வந்தார்.

அதுக்கு முன்னாடி அந்த பாதத்தை என்னுடைய தலையிலே வைக்கணும்னு கேட்டுக்கிட்டார் மன்னர்.

இந்த வார்த்தைகள் சுவாமிகளை மெய்சிலிர்க்க வச்சுட்டுதாம்.

சேதுபதியை கட்டிப் பிடிச்சிக்கிட்டு கண்ணீர் பெருக்கினாராம். அதுக்கப்புறம் விவேகானந்தரை சேதுபதி மன்னர் ராமேஸ்வரத்துக்கு அழைச்சிக்கிட்டுப் போனார்.


அலங்காரம் பண்ணின ஒரு வண்டியிலே உக்கார வச்சார். அந்த வண்டியை தன் கையாலேயே இழுத்துக்கிட்டு ராமேஸ்வரம் வீதிகுள்ளே சுத்தி வந்தார்.

அரசு- ஆன்மீகத்துக்கு கொடுத்த மரியாதை அது!

இங்கிலாந்து நாட்டிலே ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையிலே அறிஞர் மாக்ஸ் முல்லர் பணியாற்றிகிட்டு இருந்த காலம்.

மாக்ஸ்முல்லர் சமஸ்கிருத மொழியிலே ஆழ்ந்த ஞானம் உள்ளவர். நான்கு வேதங்களைப்பத்தியும் நாற்பது வருஷங்கள் ஆராய்ச்சி பண்ணினார். அப்புறம் ஆங்கிலத்திலேயே வெளியிட்டார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பத்தியும் ஒரு நூல் வெளியிட்டிருக்கார். பரமஹம்சரின் சீடர் விவேகானந்தர்.



விவேகானந்தரை சந்திக்கணும்னு மாக்ஸ் முல்லர் ரொம்ப ஆவலா இருந்தார்.

ரெண்டு பேரும் சந்திக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்தது! மாக்ஸ்முல்லரை சந்திச்சப்போ விவேகானந்தர்,

"ஞான கங்கையின் ஆழத்தை இன்று தான் கண்டேன்!"ன்னார்.

மாக்ஸ்முல்லர் என்ன சொன்னார் தெரியுமா?

"ஆன்மீக எவரெஸ்டை நான் இன்னைக்குத்தான் பார்க்கிறேன்!" னார்.

'நாம எப்படி நினைக்கிறோமோ அப்படியே இந்த உலகத்தைப் பார்க்கிறோம்'-ங்கறது விவேகானந்தர் கருத்து. அதுக்கு அவரே ஒரு உதாரணம் சொல்றார்.

பட்டுப்போன ஒரு அடி மரம் மட்டும் ஒரு இடத்துலே நின்னுக்கிட்டிருந்தது. இருட்டுலே அதை ஒரு திருடன் பார்க்கிறான். அது ஒரு போலீஸ்காரர்ன்னு நினைக்கிறான்.

தன்னுடைய காதலிக்காக காத்துக்கிட்டிருக்கிற ஒரு வாலிபனுக்கு அது, அவளாவே தெரியுது!

பேய்க் கதையைக் கேட்டுக்கிட்டிருந்த ஒரு குழந்தை அதை ஒரு பேய்ன்னு நினைச்சிக்கிட்டு அழ ஆரம்பிச்சுடுது.

ஆனா... இந்த வேளையிலே எல்லாம் அது ஒரு உலர்ந்த மரக்கட்டையாவே இருந்துது. நாம எப்படி நினைக்கிறோமோ அப்படித்தான் இந்த உலகத்தைப் பார்க்கிறோம்-ங்கறார் விவேகானந்தர்.

அவரைப்பத்தி இன்னொரு செய்தியும் உண்டு.

இளைஞர்கள் சில பேரு சேர்ந்துக்கிட்டு, ஒரு மரத்துலே தொங்கிக்கிட்டிருந்த கயிற்றை குறி பார்த்து சுட்டுகிட்டிருந்தாங்களாம். யாராலேயும் சரியா சுட முடியலே; குறி தவறிப் போய்கிட்டே இருந்தது. பக்கத்துல இதைப் பார்த்து சிரிச்சிக்கிட்டே விவேகானந்தர் நின்னுகிட்டிருந்தார்.

"என்ன சிரிக்கிறீங்க? நீங்கதான் சுடுங்களேன் பார்க்கலாம்!"ன்னான் ஒரு பையன்.

விவேகானந்தர் துப்பாக்கியை வாங்கி சுட்டார். குறி தவறாமே கரெக்டா சுட்டார்! பையன்களுக்கு ஆச்சரியம்.

"ஏற்கனவே உங்களுக்கு துப்பாக்கி சுடறதுலே பழக்கம் உண்டு போல இருக்கு!"ன்னாங்க.

"அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது! ஒருநாள் கூட துப்பாக்கியாலே சுட்டதில்லே! ஆனா குறி தவறாமே என்னாலே சுட முடிஞ்சதுக்கு காரணம் உண்டு!"ன்னார்.

"என்ன காரணம்?"ன்னு கேட்டாங்க.

"மனசை ஒரு நிலைப்படுத்த என்னாலே முடியும். அதுதான் காரணம்"ன்னார் விவேகானந்தர்.

மனசை ஒரு முகப் படுத்தினா சாதிக்க முடியாததை எல்லாம் சாதிக்கலாம்.

இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தர் மனசை ஒருமுகப்படுத்துறதுக்காக 'டிரெயினிங்' எடுத்துக்கணும்னு ஆசைப்பட்டார். சுவத்துலே வட்டமா ஒரு கருப்புப்புள்ளி வச்சி அதை தினமும் உத்துப் பார்த்துக்கிட்டே உட்காந்து இருப்பார். ஒரு மாசம் ஆச்சு. ஒருநாள் உட்காந்தவர் ரொம்ப நேரமா எழுந்திரிக்கவே இல்லே!

"என்னங்க விஷயம்?"ன்னு விசாரிச்சாங்க வீட்டுக்காரம்மா.

"சுவத்துல வச்சிருந்த கருப்புப்புள்ளியை காணோம்! அது தான் யோசிச்சிக்கிட்டிருந்தேன்!"ன்னார். அதுக்கு அந்த அம்மா...

"நீங்க புள்ளி வச்சது கொல்லைப் பக்கத்து சுவத்துலே!.. இப்ப உக்காந்திருக்கிறது வாசல் பக்கத்து சுவத்துக்கு எதிரிலே!"ன்னாங்க.

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## ஜடேஜாவுக்கு இன்னொரு வாய்ப்பு



இந்திய கிரிக்கெட் வீரர் அஜே ஜடேஜா மீதான சூதாட்ட குற்றச்சாட்டுகளை ரத்து செய்வது குறித்து விரைவில் விவாதிக்கப்பட உள்ளது. இதனால் விரைவில் அணியில் ஜடேஜா மீண்டும் இடம்பிடிக்கவுள்ளார்.


கிரிக்கட் சூதாட்டத்தில் லஞ்சம் பெற்றது தொடர்பாக இந்திய வீரர்களிடம் கடந்த ஆண்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் முன்னாள் கப்டன் அசாருதீன் உட்பட முக்கியமான வீரர்கள் இதில் சம்பந்தப்பட்டு இருந்தனர். இளம் ஆட்டக்காரர் அஜய் ஜடேஜாவும் லஞ்சம் பெற்றதாக புலனாய்வுப் பிரிவு விசாரணை அறிக்கை வெளியிட்டது. இதையடுத்து இந்திய கிரிக்கட் சபை ஜடேஜாவுக்கு 5 ஆண்டு தடையும். அசாருதீனுக்கு ஆயுள் தடையும் விதித்தது

இந்த தடையை எதிர்த்து அசாருதீன் மற்றும் ஜடேஜா இருவரும் வழக்குத் தொடுத்தனர். இந்த நிலையில் தன் மீதான தடையை ரத்து செய்யக்கோரி இந்திய கிரிக்கட் சபைக்கு ஜடேஜா கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக கிரிக்கட் சபைத் தலைவர் டால்மியாவுக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு கடிதம் ஒன்றையும் ஜடேஜா எழுதினார். இதனால் ஜடேஜாவுக்கு விதிக்கப்பட்ட தடைகள் ரத்து செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில கிரிக்கட் சபைக்கு எதிராக தொடக்கப்பட்டுள்ள வழக்கையும் வாபஸ் பெறப்போவதாக ஜடேஜா அறிவித்துள்ளார். விரைவில் சூதாட்ட தண்டனையில் இருந்து ஜடேஜா தப்புவார் என்றே கூறப்படுகிறது. இது தொடர்பாக டால்மியாவிடம் கேட்டபோது நீதிமன்றம் வரை இந்த விவகாரம் சென்றுவிட்டது. எனவே நான் மட்டும் தனியாக இந்த விஷயத்தில் முடிவு எடுக்க முடியாது. கிரிக்கட் சபை நிர்வாகிகள் கூட்டத்தில் இது தொடர்பாக விரைவில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்றார். டால்மியா விடுத்துள்ள இந்த சாதகமான பதிலால் விரைவில் ஜடேஜா இந்திய அணியில் இடம்பிடிப்பார் என்றே கூறப்படுகிறது.

## அபான்ஸ் கிண்ண முக்கோணத் தொடர்

### மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கையை வென்றது



இலங்கை அணியுடனான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி 49 ஓட்டங்களால் வென்றது.

எல்.ஜி.அபான்ஸ் கிண்ணத்திற்கான இப்போட்டி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் பகல் இரவு ஆட்டமாக நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 250 ஓட்டங்களைப் பெற்றது அவ்வணி. பிரையன் லாரா 53 பந்துவீச்சுகளில் 60 ஓட்டங்களைப் பெற்றார். டெரன்கங்கா 50 ஓட்டங்களையும், ஆர்.சர்வான் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைப் பந்துவீச்சாளர்களில் குமார் தர்மசேன சனத் ஜயசூரிய இருவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். முத்தையா முரளிதரன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 43.2 ஓவர்களில் 201 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜயசூரியவும் அவிஸ்க குணவர்தனவும் முதலாவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்களைக் குவித்தனர். அவிஸ்க ஆட்டமிழந்த பின் ஏனைய விக்கெட்டுகள் விரைவாக வீழ்ந்தன. இறுதி 5 விக்கெட்டுகள் 17 ஓட்டங்களில் வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

வேகப்பந்து வீச்சாளர் கொரி கொலிமோர் 51 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். விக்கெட் காப்பாளர் ரிட்லி ஜேக்கப்ஸ் 5 பிடிகளைக் கைப்பற்றினார். அத்துடன் அவிஸ்க குணவர்தனவை ஸ்டம்ப் முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக கொலிமோர் தெரிவானார்.

இத்தொடரின் முதல் போட்டியில் இலங்கை ஸிம்பாப்வே அணியை படுதோல்வியடையச் செய்தது. அதன்பின் ஸிம்பாப்வே அணியிடம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுகளால் தோற்றது. அதே அணியிடம் இப்போது இலங்கை தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவள் கண்களில் பூத்த மலர்கள்

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

அவள் வரும் நேரம் இது.

கதிரவன் தன் தழல் குறைத்து தரணியில் உள்ள பொருட்களில் எல்லாம் தங்கம் பூசிக் களித்திருந்தான்.

தென்றல் அவளை வரவேற்கும் முகமாக அவள் நடையைத் தான் நடந்து பார்த்ததில்... பூமி புல்லரித்துக் கிடந்தது.

புங்காவுக்கு வெளியே வாகனங்களின் இரைச்சல், அவன் காதுகளுக்கு கந்தர்வர்களின் கானம் மட்டுமே கேட்டபடி இருந்தது.

பக்கத்திலிருந்த நந்தியாவட்டைச் செடியில் நகைத்தபடி மலர்கள்! தென்றல் தீண்டிய சுகத்தை ஒன்றுடன் ஒன்று பேசிப் பரவசங் கொள்கின்றன போலும்!

வண்டுவந்து சொல்லும்வரை தங்கள் வயதே அறியாதிருக்கும் மலர்கள்.. அவள் வரும்வரை தாங்களே அழகென்ற புளகத்தில் ஆடுகின்றன.

அவள் முகம் கண்ட பிறகு நாணத்தில் சிரிப்பை இலைகளுக்குள் மறைத்துச் சிறுமைப்படப் போகின்றன.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான்.

5.10.

அவள் வருகிறாள் என்பது அங்கு திடீர்ப் பரபரப்புக்குள்ளான தென்றலின் அசைவில் தெரிந்தது.

தன்னிடம் உண்டான பதற்றத்தை உணர்ந்த அவன், அது அந்தச் சூழலிலும் தோன்றியிருப்பதாக எண்ணினான்.

தூரத்தில் அவள் அசைவு தெரிந்தது.

அதிவேக ரயில் ஒன்று அவனுக்குள் கடந்தது.

அது சென்ற தண்டவாளமென நெஞ்சு அதிர்ந்தது,

இதயம் அவளை வரவேற்க... மார்புக் கூட்டைப் பிய்த்து வெளியேறிப் பாய்ந்து சென்றது போலும்!

இதோ சமீபத்தில் வந்துவிட்டாள்!

வீடு திரும்பும் தந்தையை வரவேற்க விரைந்தோடிச் செல்லும் குழந்தையென.. அவனிடமிருந்து கழன்று சென்ற இதயத்தை அவள் கைக்குள் பொத்தி வருவாளா? இல்லை, கூந்தலுக்குள் செருகி வைத்திருப்பாளா? அல்லது வளைந்த அவள் இடுப்புக் குழிக்குள் விழுந்துகிடக்கிறதா?

தென்றல், மலர்கள், கதிர்கள் எல்லாம் வெட்கத்தில் மறைந்து கொள்ள-

பூங்காவும், தெருவும் வாகனங்களும் இன்ன பிறவும்மறைந்து... பூமி முழுமைக்கும் அவளே அவளும் அவள் சிரிப்புமாக வந்து கொண்டிருந்தாள்.

கூந்தல் அசைய, கைகள் அசைய, மார்பசைய, அதன் பாரம் தாங்காது மருங்கசைய, மலரிதழ்களுக்கு சிறு காயமேனும் செய்துவிடாதபடி அதன்மீது நடக்கின்றதென்றலென நடந்து வந்தாள்.

அங்கங்களின் அசைவில் தோற்றது கவிதை மொழி.

பின்புறக் குன்றுகளில் மன்மதச் சாட்டையாய் நீண்டு சரிந்து அசைந்தபடி இருந்த கூந்தல் அங்கே உரச உரச-

அவன் மனக் காடுகளில் தீப்பிடித்து எரிந்தது.

அவள் வருகையின் வாசனை-

அவன் புலன்களை அரித்து அனல் வெள்ளம் பாயவிட்டது.

இமைச் சிறகடிப்பு தெரியும் தூரத்தில் இருந்தாள். அவள் விழியீர்ப்பு விசைக்குள் இவன் மொத்தமாய்ச் சென்று மோதினான்,

சிதறினான்,

தன்னைக் கூட்டி அள்ளிக் கொண்டு அவள் பின்னழகில் ஏறினான்.

ஈரடிக் கவிதைகளுக்கு



இசையமைத்தபடி அவள் கால் கொலுசுகள்!

பாதச் சுவடுகளில் பார்வையை ஓடவிட்டான்,

அந்தோ பரிதாபம்!

ஒவ்வொரு சுவட்டிலும் உருண்டு துடித்தபடி அவன் இதய நகல்கள்!

அவற்றையும் அள்ளிச் சேர்த்து அவன் நெஞ்சுக்குள் அடக்கிக் கொண்டு, முன்னால் அமர்ந்தான்,

பருவத்தின் விளம்பரப் பலகையாய் முன் அசைந்த அழகுகளில் பார்வையைச் சறுக்கவிட்டான்.

மீண்டும் மீண்டும் முன்தானையென வழுக்கியது பார்வை!

இடைவரை வழிந்த பார்வையைப் பிடிவாதமாய்த் திரும்ப மலையேற்றினான்.

அவன் பார்வையின் கரணமடிப்புகளைக் கண்டு கொண்ட அவள் தன் விழிகளில் கண்டிப்பை எழுதினாள்,

நடுங்கியது நெஞ்சு.

உயிருண்ணும் கண்கள் இவன் உடல் துளைத்து நின்றது.

கோடைச் சூரியனும் குளிர் இரவின் நிலவுமென மாறிமாறிக் காணும் அவள் கண்களினைப் பார்த்தபடி இவனிருந்தான்.

இவன் பார்வையை மேலெடுத்துத் தன் பார்வைக்குள் கட்டி வைத்துக் கொண்டதில் அவள் வெற்றி பெற்றாள்.

தேனுக்குள் விழுந்த மனமாக மூழ்கித் திளைத்து, வெளியேறவும் முடியாமல் அவள் கண்களினுள்ளேயே மீள முடியாமல் சிக்கி, அந்த இனிப்பிலும் போதையிலும் முச்சு முட்டப் புரண்டு புரண்டு திணறினான்.
பெருமேகங்கள் திரண்டு இவனுள் பிரிய மழை பொழிந்தன!

அவள் கண்களிலிருந்து மலர்கள் புதிது புதிதாகப் பூத்துவருவதாகத் தோன்றியது.

அழகிய மலர்க்காட்டினுள் நுழைந்த திகைப்பும் பெரு மகிழ்ச்சியும் பொங்கியது.

தோட்டத்து மலர்களை அல்லவா ஆண்டவனின் குழந்தைகள் என்றும், அழகின் தூதுவர்கள் என்றும் மயங்கிக் கிடந்தோம்.

அழகெனும் கவிஞன் எழுதிய கவிதைகளாய் பூக்களை மட்டுமே கண்டு வியக்கும் மனிதரையெல்லாம் இவள் கண்களை வந்து காணும்படி சொல்ல வேண்டும்.

இவள் கண்களின் வழியே காணாமல் போய், மீண்டும் பூக்களிடையே தம்மைப் புதுப்பிக்கும் அனுபவத்தை அவர்களும் உணர்வர்.

மலர்காணின் மையாத்தி
நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

(குறள்: 1112)



## சிந்தியா பதில்கள்

★ **சமீபத்தில் என்ன படித்தீர்கள்?**

எம்.காமில் ஹலீம்தீன், கல்ஹின்னை.

*"ஏவாளாகி, ஆதித்தாயாகி, அரக்கியாகி, ஆளுபவன் சொத்தாகி, அடிமையாகி, லட்சுமி-சரஸ்வதியாகி, காளியாகி..-பெண் இந்த நூற்றாண்டில்தான் மனுஷியாக்கப்பட்டிருக்கிறாள்" என்று சொல்கிற இளைய கவிஞர் அ.வெண்ணிலா அவர்களின் கட்டுரையில் ஒரு குறிப்பு:*

*"வேலை' முடிந்ததும் கோப்பு மூடி வைத்துவிட்டுச் செல்கிற பணி அல்ல எழுத்து. உள் மூழ்கி, அமிழ்ந்து, கரைந்து, மேலெழுந்துவந்து, தன்னையே கொட்டுவதே எழுத்து. எழுத்தில் மூழ்கும் பெண்களை குடும்பம் அக்கறையுடன் கவனித்துக்கொள்ளும் நாளிலேயே வெளிப்படும் 'பெண்களிடமிருந்தும் உன்னத இலக்கியங்கள்!'*

★ **தேர்தல் முடிவுகள் எப்படி?**

இரா.கோணேஸ்வரன், நுவரெலியா.

*மக்களின் ஆதங்கம் சரியாகவே வெளிப்பட்டிருக்கிறது. என்ன, அடுத்த ஆறு மாதங்களின் பின் மீண்டும் உக்கிரமான போர் ஆரம்பிக்கவில்லையானால்... அப்போது நம் மக்களின் புத்திசாலித்தனத்தை நினைத்து நாமெல்லோருமே இறும்பூதெய்தலாம்.*

★ **நாட்டில் இனி உடனடியாக என்ன நடக்கும்?**

சி.பேரின்பன், கந்தளாய்-02.

*அரசு-புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளும், ஜனாதிபதி-பிரதமர் போரும், சில மாதங்களிலேயே இது அப்படியே உல்டாவாக (தலைகீழாக) மாறி விடாதிருக்க வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் மனங்கசிய வேண்டும்.*

★ **சிந்தியா, தீவிரமாக நம்புவது எதை?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

*'தீவிரமாக நம்புவதற்கு எதுவுமில்லை' என்பதில்தான் தீவிரமாக நம்பிக்கை கொள்ள வேண்டியிருக்கிறது.*

*அறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் பற்றி ஒரு கதை இருக்கிறது. எல்லாவற்றைப் பற்றியும் கேள்வி கேள் என்றவர் ரஸ்ஸல். உங்கள் கொள்கைகளுக்காகவே உயிரையும் துறப்பீர்களா என்று கேட்டபோது, 'மாட்டேன். என் கொள்கைகள் தவறாகவும் இருக்கலாமல்லவா!' என்று சொன்னவர். வாழ்நாள் முழுவதும் கற்றறிந்து, கடவுள் நம்பிக்கையையும் கைவிட்டவராக இருந்தார். அவரது மரணப்படுக்கையில், அருகிலிருந்த நண்பர் 'இப்போதாவது ஆண்டவனிடம் மன்னிப்புக் கேள்' என்று அவர் காதுல் கூறினார்.*

*கண்களைத் திறந்து பார்த்த ரஸ்ஸல், மெல்லச் சொன்னார்: "ஏ, கடவுளே!- கடவுள் என்று ஒருவர் இருந்தால்! பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மன்னிப்புக் கேட்கிறான் பாவம் ஏதாவது செய்திருந்தால்! மன்னித்து விடுங்கள்-மன்னிப்பது சாத்தியமானால்!"*

*நமக்கெல்லாம் இத்தனை தெளிவோடு இறப்பது சாத்தியமில்லை. இன்னும் ஒரு நிமிடம் வாழ்ந்துவிட முடியாதா என்ற ஏக்கத்துடனேயே முடிந்துவிடப் போகிறது வாழ்க்கை.*

★ **என் அபிமான நடிகர் விஜய்யின் முகவரி, தொலைபேசி புதிதாக நடித்துக் கொண்டிருக்கும் படம் என்ன? எனக்குப் பதில் சொல்லாவிட்டால் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருப்பேன்... விடமாட்டேன்...**

எஸ்.பி.லக்குனா, வட்டக்கச்சி.

*கொண்ட கொள்கை மீது விடாத பற்றுறுதியை மெச்சினோம். இதோ பிடியுங்கள்! முகவரி: 64, காவேரித்தெரு, சாலிக்கிராமம், சென்னை 600 093. தொ.போ: 4726213. 'தமிழன்' படப்பிடிப்பு நடந்துவருகிறது. அதையடுத்து நடிக்கப் போவது 'யூத்'.*

★ **'பெப்சி உங்கள் சொய்ஸ்' ஆமாங்க, இல்லங்க ரசித்துப் பார்ப்பதுண்டா?**

துரை.சுரேன், மட்டக்களப்பு.

*அந்த இளிப்பு சளிச்சுப் போச்சுதுங்க.*



விஜய்-ரிச்சா (படம்: ஷாஜகான்)

★ **சிந்தியா! உலகிலேயே சிறந்த அழகி யார் என்று உங்கள் மனைவி கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்?**

கலைப்பிரியன் வேணு, பெரிய நீலாவணை.

*உண்மையைச் சொல்லி மனைவியைப் பகைத்துக் கொள்ளுமளவுக்கு முட்டாளில்லை நான்.*

★ **தினமுரசுக்கு சிறுகதை ஆக்கம் அனுப்புவது என்றால் ஏதும் முரசு அங்கத்துவம் பெற வேண்டுமா?**

ஆர்.கே.தீபன், பாண்டிருப்பு-01.

*தேவையில்லை. பிரசுரத்திற்கு ஏற்ற தரம் இருந்தால் போதும்.*

★ **மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றால், கணவன் அமைவது யார்கொடுத்த வரம்?**

பெ.கோகிலன், மேபீல்ட்.

*சாத்தான் என்று சொன்னால் ஒருவேளை பெண்களே கோபித்துக் கொள்வார்களோ என்னவோ...*

★ **பச்சோந்திகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

மனிவேல் ருத்ரா, செல்வகந்த.

*தேர்தலும் முடிந்து, மக்களின் தீர்ப்பும் தெரிந்த பிறகு உங்களுக்கு இந்தக் குசும்பு கூடாது.*

★ **பாலச்சந்தரின் 100வது படம்?**

எம்.எம்.றம்ஸியா, குருநாகல்.

*கடந்த 99 படங்களுக்கும் தானே வசனத்தையும் எழுதி வந்த பாலச்சந்தர், 100வது படத்துக்கு ஸ்ரீதர் படங்களின் நகைச்சுவைப் பகுதி எழுத்தாளர்களான கோபு-பாபுவை எழுத வைத்திருக்கிறார். படத்தில் சிரிப்புமில்லை, பாலச்சந்தருமில்லை.*

★ **எப்போதாவது வாசகர்களின் கேள்விகளை வாசிக்கும் போது கோபம் வந்ததுண்டா?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*கோபமா.. சாச்சாய்... தலையைப் பிய்த்துக் கொள்ளுமளவுக்கு குழப்பம்தான் எப்போதுமே!*

# மன்னாதி மன்னன் 85

## ஆட்டுக்கடாச் சண்டை

இராஜகுமாரன்

ஒரு சாதாரண கிளி தனக்கு விரோதமாகத் தீர்ப்பு வழங்கியதுடன் மட்டுமல்லாமல், தனக்கு பெரும் அவமானத்தையும் வேதனையையும் ஏற்படுத்தி விட்டதே என்று கோபப்பட்ட தாசி ரூபசௌந்தரி, அக்கிளியைக் கொன்று கறிசமைத்து அதன் தலையைக் கடித்துச் சாப்பிடப்போவதாக சபதம் இட்டாள். ஆனால் ரூபசௌந்தரியின் சமயற்காரியை இம்சித்துவிட்டு கிளி பறந்தோடிவிட்டது.

ரூபசௌந்தரி போட்ட சபதத்திற்கு எதிராக கிளியும் மறுசபதம் இட்டதும் ரூபசௌந்தரியின் தலையிலும் உடலிலும் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தவைத்து ஒரு கழுதையில் அவளை ஏற்றி வலம்வர வைக்கப்போவதாக கிளியின் சபதம் அமைந்திருந்தது. இறுதியில் ரூபசௌந்தரியின் சபதம் ஈடேறாமல் கிளியின் சபதமே ஈடேறியது. இதனால் அவமானத்தால் மனமுடைந்த தாசி ஆலயத்தின் முன்றிலில் வீழ்ந்து இறந்தாள்.

விக்கிரமாதித்த மன்னனின் காடாறு மாதம் என்ற காலக்கெடு முடிவடைந்து விட்டமையினால் அவர் தனது நாடான உஜ்ஜயினி மாகாளிப்பட்டணம், திரும்பவேண்டிய நாளாகிவிட்டது. தாசிரூபசௌந்தரி கூண்டோடு கைலாயம் போகிறாள். என்ற தகவல் அறிந்ததும், அதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று சந்தேகம் கொண்ட பட்டி தனது காவலருடன் சம்பவம் நடைபெறும் இடமான சிவன் கோயிலுக்கு வந்திருந்தார். ரூபசௌந்தரி இறந்ததும் அமைச்சர் பட்டி அங்கு திரண்டு நின்ற கூட்டத்தில் ஒருவராக நிற்பதைக் கண்ட கிளியுருவிலிருந்த மன்னர் விக்கிரமாதித்தன் பறந்து வந்து பட்டியின் தோளில் அமர்ந்து கொண்டார். கிளியின் உருவில் வந்திருப்பது விக்கிரமாதித்த



மன்னரே என்பதை அறிந்த பட்டியும், கிளியை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார். பின்னர் அனைவரும் உஜ்ஜயனி மாகாளி பட்டணத்தை அடைந்தனர். அம்பாள் ஆலயத்தில் அம்பாளைத் தரிசித்து விட்டு அரண்மனை சென்றனர். போலி விக்கிரமாதித்தனாக அரண்மனையில் உலாவரும் விஜயனின் கண்களுக்கு கிளிபட்டுவிடாமல் அமைச்சர் பட்டி எச்சரிக்கையாக இருந்தார்.

மன்னர் விக்கிரமாதித்தனுடைய உயிருடன் நடமாடும் விஜயனுடைய போலிவேடத்தைக் கலைத்து, அந்த உடலுக்குள் விக்கிரமாதித்தனுடைய உயிரை எவ்வாறு புகுத்துவது என்பதை இட்டு இருவரும் ஆலோசித்தனர். ஒரு முடிவுக்கு வந்த பட்டி, அரண்மனைக்கும் அந்தப்புரத்திற்கும் இடையில் செல்லும் பிரதான பாதையில் ஆட்டுக் கடாச் சண்டை ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார். அந்தப்புரத்து ஏவல் பெண்களை அழைத்து, அடுத்தநாள் காலை தானும் போலி விக்கிரமாதித்தனும் அரசவையில் இருக்கின்ற நேரம் வந்து, அந்தப்புரத்து அரசிகள் தங்கள் பன்னிரண்டு மாத நோன்புக்காலம் அன்றுடன் முடிவடைவதாகவும், தடை ஏதும் இல்லாமல் அரசர் அந்தப்புரம் வரலாமெனவும் தெரிவிக்கும்படி கூறினார்.

அரசர் அந்தப்புரம் வருவதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்டுக்கடாச் சண்டையில் அரசரின் சார்பாக மோதும் கடாவும் அரசியர்களுக்கான கடாவும் மோதுவதைப் பார்த்துவிட்டுத்தான் அரசர் அந்தப்புரம் வரவேண்டும். இந்தச் சண்டையில் அரசருக்கான ஆட்டுக்கடா வெற்றி பெற்றால் மட்டுமே அரசர் மேற்கொண்டு அந்தப்புரம் வரலாம். அவ்வாறில்லாமல் அரசிகளுக்குரிய கடா வெல்லுமானால் அரசிகள் மேலும் பன்னிரண்டு மாதங்கள் நோன்பிருக்க வேண்டி வரும் என்று கூற வேண்டும் என்று அந்தப்புரத்து ஏவல் மாதரிடம் பட்டி கூறினார்.

மறுநாட்காலை அரசவை கூடியதும் அந்தப்புரத்து ஏவலாளப் பெண்கள் அங்கு வந்து முதல் நாளன்று அமைச்சர் பட்டி கூறியவற்றைச் சொன்னார்கள். இதற்கிணங்க போலி விக்கிரமாதித்தனும் அமைச்சர் பட்டியும் ஆட்டுக்கடாச் சண்டையைப் பார்க்கப் புறப்பட்டனர்.

ஆட்டுக் கடாச் சண்டையைப் பார்க்க ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். அரசர் மக்கள் கூட்டத்தினருடன் நின்று ஆட்டுக் கடாச் சண்டை பார்க்க வேண்டியிருந்தமையினால் மன்னரும் அமைச்சரும் சாதாரண மக்கள் போல் தங்கள் வேடத்தை மாற்றிக் கொண்டு போயிருந்தனர்.

கடாச் சண்டை தொடங்கியது. இரு கடாக்களும் மும்முரமாக மோதின. சற்று நேரத்துக்கெல்லாம் அரசரின் கட்சிக்காக நியமிக்கப்பட்டிருந்த கடா களைப்படைந்தது. இருப்பினும் கூடியிருந்த கூட்டத்தினர் உற்சாகம் கொடுத்தமையினால் சற்று நேரம் ஒய்வாக நின்றது. பின்னர் மீண்டும் மோதத் தொடங்கியது. இருப்பினும் அந்தப்புரத்துப் பெண்கள் கட்சிக்காக மோதிக் கொண்டிருந்த ஆட்டுக்கடாவின் உக்கிரமான மோதலைத் தாங்கிக் கொள்ள அரசர் கட்சிக் கடாவால் முடியவில்லை. இறுதியில் களைத்து வீழ்ந்து மடிந்தது.

அரசர் சார்பாகப் போட்டி போட்ட கடா வீழ்ந்து இறந்ததும் அந்தப்புரத்து அரசிகளால் அனுப்பப்பட்டிருந்த பெண்கள் கூட்டத்தினர் அரசரைக் கேலி செய்யத் தொடங்கினார்கள். இதனை போலி விக்கிரமாதித்தனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன்னுடைய வேடத்தைக் கலைக்கவும் முடியவில்லை.

பட்டியின் காதுக்குள் "அரசருக்கு இத்தகைய அவமானம் ஏற்படுவது நியாயமில்லை; மானத்தைக் காப்பாற்றுவதற்காக நானே ஆட்டுக்கடாவின் கூட்டுக்குள் என் உயிரைப் புகுத்தி பெண்கள் கட்சிக் கடாமீது பாய்ந்து அதனை வீழ்த்தி வெற்றி பெறப் போகிறேன். எனவே இந்த உடலுக்கு எதுவும் நேர்ந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டு தன்னுடைய உயிரை இறந்துகிடந்த கடாவின் உடலுக்குள் புகுத்தினான் விஜயன். எழுந்து பெண்கள் கட்சிக்குரிய ஆட்டுக்கடாவுடன் மோதச் சென்றான்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பட்டியும் கிளி உருவிலிருந்த மன்னர் விக்கிரமாதித்தனும் செயலில் இறங்கினர். கிளியினுடலிலிருந்த உயிரை உயிரற்றுக்கிடந்த உண்மையான விக்கிரமாதித்தனுடைய உடலுக்குள் நுழைத்தார். உண்மையான விக்கிரமாதித்தன் எழுந்ததும், விஜயனின் உயிருடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த கடாவைப் பிடித்து அதனைக் கண்ட துண்டமாக வெட்டி வீசினர்.

கடாவின் உடலிலிருந்த உயிர் வெளியேறி தான் புகுந்திருந்த மன்னர் விக்கிரமாதித்தனுடைய உடலைத் தேடியது. அதனுள் உண்மையான விக்கிரமாதித்த மன்னன் தன் உயிரைப் புகுத்தி விட்டதைக்கண்டு திகைத்து, தனது பேராசையால் ஏற்பட்ட அநர்த்தம் முடிந்து விட்டதை அறிந்து ஆவி உருவிலேயே மறைந்து போனது.

மன்னர் விக்கிரமாதித்தனும் பட்டியும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவ்விடத்திலிருந்து வெளியேறி நேராக உஜ்ஜயனி மாகாளி தேவியின் ஆலயத்தை அடைந்து உரிய பிராயச்சித்தங்களை நடத்தி பூசை பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு அரண்மனையை அடைந்தனர்.

போஜராஜனுடைய அரண்மனையிலிருந்த விக்கிரமாதித்த மாமன்னரின் அரியாசனத்தின் எட்டாவது படியிலிருந்த சௌந்தரவல்லி பதுமை, பல உபகதைகளடங்கிய இக்கதையைக் கூறி முடித்தபோது பொழுது விடிந்து பல நாழிகள் கடந்து விட்டன. அத்தனை நேரமும் நின்ற நிலையிலிருந்த போஜராஜனிடம் கதைகூறி முடித்த சௌந்தரவல்லி பதுமை, "போஜ மன்னரே! இத்தனை திறமையும் ஆற்றலும் பராக்கிரமும் கொண்டவிக்கிரமாதித்த மன்னனுடைய ஆற்றலில் ஒரு சிறிதளவேனும் தங்களிடமிருக்குமானால், தாங்கள் மேற்கொண்டு அரியாசனத்தில் ஏறி அமரும் தங்கள் முயற்சியைத் தொடரலாம்!" என்றது.

நன்றாகக் களைப்படைந்த நிலையிலிருந்த போஜராஜன் அரியாசனத்தை ஏக்கத்துடன் பார்த்து பெருமூச்சு விட்டு தனது அரண்மனை திரும்பினார்.

அன்று முழுவதும் ஒய்வெடுத்துக் கொண்ட போஜராஜன் அடுத்த நாட்காலையில் உதயத்துக்கு முன்னர் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டார். பின்னர் தனது உடைகளை அணிந்து கொண்டு தன்து பரிவாரங்கள் புடை சூழ, விக்கிரமாதித்தனின் சிம்மாசனம் வைக்கப் பட்டிருந்த மண்டபத்தை அடைந்து அரியனையை மரியாதையுடன் முறைப்படி வணங்கி விட்டு ஒவ்வொரு படியாக ஏறினார்.

எட்டாவது படிவரை ஏறிய போஜமன்னரை ஒன்பதாவது படியில் நின்றிருந்த நவரத்தின வல்லிப் பதுமை வழிமறித்தது. "போஜராஜனே! அதிபராக்கிரமசாலியான எமது மாமன்னரான விக்கிரமாதித்தன் அமர்ந்து பரிபாலனம் செய்த இந்த அரியாசனத்தில் அமரவிரும்பும் தங்களிடம், அந்த மாமன்னரிடம் இருந்த ஆற்றலில் சிறிதளவேனும் இருக்கிறதா என்பதை நான் கூறப் போகும் கதையின் மூலம் சீர் தூக்கிப் பார்த்துவிட்டு உங்கள் முயற்சியைத் தொடரலாம்," என்று கூறியது.

(தொடரும்)

## விடுமுறை

இராணுவத்திலிருந்த ஒரு சிப்பாய் தன் மேலதிகாரியான மேஜர்கிட்ட வந்து, முறைப்படி சல்யூட் அடித்து விரைப்பா நின்னான்.

மேஜரும் பதிலுக்கு சல்யூட் அடிச்சுட்டு "என்ன?"ன்னு மிடுக்காகக் கேட்டாரு.

"என் மனைவிக்கு இது பிள்ளைப்பேறு காலம். இச்சமயம் நான் அவளுடன் இருந்தால், அவளுக்கு மிகவும் தைரியமாக இருக்கும். எனக்கு ஒரு மாத விடுமுறை வேண்டும்"னான் சிப்பாய்.

"உன் மனைவி எனக்கு எழுதிய கடிதத்தில், 'தனக்கு பிரசவ சமயத்தில் உதவ அவளுடைய தாயாரும், தம்பியும் வந்திருப்பதாகவும், ஆகவே உனக்கு விடுமுறை கொடுத்து அனுப்ப வேண்டாம் என்று எழுதியிருக்கிறார்" என்றார் மேஜர்.

மண்டை காய்ந்த சிப்பாய், மேஜரிடம், நம் படைப்பிரிவில் இரண்டு முழுப்பொய்யர்கள் இருக்கிறார்கள். ஒருவன் நான். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை"ன்னு விரைப்பா ஒரு சல்யூட் அடிச்சிட்டு நகர்ந்தானாம்.

## மன்னிப்பு

தனக்காகவும், தகப்பன் உதவியற்ற தனது பதின்மூன்று குழந்தைகளுக்காகவும் ஒரு பெண் நிதியுதவி கேட்டு, அரசாங்கத்தின் சமூக நல அலுவலகத்துக்கு விண்ணப்பித்தாள்.

அதிகாரி அவளுடைய ரிக்கார்டுகளைப் பார்க்கப் பார்க்க குழப்பம் அடைஞ்சாரு.

"அம்மணி, ஒரு விஷயம் எனக்குப் புரியவே மாட்டேன்ங்கிறது"ன்னாரு.

"என்ன?"

"உங்கள் கணவர் உங்களைக் கைவிட்டுவிட்டுச் சென்று 10 வருடங்களுக்கு மேலாகிறது. ஆனாலும் உங்களுடைய 8 குழந்தைகள் 10 வயசுக்கு உட்பட்டவையாக இருக்கின்றன... இது எப்படி?"

அந்தப் பெண் ரொம்ப அனாயசமாக,"ரொம்ப சிம்பிள்சார். 10 வருடத்துக்கு முன் ஓடிப் போன என் கணவர் திரும்பி வந்து என்னிடம் மன்னிப்பு கேட்டார். நான் பெருந்தன்மையாக மன்னித்து எல்லா குழந்தைகளுக்கும் தகப்பனாக அவரை நியமித்து விட்டேன். அதுக்குப் பின் அவர் ஓடிவிட்டார். அதனால உங்கள் உதவி தேவை"ன்னு சொல்ல... தலைசுற்றிப் போச்சாம் அதிகாரிக்கு.

## பறந்துவிட்டாள்

ஒரு சர்தார்ஜி வெளியூர் போனாரு. அங்கே தன்னோட வேலைகளை முடிச்சுட்டவருக்கு பலான மூடு வந்துருச்சு. உடனே அது சம்பந்தப்பட்ட ஒரு விடுதிக்கு போனாரு.

அங்கே இருந்த அந்த விடுதியை நடத்தற வயதான பெண், சர்தார்ஜியை வரவேற்று உட்கார வச்சா.

ஆனா சர்தார்ஜி போன நேரத்துல அங்கே ஒரு பெண்கூட இல்லை. இருந்தாலும், சர்தார்ஜியை எப்படியாவது ஏமாத்தி பணம் வாங்கிடணும்னு நினைச்ச அந்த விடுதிக்கார வயசான பொம்பளை, சார்தார்ஜியைப் பார்த்து, "ஒரு நிமிடம் இருங்கள். நான் ரூமிற்குள் சென்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வருகிறேன்"னு சொல்லிட்டு ரூமிற்குள்ள போனாள்.

உள்ளே போனவ தன்கிட்ட வச்சிருந்த பெண் போல் உருவம் கொண்ட பலூன் பொம்மையில காத்தடிச்சு... அதை ஒரு நிஜமான பெண் மாதிரி உப்பவச்சு... கட்டில்ல குப்புறப்படுக்க வச்சுட்டு... வெளியே வந்து சர்தார்ஜிகிட்ட பணத்தை வாங்கிட்டு, 'அவ கொஞ்சம் கூச்சசுபாவம். பேசமாட்டா. மத்தபடி ஓ.கே.'ன்னு சொல்லி ரூமுக்குள்ள அனுப்பி வச்சா!

உள்ளேபோன சர்தார்ஜி, அஞ்சே நிமிஷத்துல சோகமா திரும்பி வெளியே வந்தாரு...

இதைப்பார்த்த அந்த வயதான பெண், சின்ன அதிர்ச்சியோட, "என்ன இவ்வளவு சீக்கிரம் வெளியே வந்து விட்டீர்கள்... ஏதாவது பிரச்சனையா?"ன்னு கேட்டாள்.

அதுக்கு சர்தார்ஜி, "பிரச்சனை ஒன்றும் இல்லை. அந்த கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த பெண்ணின் பின்புறம் மிகவும் அழகாக இருந்தது. அதனால் ஆசையாக தடவிப்பார்த்து அழுத்தி ஒரு கிள்ளுகிள்ளினேன். உடனே அந்தப் பெண் கோபித்து உரத்த சத்தத்துடன் வெடித்துப் பறந்து விட்டாள்.

## புரியவில்லை

மேல் நாட்டுல பல மாடிகள் கொண்ட ஒரு ஓட்டல். அதுல் வரவேற்பாளரா இருந்தா ஒரு அழகான இளம்பெண்,

திடீர்னு அவளுக்கு 10-வது மாடியிலிருந்து ஓர் அவசர அழைப்பு வந்தது. "உடனே, என் அறைக்கு வாருங்கள். முக்கிய விஷயம்"னது குரல்.

அந்தப் பெண், வாடிக்கையாளரின் அழைப்புப்படி என்னவோ ஏதோன்னு பத்தாவது மாடிக்குப் போனா.

அந்த அறையில் இருந்த ஆசாமி, அறைக்குள் பெண் நுழைந்ததும், கதவை உள் தாளிட்டுவிட்டு, அவளைபற்றி... ஆடைகளைக் களைந்து... இப்படியாக தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு அவளை வெளியே தள்ளிவிட்டு விட்டான்.

அவ இந்த சம்பவத்தை தன் தோழி ஒருத்திகிட்ட ஆச்சர்யமா சொன்னாள்.


"ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புரியவே இல்லையடி" ஓட்டல் பெண் சொன்னாள்.

"என்ன விஷயம்?" தோழி கேட்டாள்.

"அந்த பத்தாவது மாடி ஆசாமி என்னை எதற்காக அழைத்தான்னு கடைசிவரை அவன் என்னிடம் சொல்லவே இல்லை." "எனக்கும் புரியலை"ன்னு சொன்னாளாம் தோழி.



"பத்திரிகை ஆளைக் கல்யாணம் பண்ணிட்டியே எப்படி?"
"பேட்டி நல்லா எடுக்கிறாரு. பிரிண்டிங்தான் சரியில்லை!"



"ஐயோ டாக்டர்! சீக்கிரம் வாங்க. என் புருஷன் வயாக்ரா மாத்திரை விழுங்கும்போது, தொண்டையில சிக்கிக்கிச்சு..."
"அப்படியா? இப்போது எந்த கண்டிஷன்ல இருக்கு?"
"அவரோட கழுத்து விறைப்பா நிக்குது டாக்டர்!"




## பாம்புக் கறி



பார்த்த பார்வையில் பாம்புக்கறி என்று புரிந்திருக்கும். நல்ல சதையுடன் நீளமாக வளர்ந்த பாம்பை பிடித்துவெட்டி சுவையான நடுப்பகுதியை கறிசமைத்து வைத்திருக்கிறார்கள். கொரியாவிலேயே அதிகப்படியான பாம்புக்கறிப் பிரியர்கள் இருக்கிறார்கள். ஏனைய தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்த உணவு வகைக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. ஒரு பாம்பு சூப் 8 முதல் 12 டாலர்கள் வரை விற்கப்படுகின்றது. சில வகை பாம்புகளினால் தயாரிக்கப்பட்ட சூப் இதைவிட விலை அதிகம். படத்தில் இருப்பது ஹொங்கொங் நாட்டு உணவகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பாம்புக் கறித்தட்டு.


## பயணம்






சீன ஜப்பான் எல்லையில் உள்ள ஒரு நிலப்பரப்பில் பொதுமக்கள் பயணத்துக்காக பயன்படுத்தும் வித்தியாசமான வாகனம்தான் இது. இங்கே தங்கியிருப்பது மழைநீர் அல்ல. இந்தப் பகுதியில் பல கிலோ மீட்டர் தூரத்துக்கு வற்றாத, வடிந்தோடாத நீர் இப்படி பரந்துகிடக்கும். இரண்டு அங்குலம் முதல் ஒரு அடி உயரம் வரை இருக்கும் இவ்வாறான பிரதேசங்களை கடந்து செல்ல மாட்டு வண்டியில் சில்லுகளை பொருத்தி சொகுசு வாகனம் அமைத்திருக்கிறார்கள். செலவில்லாத பயணம்!

## களியாட்டம்



## அலங்காரம்



மலர்களோடு இருக்கும் இந்த மங்கை சிவப்பு ரோஜாக்களின் நிறத்தில் தனது கூந்தலை அழகு படுத்திக் கொண்டு இவ்வாறு காட்சி தருவது இத்தாலி நாட்டின் ரோம் நகரில் நடைபெற்ற மாடல் அழகிகளின் சிகை அலங்கார கண்காட்சிக்காக தங்கள் கூந்தலை எப்படியெல்லாமோ பின்னி சுருட்டிக் கொண்டு வந்து பலரை தோற்கடித்து விட்டு முதலிடம் பெற்றார் இவர். தலை முடிக்கு கறுப்பு, பிரவுண் நிறங்களில் மாத்திரம் 'டை' போடும் காலம் போய்விட்டது!

## விருந்து



பிரான்ஸ் நாட்டு கட்டடக்கலை நிபுணர்களின் கைவண்ணம்தான் இது. முற்றிலும் கண்ணாடி மாளிகையாக அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் கட்டடம் பிரான்ஸ் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு மறக்க முடியாத ஒரு கேளிக்கைக் கூடம். பல மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம் உருக்குத் தூண்களால் எழுப்பப்பட்டு தடிப்பான கண்ணாடிகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களுக்கான விளையாட்டுத் திடல்கள், பெரியவர்களுக்கான சர்வாம்ச கேளிக்கைகளுடன் பல்வேறு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கும் இந்தக் கட்டடத்தின் ஒரு முனையில் இருந்து சமாராக மறு முனை வரையிலுமே பார்வையிடலாம். நத்தார் கால களியாட்ட நிகழ்ச்சிகளுக்கு தயாராகும் விளக்குகள் பொருத்தப்பட்ட கண்ணாடி மாளிகையையே காண்கிறீர்கள்.

இந்த ஜப்பானிய பாட்டிக்கு வயது ஆக 118 மட்டும்தான். நீண்ட நாள் வாழ்ந்ததற்காக மட்டுமன்றி இவரது சேவையையும் பாராட்டி கடந்த ஆண்டு ஜப்பானிய அரசு இவருக்கு கௌரவ விருது வழங்கியது. இந்த வயதில் பாட்டியால் சுறுசுறுப்பாக எழுந்து நடக்க முடியாவிட்டாலும் இவர் தன் இளவயதில் நாட்டுக்காக அரும்பணியாற்றியிருக்கிறார். கிராமப்புற வைத்தியசாலை ஒன்றில் தாதியாக தனது பணியை ஆரம்பித்த இவர் 1940களில் இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது ஜப்பானிய இராணுவத்தினருக்கு மருத்துவ சேவை புரிவதில் முன்னின்றவர். இதற்காக முன்னைய காலங்களிலும் பலமுறை இந்தப் பாட்டி பாராட்டப்பட்டிருக்கிறார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**லின்சி (Lindsey) 10.12.2001**

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த கிரேஸ்-அமிதா தம்பதிகளின் செல்வப்புதல்வி லின்சி தனது முதலாவது பிறந்த நாளை 10.12.2001 அன்று கனடாவில் Northyork இல் அமைந்துள்ள Bimika Hall இல் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பூட்டன், அப்பம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இயேசுவின் அருளால் சகல நலனும்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: கிரேஸ் (கனடா)
T.P No:- (905)281-1209



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச.16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.